Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select




NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆவணி மீ 31 உ சனிக்கிழமை 1410 ஷவ்வால் ஸபர்பிறை 15 (16-09-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 69

## வடக்கு, கிழக்கிலிருந்து இந்தியப்படை வெளியேறியபின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு?

### இதை முடிவு செய்வதில் இழுபறி நிலை!

### கூட்டறிக்கை தாமதமாக இதுவே காரணம்

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு: செப்டம்பர். 16

"வடக்கு, கிழக்குப் பகுதியிலிருந்து அமைதிப்படை வெளியேறிய பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதியில் உள்ள தமிழர்கள் மற்றும் தமிழ் குழுக்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு?"

இந்த விடயம் சம்பந்தமாக முடிவு செய்வதில் இலங்கை—இந்திய அரசுகளுக்கு இடையில் இழுபறி நிலை நிலவுவதாகவும்—

இதன் காரணமாகவே இரு நாடுகளும் இணைந்து வெளியிட இருக்கும் கூட்டறிக்கை மற்றும் அமைதிப்படை வெளியேறுவது சம்பந்தமான உடன்படிக்கை ஆகியவை வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுவருகிறது என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது,

கூட்டறிக்கையை அடுத்து வெளியிடப்படும் யுத்தநிறுத்தத்தை அமைதிப்படை முற்றாக வெளியேறிய பின்னரும் எல்லா தமிழ்க் குழுக்களும் கடைப்பிடிக்குமா என்பது குறித்து இந்தியத் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

இது குறித்து எல்லாத் தமிழ்குழுக்களும் பொதுவான அறிவிப்பு ஒன்றை விடுக்க வேண்டும் என இந்தியத் தரப்பில் வலியுறுத்தப் பட்டதாகவும் அறியவருகிறது.

இந்த விடயத்தில் இணக்க நிலை ஒன்றை உருவாக்குவதற்காக இலங்கை அதிகாரிகள் இந்திய அதிகாரிகளுடனும், பல்வேறு தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டு பேசிவருவதாக நேற்றுத் தெரியவந்தது: (உ-1)

### சடலம் புதைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 16

நேற்று முன்தினம் தொண்டைமானாறில் கரை ஒதுங்கிய ஆணின் சடலம் அன்றைய தினம் மாலை 6-00 மணியளவில் ஆலயச் செலவில் புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது:

சடலத்தில் எதுவித காயங்களும் இருக்கவில்லை என்றும், அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவரது சடலமாக இது இருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது:

அடையாளம் காணப்படாமலே சடலம் சந்நிதிக் கரையில் புதைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது; (உ-51)

### கொக்குவிலில் மோதல்!

கொக்குவில் அம்மன்வீதி—ரயில்வீதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று பிற்பகல் 4-45 மணியளவில், மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது:

சுமார் 15 நிமிடங்கள் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன: இச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது: சேதவிபரம் குறித்து; உர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை; (உ-69)

### 20 ஆயிரம் பாஸ்போர்ட்கள் மாதாந்தம் விநியோகம்!

கொழும்பு, செப்: 16

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் மாதம் தோறும் சராசரி 20 ஆயிரம் புதிய பாஸ்போர்ட்களை வழங்கி வருகிறது:

திணைக்கள ஆணையாளர் எம்: பி: இரத்தினபக்கா இத்தகவலை வெளியிட்டார்;

தினமும் சுமார் 2 ஆயிரம் பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் திணைக்களத்துக்கு கிடைத்து வருகின்றன;

இதேவேளை பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களில் சுமார் ஆயிரம் பேர் அவற்றைப் புதுப்பிப்பதற்காகத் தினமும் திணைக்களம் வருகின்றனர் என்று ஆணையாளர் சொன்னார்; (உ-எ)

### திருநெல்வேலியில் இளைஞர் சடலம்

திருநெல்வேலி சிவன்கோவிலுக்கருகே நேற்று இளைஞர் ஒருவரது சடலம் காணப்பட்டது:

சடலத்தில் அடிகாயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சடலத்திற்கு அருகே அட்டை ஒன்றும் காணப்பட்டது:

உயிரிழந்தவர் ஆனந்தராஜா (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளது:

### சடலங்கள் மீட்பு!

கண்டி மாவட்டத்தில் 18 பேரின் சடலங்களை பாதுகாப்புப் படையினர் கண்டெடுத்ததாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது; (உ-1)

### மாணவர்கள் விடுவிப்பு: வேலணை அல்லது யாழ்நகரில்

யாழ்ப்பாணம், செப்; 16

பயிற்சிக்கென அழைத்துச் செல்லப்பட்டவர்களில், சொந்த விருப்பத்தின் பேரில் படிப்பைத் தொடர விருப்பம் தெரிவிப்போர் நாளை ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்படுவர்:

அவர்களை வேலணையில் வைத்து விடுவிப்பதா அல் (4-ஆம் பக்கம் பார்க்க)

### ஜே. வி. பி.யுடன் இந்தியா பேச்சு நடத்துகின்றதா?

### கருத்துக் கூற அதிகாரி மறுப்பு

புதுடில்லி, செப். 16

மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) யுடன் இந்திய அரசு பேச்சுக்கள் நடத்துகின்றதா?

—இவ்வாறாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் குறித்து புதுடில்லியில் செய்தியாளர்கள் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவரை கடந்த வியாழன் கேட்டனர்: அப்பத்திரிகைச் செய்திகள் குறித்து கருத்துக்கூற அந்த அதிகாரி மறுத்துவிட்டார்:

### யாழ் — கொழும்பு ரயில் சேவை திங்கள் முதல் தினசரி நடைபெறும்

கொழும்பு, செப்: 16

கொழும்பு — யாழ்: ரயில் சேவை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தினசரி நடைபெறும்:

கொழும்பில் ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன:

தினசரி காலையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கும் யாழ்தேவி ரயில் சேவை நடைபெறும் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன:

வார இறுதியில் மட்டும் நடைபெற்று வந்த கொழும்பு—யாழ்; ரயில் சேவையை தினசரி நடத்தக்கூடியதாக விஸ்தரிக்குமாறு போக்குவரத்து அமைச்சருக்குப் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன;

ரயில் சேவை விடயம் குறித்து யாழ்: மாவட்ட எம்: பி.க்களான திரு: கே. நவரத்தினம், திரு: கே: பிரேமச்சந்திரன், மட்டக்களப்பு மாவட்ட எம். பி.க்களான திரு: பிரின்ஸ் காசிநாதர், திரு. சாம் தம்பிமுத்து. திரு: ஜி. கருணாகரன், வன்னி மாவட்ட எம்: பி: திரு: ராஜா குகனேஸ்வரன் ஆகி (4-ஆம் பக்கம் பார்க்க)

### கட்டைபறிச்சான் சம்பவம்; ஈ. ஜ. மு. விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், செப் 16

கட்டைபறிச்சானில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் குறித்து ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது:

அறிக்கையின் விவரம் வருமாறு:

கடந்த 13 ஆம் திகதி காலை 10 மணியளவில் கட்டைபறிச்சான் விபுலானந்த மகா வித்தியாலயத்திற்கு அருகில் நடைபெற்ற நேரடி மோதலில் ஐந்து அமைதி காக்கும் படையினர் மரணமடைந்ததை அடுத்து, பலியான ஒன்பது பொதுமக்களில் விபுலானந்த வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்குவர்: அத்துடன் பல மாணவர்களும் பொதுமக்களும்பலத்த காயமடைந்தனர்: இறந்தவர்களுள் எமது அமைப்பின் முன்னணித் தோழர் காளிராசாவும் ஒருவராவர்: இவரை ஈரோஸ் (4 ஆம் பக்கம் பார்க்க)

### செல்வச்சந்நிதியில் நேற்று திருடர்கள் கைவரிசை!

யாழ்ப்பாணம், செப். 16

செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தத் திருவிழா, பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் திரண்ட நிலையில், நேற்று மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது;

சாவடிகள், பறவைக்காவடிகள்; பஜனைப் பாடல்கள் ஆலயச் சூழலைப் பக்தி பூர்வமாக்கின,

இதேவேளை சனநெரிசலைப் பாவித்து திருடர்கள் தமது கைவரிசையையும் காட்டியிருப்பதாகத் தெரியவருகிறது:

சந்நிதியில் நேற்று மட்டும் ஏழுபவுண் எடையுள்ள தாலிக்கொடி ஒன்றையும்; பெறுமதிமிக்க ஐந்து சங்கிலிகளையும், இரு காப்புக்களையும், இருவரிடமிருந்து ரொக்கப்பணத்தையும் அபேஸ் செய்திருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது; (உ-51)

### குச்சவெளிப் பகுதியில் தொடர்ந்து சண்டை!

திருகோணமலை, செப்; 16

கும்புறுப்பிட்டி, குச்சவெளி காட்டுப் பகுதிகளில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது;

பலத்த வெடிச் சத்தங்களும் பீரங்கிப் படுச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன,

பெரும் எண்ணிக்கையான அமைதிப்படையினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.(உ-150)

### பாணந்துறை ஆற்றிலும் சடலங்கள்

கொழும்பு, செப்; 16

கடந்த செவ்வாய்க்கிழமை பாணந்துறை ஆற்றில் 13 சடலங்கள் மிதந்து வந்தன.

பாணந்துறை புதிய பாலத்தின் மீது நூற்றுக்கணக்கான மக்கள் கூடிநின்று சடலங்களை பார்த்தனர்;

கடந்த திங்கட்கிழமை 16 இளைஞர்களின் சடலங்கள் வத்தேகம, பிற்றிய பெற்றப் பஸ் நிலையத்திற்கு அருகில் கண்டெடுக்கப்பட்டன;

### நீர்வேலியில் நேற்று இடம்பெற்ற மோதல்!

யாழ்ப்பாணம், செப். 16

நீர்வேலிப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே நேற்றுக் காலை மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது:

இந்த மோதல் சம்பவத்தில் சிலர் உயிரிழந்ததாகவும்—

இடையில் சிக்கி வேறு சிலர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது:

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற — அச்சுவேலியைச் சேர்ந்த— சிவலிங்கம் ஜீவா (வயது 18 என்ற இளைஞர் யாழ்: ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்;

வாகனம் ஒன்று எரிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட் (4-ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
16 - 09 - 1989
ஆவணி 31 சனிக்கிழமை
நக்ஷத்திரம்: உத்தரட்டாதி
சுபநேரம்:
03-03 முதல் 04-33 வரை
ராகுகாலம்:
09-03 முதல் 10-33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### தமிழகம் வரும் ஈழத்தமிழருக்கு அகதிகள் அந்தஸ்து வழங்க முடிவு

இராமநாதபுரம், செப் 16

இலங்கையில் இருந்து மீண்டும் வரத்தொடங்கியிருக்கும் தமிழர்களை அகதிகளாகக் கணித்து உதவிகளை வழங்கும்படி இந்திய அரச புனர்வாழ்வு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது;

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு புனர்வாழ்வு இயக்குநர் திரு: ஆர்; வரதராஜுலு, இராமநாதபுரம் வருவாய்த்துறை (புனர்வாழ்வு) அதிகாரிக்கு தொலைபேசி மூலம் விடுத்த பணிப்புரையில், இராமேஸ்வரம் மற்றும் கரையோரப் பகுதிகளை வந்தடையும் இலங்கைத் தமிழர்களை அகதிகளாகப் பதிவு செய்து உதவி வழங்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்:

அகதிகளாக இராமேஸ்வரம் வரும் இலங்கைத் தமிழர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்படுவர்:

நாகப்பட்டினம், கோடிக்கரை ஆகிய இடங்களுக்கு வந்து சேருபவர்கள் கோட்டைப்பட்டினத்தில் தங்க வைக்கப்படுவர்:

தற்சமயம் 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 இலங்கைத் தமிழர் இராமேஸ்வரம் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்:

இயக்கங்களுக்கு இடையே மோதல் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக பேசாலையில் இருந்து தாங்கள் வந்ததாக இந்த அகதிகள் தெரிவித்தனர்; (உ-எ)

### சீனக்குடாவில் கண்ணி! 6 ஜவான்கள் உயிரிழந்தனர்!

திருகோணமலையில் சீனக்குடாவிற்கும் பாலம்பட்டாறுக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற பெரும் கண்ணிவெடிச் சம்பவத்தில் இந்திய அமைதிகாக்கும்படையைச் சேர்ந்த ஆறு ஜவான்கள் கொல்லப்பட்டனர்; பதினொரு ஜவான்கள் காயமடைந்தனர். (உ-எ-1)

உ

திருமணத் திருமுகம்

மணமகன் : திருநிறை செல்வன் ஈ. முகுந்தன்
மணமகள் : திருநிறை செல்வி ந. விமலாதேவி
இடம் : ஸ்ரீ முருகன் கோவில், லண்டன்
காலம் : சுக்கிலஞு ஆவணிமீ 31-ஆம் நாள் 16-09-1989 சனிக்கிழமை
சுபவேளை : காலை 10 00 மணிமுதல் 11-30வரை

உறவினர்கள், நண்பர்களுக்கு இத்தகவலை அன்புடன் அறியத்தருகின்றோம்;

திரு. திருமதி இ. ஈஸ்வரபாதம்
சம்பியன் லேன்,
கொக்குவில்.

திரு. செ. நவரட்ணம்
திருமதி கனகரட்ணம்
சேர்ச் ரோட்,
சங்கானை.

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடைவைப்பு ரக ஏற்ற அழகிய ஒறிஜினல் பென்டம் (Bantam) கோழி முட்டைகளும், வான் கோழி முட்டைகளும், வெள்ளடியன் கோழி முட்டைகளும், எல்லா வகையான குஞ்சுகளும் விற்பனைக்குண்டு; விஜயகர் றேடிங், K. அன்னலிங்கம், சலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்; (2331)

வெலோ சொலெக்ஸ் Bicycle, Bantom சேவல், முட்டைபோடும் கோழிகள் குஞ்சுகள், அடைமுட்டைகள் உண்டு: 249, பலாலி வீதி, கந்தர்மடம்; (2178)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மல்டேனா ரேடர் (புத்தகசாலை) இல:08 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்; (1551)

Honda Recondition C 70, C 50, C D 90, M D 90, Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு: அன்ரன் என்ரபிறைசஸ், 390, மெயின் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்: (2183)

தமிழ் ரெமிங்டன் Godret, மற்றும் ஆங்கிலம் Optima, Olivetti, Remington Standards, Typewriters விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Fudo 39/17, மின்சாரநிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3685)

குபாட்டா லாண்மாஸ்ரர் பெட்டி, கலப்பை, கியர் பொக்ஸ் ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல: 1 வாழ்வீதி, யாழ்ப்பாணம்; (2164)

நல்லஇன J C கேப்பை மாடு கன்று ஈன்று ஒருமாதம் 15 போத்தல் பால் கறக்கும்; 3 வயது விற்பனைக்கு உண்டு; தொடர்பு:ச.குணம், இல 400 கோயில் வீதி, நல்லூர். (2145)

பாவித்த அலுமாரிகள் உட்பட சகல வீட்டுத்தளபாடங்கள் Fridge Gas-Cooker, T. V. மற்றும், மின் உபகரணங்கள் பித்தளை, சில்வர் பொருட்கள் மற்றும் பல விற்பனைக்குண்டு. Supeka 343. பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். (2141)

### உடன் விற்பனைக்கு

தொழிற்சாலை அமைப்பதற்கு உகந்த வெல்டிங் Driller மற்றும் எல்லாப் பொருட்களும் விற்பனைக்குண்டு பார்வையிடும் நேரம் காலை 10 முதல் 12மணி வரை தொடர்பு 417, நாவலர் ரோட், ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்; (2347)

### காணி விற்பனைக்கு

உடுவில் ஆர்க்லேனில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணி கிணற்றுடனும் 10 அடி பாதையுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி மி நவரெட்ணம் இல: 19/2 காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (2173)

கோண்டாவில் டிப்போவிற்குப் பின்னால் (13) பதின்மூன்று பரப்புத் தோட்டக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விக்கம்மில் (பழுனுரி) 157, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். அல்லது முத்துக்குமாரு திருநாவுக்கரசு, சரவணை மேற்கு, வேலணை (2353)

மாவிட்டபுரத்தில் 12 பரப்பு வீட்டுக்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. Jaffna K K S. Main வீதியில் தொடர்பு யோகலிங்கம், 56/4, Peterson Lane, Wellewatte, (2366)

### கோழிக்குஞ்சு விற்பனை

Nallur Farm Centre Primaஇன Lohman பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள், Golden Comet பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர்; (2176)

தூய இன HYLINE சுறப்புப்பேட்டுக்குஞ்சு 18/ 9/ 89 உம் GOLDEN COMET பிறவுண்பேடு CHRISTOMBU புறொயிலர் 24/ 9/ 89உம் விநியோகிக்கப்படும்: பதிவுசெய்க யாழ்ப்பாண கால்நடை வளர்ப்போர் சங்கம் சுன்னாகம்கிளை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் காரியாலயம் ) சுன்னாகம்; (1940)

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள், சஞ்சிகைகள், வாங்கப்படும். விற்கப்படும்: தொடர்பு: Second hand Book House 13/6, ஸ்ரான்லி ரோட், (முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப்படிப்புக் கல்லூரி லேன்) யாழ்ப்பாணம்; (2354)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கும் கம்பனியில் கணக்குகள் பார்ப்பதற்கு வர்த்தகத் தொழிலில் விருப்பமுள்ள 25 வயதிற்கு மேற்பட்ட படித்த பெண்கள் தேவை: கல்வித்தராதரம் எதிர்பார்க்கும் சம்பளம் அடங்கிய முழுவிபரங்களுடன் 19 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்; 607, C/o உதயன்; (2358)

இனிப்புக் கொம்பனிக்கு பெண் வேலையாட்கள் தேவை: அனுபவமுள்ளவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும் தொடர்பு: No. 7 நிக்லஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்; (2154)

சிறிய சைவஉணவுக் கடையில் வேலை பார்க்க அனுபவம் உள்ள ஆள் தேவை. வயது 45க்கு மேல் உள்ளவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும். செல்வராசா இல: 4 செட்டித்தெரு லேன், நல்லூர்; (2174)

### மணமகன் தேவை

தென்புலோலியை பிறப்பிடமாக கொண்ட இந்துவேளாள குல 29 வயதுடைய தனியார் கம்பனியில் தொழில் பார்க்கும் பெண்ணுக்கு பெற்றோர் மணமகனை தேடுகின்றனர். மணமகனின் தொழில் சாதகம், படம், பெற்றோர், சகோதரர்களின் பெயர் முழு விபரங்களையும் முதற் கடிதத்திலேயே தெரிவிக்கவும். 606, C/o உதயன்; (2357)

### மணமக்கள்

யாழ்ப்பாண கத்தோலிக்க 22 வயது குருகுல மணப்பெண்ணுக்கு நோர்வேயில் படிக்க விரும்பும் மணமகன் தேவை. கனடாவால் வந்த 28, 30 வயது கத்தோலிக்க வேளாளர் மணமக்களுக்கு மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி யாழ்ப்பாணம்; (2181)

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து வேளாளர் 32 வயது B.com ஆசிரியருக்கும் 34 வயது வங்கி ஒபீசருக்கும் 37 வயது B A. ஆசிரியருக்கும் 35 வயது U K. எஞ்சினியருக்கும் கத்தோலிக்க வேளாள 38 வயது கிளார்க்கும் தேவை: மங்கள ஏஜென்சி, சொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2182)

### ஜோதிடம்

ராகு கேது மாற்றம் விலை ரூ 3 50 எங்கும் கிடைக்கும் இடப, சிங்க, துலா, கும்ப ராசிக்காரர்களுக்கு யோகங்கள் அதிகரிக்கும்: பதிப்பாசிரியர் R. சத்தியதாஸன் B A (cey) (ஆத்மஜோதி தத்துவஞானம்) காங்கேசன் துறை விநியோகஸ்தர் கவி பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்; (2348)

### TOEFL

Oct 28 Nob 18 Jan 13 Mar 10 May 12 பரீட்சைகளுக்கு மீட்டல் வகுப்பு நடைபெறுகின்றன தொடர்பு: S B. IYAR 12 வைமன் வீதி. (2171)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்களை வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப் பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்; (சி 3601)

### தபால் மூலம் கல்வி

ஆங்கிலம் பேச வாசிக்கவும் முழு இலக்கணத்துடன் பயிலவும் தபால் மூலம் பயிற்சிகள் நடைபெறுகின்றன; முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட நீள தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும்: இம்பீரியல் இன்ஸ்ரிரியூட்ஸ், 25, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்; (2359)

### G C. E O/L கணிதம்

5 மாதிரி வினாத்தாள்களும் 1988 வினாத்தாள் (விடைகளுடனும்) மயூரி வெளியீடு-4 ரூபா 13. 75 7 மாதிரி வினாத்தாள்கள் செய்கைகளுடன் மயூரி வெளியீடு-5 ரூபா 17. 50. பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, ஞானசுரபி, தர்க்காஸ்ரேஷனர்ஸ், மற்றும் புத்தகசாலைகள்; (1389)

### HONDA

புத்தம் புதிய Honda GD 100, C 90 மோட்டார் சைக்கிள்களுக்கும் பல விதமான ஜெனரேட்டர்களுக்கும் தொடர்பு கொள்ளவும், Masters: 16, 3Rd Cross Street, Jaffna (சி/3684)

### HOUSE FOR SALE

2 Bedroomed ground floor Flat In Colomdo - 5, with Marbled Barth and Pantry and Telephone Mrs M. A. Alagarajah, No. 18 Kachcheri Lane Jaffna. (2355)

## சரணடைந்தார்

வவுனியா, செப் 16

வவுனியாப் பகுதியில் ஜே. வி. பியைச் சேர்ந்த ஒருவர் சரண் அடைந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன;

இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த இவர் கடந்த புதன்கிழமை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்; (த-164)

விலை குறைவு! இருப்புக் குறைவு! தரம் நிறைவு! இன்றே நாடுங்கள்!

உங்கள் வசிப்பிடங்களை குளிர்மையாகவும் அழகாகவும் வைத்திருக்க

1. மூன்றே வருடங்களில் இளநீர் தரக்கூடிய செவ்விளநீர் நாற்றுக்கள்
2. ஆறே மாதங்களில் நிறைந்த பழங்களைத் தரக்கூடிய தேசி நாற்றுக்கள்
3. நல்ல இனக் கொய்யா நாற்றுக்கள்

நாட வேண்டிய முகவரி:

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
கலாசாலை வீதி.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

11-09-89 (இ-3664)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நா. நா. செல்லத்துரை**

(கோயில் குடியிருப்பு சாவகச்சேரி வீரபத்திரர் கோயில் முன்னாள் செயலாளர், உபதலைவர்)

தோற்றம்: 1914 - 12 - 03 மறைவு: 1988 - 09 - 27

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் திருமுகம் காணாமல் ஏங்குகின்றோம்! தேடுகின்றோம்!! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

பிரிவால் துயருறும்:
— குடும்பத்தினர்

கச்சாய் ரோட்,
சாவகச்சேரி; (2365)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**தணிகாசலம் ரவிச்சந்திரன்**
(கலாநிதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)
வல்வெட்டித்துறை
தோற்றம்: 24 - 09 - 1960
மறைவு: 03 - 08 - 1989

**சுந்தரமூர்த்தி உமாசங்கர்**
(சிவஸ்ரோர்ஸ் (பெருமகன்)
வல்வெட்டித்துறை;
தோற்றம்: 30 - 08 - 1966
மறைவு: 03 - 08 - 1989

இன்று 16. 09. 1989 சனிக்கிழமை அதிகாலை எமது வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் நண்பகல் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்;

இங்ஙனம் உங்கள் பிரிவால் வாடும்:
அன்பின் அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், [illegible] பெருமக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்:
[illegible] ஸ்ரீ கலாநிதி.

(2162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொலைத் தொடர்பு நிலையத்திற்கு (TELE - Communication SERVICE) மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய இயக்குனர்கள் தேவை; இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்;

No: 604
C/O உதயன்,
யாழ்ப்பாணம்;

(சி/3672)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. வல்லிபுரம் ஜெயசீலன்**
(குழந்தை)

தோற்றம்: 21 - 10 - 1967 மறைவு: 17 - 08 - 1989

உலகினில் நீயும் நல்ல உத்தமக் குழந்தையாக
ஊரெலாம் போற்றுமாறே உள்ளமே
மகிழ வைத்தாய்!
உலகினில் நிலையற்றோர்கள் உன்னையே கொன்றே -
வெம்மை
உள்ளமே நோகவைத்து உவப்பது கண்டனரோ!
உலகினில் மக்களுக்கும் உத்தமத் தமிழருக்கும்
உன்பணி வேண்டாமென்றே ஒரு நமன் காலன் உன்னை
உலகினில் வந்தேயந்த ஒன்புகழ் விண்ணைச் சேர்த்தான்
உன்பிரி வாலே விங்கே யூரெல்லாம் ஓலந்தானே!

(கவியாக்கம்: கணியன் புலவனூர்)

உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்;

ஓம் சாந்தி! சாந்தி!!

உமது பிரிவால் வாடும்:
அன்புத் தந்தையார், தாயார், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மற்றும் இருபாலையைச் சேர்ந்த ஐயா, அம்மா, சகோதரர்கள்;

முள்ளியவளை.
16 - 09 - 1989 (1946)

## 90 ஆம் நாள் நினைவலைகள்



**செல்வன் சண்முகம் உதயவர்மன்**
(பேபி)

(புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித விஞ்ஞான உயர்தர வகுப்பு மாணவன்)

மலர்வு: 27. 02. 1971 உதிர்வு: 19, 06. 1989

உதயவர்மனின் தினக் குறிப்பிலிருந்து......

எமது வாழ்க்கையில் சுகமாக அனுபவிக்கக் கூடிய காலம் மாணவப் பருவமே. படிக்க கஷ்டம் அடிக்கிறோம். பின் வாழ்க்கையில் கஷ்டம் அனுபவிப்பவர்களும் நாங்களே தற்போது இதற்காக சற்று கஷ்டப் பட்டால் பின் சுகமாக இருக்கலாம். அதற்காக படித்து பெரிய வேலைதான் செய்ய வேண்டிய அவசியமில்லை;

பாசமுள்ள மகனே நேசமுள்ள தம்பியே
பாதையில் விதி என்று எண்ணி - எங்கள்
பாசத்தை மறந்தியோ நெஞ்சு வெடிக்கும்
வேதனைத் தீயிலிருந்து மீள முடியாமல்
உதிரத்தை கண்ணீர் துளிகளால் சொரிந்து
துயருறும்:

அப்பா, அம்மா, அண்ணாமார்கள்;

73, பலாலி வீதி,
கந்தர்மடம்;
யாழ்ப்பாணம்;

"உமா வாசம்",
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(2169)



செல்வன் சதா வேல்மாறனின்

மிருதங்க அரங்கேற்றம்

இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 16-9-1989 சனிக்கிழமை பி. ப. 2 மணி

அனைவரும் திரண்டு வருக!

(சி/3341)



# SPOKEN ENGLISH

90 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க நவீன உளவியல் ரீதியில் கற்றுக் கொடுக்கப்படும். எம்மிடம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப் பயிற்சியின் தபால் மூலம் படித்து பயனடைந்துள்ளனர். ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பவர் எவ்வாறு இலகுவில் ஆங்கிலம் அதனை கற்றுக் கொள்ளலாம் எனும் துறையில் London Diploma பெற்றவரின் அனுசரணையுடனே பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**Bright Training Centre**
P. O, BOX 162
COLOMBO.

[சி/3621]



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

சண்முகநாதன் வேலாயுதப் பிள்ளை

தோற்றம்: 27-05-1932
மறைவு: 17-08-1989

இனிய உங்கள் நினைவுகளை என்றும் நெஞ்சில் சுமந்திருப்போம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்.

"ராஜகிரி"
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

(8179)


## மீனம்பாக்கம் குண்டு வெடிப்பு

# ஈழத் தமிழர் மூன்றுபேரும் பிணையில் செல்ல அனுமதி

சென்னை, செப் 16

மீனம்பாக்கம் விமான நிலையக்குண்டு வெடிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஐவரில் மூன்று எதிரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை சென்னை உயர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பயிற்சி விமானி சரவணபவன், விமானநிலைய பாதுகாப்புக் கான்ஸ்டபிள் சந்திரகுமார், மதுரை ஹொட்டல் உரிமையாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரே அந்த மூவருமாவர்.

சரவணபவனும் சந்திரகுமாரும் சென்னை நகரில் வசிக்க வேண்டும் என்றும் தினமும் இரகசியப் பொலீஸ் அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்று பணிக்கப்பட்டனர்.

பாலசுப்பிரமணியத்தை மதுரையிலே தங்கியிருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

மூவரும் தலா 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டனர். மூவரின் பாஸ்போர்ட்டுக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

மூன்று எதிரிகளும் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்திருப்பதை தொடர்ந்தே பிணையில் விடப்பட்டனர். (உ-எ)


# C. I. A. (ACCOUNTANCY)

## London June 1990 Exam

| | |
|---|---|
| Basic Accounting | — Mr. D. Gnanaseelan |
| Communication | — Mr. S. Narendiran |
| Business Adminstration | — Mr. S. Narendiran |
| Numeracy and Statistics | — Mr. S. Thilakakumar |
| Computer Applications in Accounting | — Mr. D. Gnanaseelan |

ஆரம்பம்: 18 - 09 - 1989

G.C.E (ord) Level தேற
இயலாதவர்களுக்கான வகுப்பு
இப்பயிற்சி நெறியின் மூலம்
C.I.M.A. (I.C.M.A) தேறவாய்ப்புண்டு

உங்கள் பதிவுகளுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
GROUP
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.

(சி/3656)



# சவூதிஅரேபியா பிரயாணம்

## SAPCO Royal Commission

இக்கொம்பனிக்கு கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு

| | | | |
|---|---|---|---|
| (1) | H/V Drivers (கனரக சாரதிகள்) | 3 வெற்றிடங்கள் | 800 SR |
| (2) | Genarator Operators ஜெனரேட்டர் (ஒப்பரேட்டர்) | 2 " | 700 SR |
| (3) | Gardeners (தோட்டக்காரர்கள்) | 20 " | 350 SR |
| (4) | Machanics (மெக்கானிக்) | 2 " | 700 SR |
| (5) | Electrical Technicians (மின் தொழில்நுட்பவியலாளர்) | 3 " | 1200 SR |
| (6) | Equipment Machanics (Dozer, Grane) | 4 " | 700 SR |
| (7) | Agricultural Engineers (விவசாய பொறியியலாளர்) | 2 " | 1500 SR |
| (8) | Janitors (சுத்திகரிப்பாளர்) | 12 " | 350 SR |
| (9) | Welders (வெல்டர்) | 2 " | 700 SR |
| (10) | English Tppist | 2 " | 800 SR |
| (11) | Dish Washers (பாத்திரங்கள் கழுவுபவர்கள்) | 5 " | 350 SR |
| (12) | Laundryman Helper (சலவைத் தொழிற்சாலை உதவியாளர்கள்) | 8 " | 350 SR |
| (13) | Construction Lobourer (கட்டிடத் தொழிலாளர்கள்) | 5 " | 400 SR |

இவற்றிற்கு நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**'M' THREE TRAVEL**

தலைமை அலுவலகம்:
இந்திர பவனம்,
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல. 1,2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/3676]


## துறட்டிப்பனை முத்துமாரி அம்மன்

யாழ்ப்பாணம், செப். 16

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரியம்மன் தேவஸ்தான நவோத்திர சகஷ்ர சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை நடைபெறும். (த)

## சதா சகாய மாதா திருவிழா

பருத்தித்துறை, செப். 16

துன்னாலை வடக்கு சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (க-118)

## பாப்பரசர் வாழ்த்து

அன்னை திரேஸா அம்மையார் விரைவில் சுகமடைய வேண்டும் என்று பரிசுத்த பாப்பாண்டவர் தந்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.

அன்னை திரேஸா, கசயினமாக கல்கத்தா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே. (எ)


# பதவி வெற்றிடங்கள்

1. தயாரிப்பு முகாமையாளர் (Project Manager)
2. குசினி முகாமையாளர்
3. சைவ உணவுச் சமையலாளர்கள்
4. குசினி உதவியாளர்கள்
5. கணக்காளர்கள்
6. பொது மெக்கானிக்ஸ்
7. களஞ்சியப் பொறுப்பாளர்கள்
8. களஞ்சிய உதவியாளர்கள்
9. காவலாளிகள்

உங்கள் முழுத்தரவுடன் (Bio-Data) தராதரம் (Qualification) ஆகியவைகளுடன் 30 - 09 - 1989 க்கு பிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

சம்பளம்:- தகுதியடிப்படையில் தேரில் முடிவு செய்யலாம்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

தலைவர்,
**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[சி-3664]



## ★ சவூதி அரேபியாவிற்கு ★

# உடனடி வேலைவாய்ப்புகள்

## Immediate Vacancies in Saudi Arabia

| | Category | Salary |
|---|---|---|
| 01. | Cost Accountant | — SR 1,600 |
| 02. | Corrective Maintenance Scheduller (Data) | — SR 800 |
| 03. | Recurring Maintenance Scheduller (Data) | — SR 800 |
| 04. | Work Control Receptionist A T B C | — SR 700 |
| 05. | Property Clerk | — SR 650 |
| 06. | Supply Clerk (Record) Administration | — SR 650 |
| 07. | Plumbers (House Holds) | -- SR 600 |
| 08. | Home Appliance Technician | — SR 700 |
| 09. | Welders | — SR 600 |
| 10. | Tin Smith Welders | — SR 600 |
| 11. | Aluminium Fabricator | — SR 600 |
| 12. | Photo Copy Machine Tech | — SR 800 |
| 13 | Lock Smith | — SR 650 |
| 14. | Heavy Technician | — SR 900 |
| 15. | Air Field Lighting Tech. | — SR 550 |
| 16 | Power Plant Operator | — SR 600 |
| 17. | H. V Industrial Electricial | — SR 750 |
| 18 | Diesel Mechanic (Big Diesel Generator) | — SR 700 |
| 19. | Lab Technician Sanitation Industrial instrumentation | — SR 700 |
| 20. | Electronic Diagram Mechanic Instrument | — SR 800 |
| 21. | Water Treatment Plant Operator | — SR 700 |
| 22. | Pest Control Technician | — SR 650 |
| 23. | Sewage Treatment Plant Operator | — SR 600 |
| 24. | A/C Technician | — SR 700 |
| 25. | Lab Technician | — SR 750 |
| 26. | Diesel Mechanic Cat White 6 Cylinder | — SR 700 |
| 27. | Plumber | — SR 600 |
| 28. | Car Mechanic | — SR 800 |
| 29. | Mechancical Engineer | — SR 1,700 |
| 30. | Electrical Engineer | — SR 1,700 |
| 31. | Driver | — SR 600 |
| 32. | Mason | — SR 600 |
| 33. | Carpenter | — SR 600 |
| 34. | Cleaners | — SR 400 |

**In Addition to the Above Salary Free food Allowance Would be Provided**

வயது 21 தொடக்கம் 48 வரை
அனுபவச் சான்றிதழ், 5 படம், பாஸ்போட்டுடன்

தொடர்பு கொள்ளவும்:

கடவுச் சீட்டுத்தந்து ஒரு மாத காலத்திற்குள் பயணம் செய்யலாம் [15 - 10 - 1989 க்கு முன் பயணம் செய்யலாம்]

யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு இடத்தில் உள்ளவர்கள் யாழ்ப்பாணம் வரக் கஷ்டம் என்றால் எங்கள் கொழும்பு தலைமை முகவர் நிலையத்தில் சந்திக்கலாம்.

# T V Travels & Tourist

**Brown Road** **Kokuvil**

தலைமையகம்:
**S. Thamilvanan** (THEVAN)
18, Ramakirishna Road, COLOMBO - 6
தொலைபேசி இலக்கம்: 583029

மற்றும் பணிப்பெண்கள் பின்வரும் நாட்டிற்குத் தேவை

★ Saudi Arabia ★ Kuwait ★ Dubai

[C-3683]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நவராத்திரி"

மில்க்வைற் சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள் 25 அனுப்பி வைப்போருக்கு, "சகலகலாவல்லிமாலை", "சரஸ்வதி ஸ்ரிக்கர்" அன்பளிப்பாகக் கிடைக்கும்.

-மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

16 - 09 - 1989 சனிக்கிழமை

"மில்க்வைற் செய்தி-"
இதழ் - 165

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி புதிய வெளியிடான மேற்படி "மில்க்வைற் செய்தி" இதழைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

-மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## சிக்கனம், சேமிப்பு, முதலீடு; இதனை எமது மக்கள் பழகவேண்டும்

### வங்கிப் பரிசளிப்பு விழாவில் புத்திமதி

யாழ்ப்பாணம், செப்: 16 சிக்கனம், சேமிப்பு முதலீடு ஆகிய மூன்றையும் எமது மக்கள் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

பணத்தைச் சேமிப்பதோடு மட்டும் நாம் நின்றுவிடக் கூடாது. அதனை முதலீடு செய்து அதன் மூலம் சிறு தொழிற்சாலைகளை ஆரம்பித்து பல பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். அதனால் பணத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புண்டாகும்.

யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திரு. பெரியதம்பி இவ்வாறு ஆலோசனை தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் பொன் விழா நிறைவை பொட்டி யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று நடைபெற்றது.

அந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே செல்வி பெரியதம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பரிசளிப்பு விழா வைபவம் நேற்று யாழ். ஆங்கில திருக்குடும்ப கன்னியர்மடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட முகாமையாளர் திரு க. கணேசமூர்த்தி தலைமை வகித்தார். கிளை முகாமையாளர், அதிகாரிகள் உட்பட மற்றும் பிரமுகர்களும், வாடிக்கையாளர்களும் சமுகமளித்திருந்தனர்.

செல்வி பெரியதம்பி தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:-

கலின் நாட்டு மக்கள் சேமிப்பை முதலீடு செய்து இன்று செல்வந்தர்களாக இருக்கிறார்கள்.

எமது மக்கள் சிக்கனமாக வாழப் பழகிக் கொண்டவர்கள் எனினும் இப்போது வெளிநாட்டுப் பணம் இலகுவாகக் கிடைப்பதால் அவர்கள் அதனை தற்போது திட்டமிட்டுச் செலவு செய்வதில்லை. எனவே மக்கள் பணத்தைத் திட்டமிட்டுச் செலவு செய்யவும், சிக்கனப்படுத்திய பணத்தைச் சேமிக்கவும், சேமிக்கும் பணத்தை முதலீடுகளில் போடவும் பழகுதல் வேண்டும்- என்றார்.

செயற்பாட்டு முகாமையாளர் திரு. எம். கனகரட்ணம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

இந்தக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கள் எழுதிய கட்டுரைகளைப் பார்க்கும் பொழுது இலங்கை வங்கியை தேசிய சொத்தாகவே அவர்கள் கருதுகிறார்கள் என்பது புலனாகிறது. மாணவர்கள் இலங்கை வங்கியைத் தேசிய சொத்தாகக் கருதும்பொழுது நாமும் அவர்களை தேசியச் சொத்தாகவே கருதிச் செயற்பட வேண்டும் — என்றார்.

கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளது கலை நிகழ்ச்சிகளும் இறுதியில் நடைபெற்றன. [ச-10]

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நா. வல்லிபுரம்
(முன்னாள் மட்டுவில் மகாவித்தியாலய ஆசிரியர்)

தோற்றம்:
03 - 04 - 1931

மறைவு:
11 - 09 - 1984

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி நிற்கும்:

மனைவி, பிள்ளைகள், நண்பர்கள்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(2364)

### பாகிஸ்தான் மீண்டும் சேர்க்கப்பட்டது

இஸ்லாமாபாத், செப்.16 காமன்வெல்த் நாடுகள் அமைப்பில் மீண்டும் பாகிஸ்தான் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

பங்களாதேஷை 1972 இல் சுதந்திர நாடாக பிரிட்டன் அங்கீகரித்ததைத் தொடர்ந்து அப்போதைய பிரதமர் ஸுல்பிகார் அலி பூட்டோ காமன்வெல்த் அமைப்பிலிருந்து பாகிஸ்தான் வெளியேறும் முடிவை எடுத்திருந்தார். (உ-எ)

### திருமலையில் இராணுவம் தேடுதல்

திருகோணமலை, செப். 16 திருகோணமலையில் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தினர் பெரும் தேடுதல் வேட்டைகளை நடத்தி வருகின்றனர்.

அபயபுர, மிகிந்தபுர, கோட்டை ஆகிய பகுதிகளில் பல தடவைகள் தேடுதல் வேட்டைகள் இடம் பெற்றுள்ளன. பலர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனராம். சிலரைக் காணவில்லையெனவும் கூறப்படுகிறது. (உ-15)

### பருத்தித்துறை வங்கியில் நிவாரணத்துக்கு ஏற்பாடு

#### ஆயினும் பணம் சென்றுலே நிச்சயம்

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் மீளக் குடியமர்தல் நிவாரண பணத்தை இன்று வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து நிவாரணப் பணத்தைப் பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்வதைப் பொறுத்தே அது வழங்கப்படுவது நிச்சயமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமைதிப் படையினரின் ஹெலிக்கொப்டர் மூலமே யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வங்கிக்குப் பணம் எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். (அ-10)

### சிறிமாவோ தலைமையில் எதிரணிகள் கூடி ஆராய்வு

கொழும்பு, செப். 16 அனைத்துக் கட்சி மாநாடு குறித்தும் இம் மாநாட்டிற்கு எதிர்க்கட்சி முன்னணி சமர்ப்பித்த யோசனைகள் குறித்தும் நேற்று எதிரணிகள் நீண்ட நேரம் ஆலோசனை நடத்தின.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ரொஸ்மிட் பிளேஸ் வாசஸ்தலத்தில் இந்த ஆலோசனை நடைபெற்றது.

சுமார் மூன்று மணி நேரம் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகவும்—

கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-1)

### கூட்டத்திற்கு வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம். செப் 16 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்க சம்மேளனக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளது.

யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இந்தக் கூட்டத்தை நடத்துகிறார். பிரஸ்தாப கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட உள்ளதாக அறியவருகிறது.

வடமராட்சிக் கோட்டத்தில் உள்ள சகல கொத்தணி அதிபர்களும், தம்முடன் கொத்தணி மட்டத்தின் இரண்டு பிரதிநிதிகளுடன் இக்கூட்டத்திற்கு வரவேண்டும் என கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் கேட்டுள்ளார். (அ)

### மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், செப். 16 செல்வன் சுபா. வேல்மாறனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ க. இராமநாதனின் இசைக்கச்சேரியில் இவர் மிருதங்கம் வாசிப்பார். யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற மாணவனான இவர் மிருதங்க வித்வான் அமரர் அம்பலவாணரின் சீடராவார். இவர் காலஞ்சென்ற கலைவிற்பனர் சபா, சதாசிவத்தின் மகனுமாவார். (அ)

### பயணிகள் ரயில் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், செப்: 16 கொழும்பில் இருந்து பயணிகள் ரயில் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

மிகக்குறைவான பயணிகளே இதில் பயணம் செய்தனர்.

இன்று காலை 9-00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் இருந்து இந்த ரயில் புறப்படும்.

இதேவேளை நேற்று யாழ்ப்பாணம் வந்த சரக்கு ரயிலில் அரிசி, பருப்பு உட்பட பல உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### கட்டைபறிச்சான்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் என அடையாளம் தெரிந்து கொண்டே சுட்டுள்ளனர்.

தோழர் காளிராசா சம்பவத்தின்போது பாடசாலைக்கு அருகில் உள்ள வீட்டில் தங்கியிருந்துள்ளார். அவ்வீட்டிற்குச் சென்ற படையினர் அவ்வீட்டாரிடம் தோழர் காளிராசாவை விசாரித்து வெளிவரும்படி அழைத்துள்ளனர். நிலைமையை உணராத தோழர் வெளியே வந்தபோது சுடப்பட்டுள்ளார்.

எமது அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரும், முன்னணித் தோழனுமாகிய தோழர் காளிராசாவினுடைய இழப்பு எமது அமைப்புக்கும், மூதூர் பிராந்திய மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இறந்த அனைவருக்கும் எமது அஞ்சலியையும், தோழனுக்கு எமது வீரவணக்கத்தையும் செலுத்துவதோடு, கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி உப்புக்கேணியடிப்பகுதியில் ஆயுதந் தாங்கிய குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தோழர் குணசிங்கத்திற்கும் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம். —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்-கொழும்பு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோர் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. விஜேபால மெண்டிசை கடந்த 8 ஆம் திகதி சந்தித்துப் பேசினர்.

அதனையடுத்தே கொழும்பு—யாழ். ரயில் சேவை விஸ்தரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு — மட்டக்களப்பு ரயில் சேவையும் வியாழக்கிழமை தொடக்கம் தினசரி சேவையாக விஸ்தரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-1)

### மாணவர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லது யாழ்ப்பாணத்தில்வைத்து விடுவிப்பதா என்பது இன்றைய தினமே முடிவுசெய்யப்படும்.

யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் மேற்கண்ட தகவல்களை நேற்றிரவு சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். கல்வித் திணைக்களத்தினர் இதுவரை 140 மாணவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர். இதில் பலர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்கள் அடங்கிய குழு முன் நிறுத்தப்படுவர்.

அங்கு வைத்து பிரஸ்தாப மாணவர்களிடம் பயில விரும்புகிறார்களா, அல்லது கல்வியைத் தொடர விரும்புகிறார்களா என்று சொந்த விருப்பம் கோரப்படும். அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மாணவர்கள் விடுவிக்கப்படுவர்--என்றார். (அ 9)

### நீர்வேலி..,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது.

மோதல் சம்பவத்தின்போது ஷெல் குண்டுகளும் ஏவப்பட்டதாகக் கூறப்பட்டது.

[illegible] நீர்வேலியூடான போக்குவரத்துக்கள் [illegible] இருந்தன. (உ-9-10)

### தனுஷ்கோடியில் அகதிகள்

சென்னை, செப். 16 இலங்கையில் இருந்து இந்தியா நோக்கி கடந்த வியாழக்கிழமை 18 பேர் கொண்ட அகதிகள் குழு ஒன்று தனுஷ்கோடி வந்து சேர்ந்தது.

குடிவரவு அதிகாரிகள் இதனை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தனர். (அ-ரி)

### கட்டடங்களுக்கு தீ வைப்பு!

கொழும்பு, செப்: 16 அனுராதபுரம், பொலன்னறுவை, ஊவா ஆகிய பகுதிகளில் பல அரசக் கட்டடங்கள் இனந்தெரியாதவர்களால் நேற்று எரிக்கப்பட்டன.

—இப்படி அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது. (உ-எ)

### இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 16 யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கிழக்கு கலட்டி பாதாள வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று சனிக்கிழமை காலை 10-30 முதல் 12-00 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறுகின்றது. (உ-எ)

### புதிய பதவி

யாழ்ப்பாணம், செப்: 16 பிரிகேடியர் பாலரட்ண ராஜா இராணுவப் படைப் பிரிவு ஒன்றின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் வைத்தியரத்ன வகித்து வந்த பிரஸ்தாப பதவி இப்போது பாலரட்ண ராஜாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பதவியேற்பு வைபவம் நேற்று பனாகொட இராணுவ முகாமில் நடைபெற்றது. (அ-9)

### திருமலையில் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம், செப்: 16 திருகோணமலையில் பூரணத்துவமான பல்கலைக்கழகமொன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான பல்கலைக்கழக சட்டமூலத்தை தயாரிக்கும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. பிரஸ்தாப பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை முதற்கட்டமாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (அ-9)

### இன்று மின்சாரம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், செப்: 16 சுன்னாகத்தில் இருந்த ஜெனரேற்றர் மூலம் வழங்கப்படும் சுழற்சிமுறை மின்சாரம் இன்று சகல இடங்களுக்கும் வழங்கப்படும்.

கடந்த இரண்டு தினங்களாக சுழற்சிமுறை மின் விநியோகம் குடாநாட்டிற்கு வழங்கப்படவில்லை.

நேற்று ரயில் மூலம் சுன்னாகத்துக்கு ஹெவி டீசல் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-10)

### 21 ஆம் திகதிக்கு முன்னர் படையினர் பொலீஸார் ராஜினாமா செய்ய வேண்டும்

கொழும்பு செப், 15 தென் மாகாணத்தில் பணிபுரியும் படையினர் மற்றும் பொலீஸாரை வருகிற 21 ஆம் திகதிக்கு முன்னர் ராஜினாமாச் செய்து விடவேண்டும் என்று அவர்கள் குடும்பங்கள் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து படையினரின் உறவினர்கள் கம்புறுபிட்டி, வெலிகம, ஊவா பரணகம, மித்தெனியா, தங்காலை ஆகிய பகுதிகளில் உள்ள பொலீஸ் நிலையம், பஸ் நிலையம் ஆகியவற்றின் முன்னால் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் கடந்த திங்கட்கிழமை நின்றனர்.

பொலீஸார் அவர்களைக் கலைந்து போக வைத்தனர். (த:-எ)

### நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் உயர்திரு,
சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை அவர்கள்
(இளைப்பாறிய பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபைச் செயலாளரும்)

தோற்றம் :
12-12-1923

மறைவு :
18-08-1989

18-8-89 ஆம் திகதி சிவபதமடைந்த எம் குடும்பத் தெய்வத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

17-9-1989 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரது அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர் ஆகியோரைக் கலந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

'மங்கள கிரி'
புலோலி தெற்கு,
புலோலி.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்.

(3686)

### மரண அறிவித்தல்

#### திருமதி றேசம்மா சூசைப்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த திருமதி றேசம்மா சூசைப்பிள்ளை 14-09-89-ல் காலமானார். இவர் சூசைப்பிள்ளையின் அருமை மனைவியும், பரிமளம், வசந்தா, வில்லியம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அக்னெஸ் (கண்மணி), திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இம்மனுவேலின் மைத்துனியும், யேசுதாசன், ராசசோதி, சிவயோகம் ஆகியோரின் மாமியாரும், லதா, சோபா, சதீஸ், கிசோர், சமிஸ்ரா, கிளஸ்டன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

சில்லாலை கிழக்கு,
சில்லாலை. (1949)

செ. இம்மனுவேல்
(மைத்துனர்)

### OBITUARY

#### HOMER-VANNIASINKAM-ISABEL

Homer - Vanniasinkam - Isabel, beloved wife of late Alfred Homer - Vanniasinkam, loving mother of Sumithra, Bala, Chithra. Dr. Nimal (Sulaiman's Hospital), Yoha (Deyabalange Associates) and Chandiran (NHDA), mother - in - law of Ravi Vanigasoriyar (Sellers Sportswear), Princess, S. X. Gnanasegaram [Office of the Regional Director of Health Services, Jaffna), Freda and Anoja, sister of late J. A. P. Cherubim [Advocate], grandmother of Suhen, Niranjali, Sharmalie. Naren, Lakshmi, Indhiran, Iswaran, Nadine, Johann and Perin expired.

Cortege leaves residence at 3-15 p. m. on Sunday, 17th September, 1989 for burial at St. Mary's Burial Grounds, Jaffna.

"Cherubim House", 100, Main Street, Jaffna.

(c/8343)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 203/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ Funeral Undertakers
✶ Florist ✶ Caskets
✶ Embalming, ✶ Funeral Coaches
BRIGHT HOUSE
(Near St. James Church)
810' MainStreet,
Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை

16 - 09 - 1989 சனிக்கிழமை

அந்தியகால சேவைக்கு
உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்!
பிறைற் ஹவுஸ்
✶ பிரேதப் பெட்டிகள்
✶ ஊர்வல வாகனம்
✶ மலர்வளையங்கள் ✶ எம்பாமிங்
பிறைற் ஹவுஸ்
[யாகப்பர் ஆலய அருகில்]
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# அப்பரின் உண்ணாவிரத தத்துவத்தை உலகறியச் செய்தவர் காந்தி அடிகள்

இலக்கியம், அது தோன்றும் காலத்திற்கு முன்பு சமுதாயத்தில் நிகழ்ந்தவைகளையும் அது தோன்றுங்காலத்துச் சமுதாய நிகழ்வுகளையும் தன்னகத்தே பதித்துக் கொண்டு, காப்பாற்றி அடுத்து வரும் சந்ததிக்கு வழங்கும் ஓர் அற்புதச் சாதனம்.

இவ்வகையில் பெரிய புராணப் பேரிலக்கியம், தமிழ் உலகில் அற்றை நாள் நிலவிய சமுதாயப் பழக்கவழக்கங்களையும் மாந்தர் தம் நம்பிக்கைகளையும் நமக்குத் தெளிவாக்குகிறது.

அரசுரிமை என்பது தந்தை வழி மகனுக்குச் செல்வது என்ற கொள்கை இந்நாட்டிற்கு உரியதாகும்.

மகனில்லாதபோது வேறு வழி மரபினர்க்குச் செல்லும்.

குலமைந்தரும், வேறுவழி மரபினரும் இல்லையெனில், மக்களும், அமைச்சரும் கூடிச் சிந்தித்து, இறைவனை வேண்டிக்கொண்டு ஒரு யானையைக் கண் கட்டிவிட்டு அது யாரை எடுத்துத் தன் கழுத்தகத்து ஏந்தி வருகின்றதோ, அவரே அடுத்து நாடாள்வதற்குரியார் என்று கொள்வர்.

## சேக்கிழார் வாக்கு

இப்படி அரசனைத் தேர்ந்தெடுக்கும் முறை அக்காலத்தில் இருந்தது என்பதனை மூர்த்தி நாயனார் புராணத்தால் அறிகிறோம்.

'செம்மான் வினையர்ச்சனை
நூன்முறை செய்துதோளால்
இம்மாநிலம் ஏந்தவொர்
ஏந்தலையேந்துகென்று
பொய்ம்மாமுகில்போன்
மதம்பாய்பெருகோடை
நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில்
கொண்டுகண்கட்டிவிட்டார்'

என்பது சோழநாட்டு முதலமைச்சராய் முன்னை நாள் விளங்கிய சேக்கிழார் தம் பெருவாக்கு.

## பெரியபுராணம் புலப்படுத்தும் சமுதாய பழக்க - வழக்கங்கள்

நாடாள்கின்ற மன்னன், தன் வெண்கொற்றக்குடைக் கீழ் வாழும் மக்களை ஐந்து வகையான அட்சங்களினின்றும் மீட்டுக் காத்தல் வேண்டுமெனத் தமிழகத்துச் சான்றோர் கருதினர்.

மனுநீதிச் சோழன் வாக்கில் இக்கருத்தினை வைத்துப் பேசுகின்றார் சேக்கிழார்.

'மாநிலங் காவலனாவான்
மன்னுயிர் காக்குங்காலை
தாதனுக்கிடையூறு தன்னால்
தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறங்காப்பான் அல்லனோ?'

தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் மக்களுக்குப் பயம் வராமற் காத்தல் அரசர் தம் கடமை என்றுணர்கிறோம்.

உயர்ந்த செயலொன்றை நிறைவேற்றத் தடையாகக் குறுக்கீடுகள் வருமானால், அவற்றைப் போக்கப் பெரியோர் அகிம்சா முறையில் உண்ணாநோன்பைமேற்கொள்வார்.

உழவாரப் படையாளி என்று உலகத்தார் புகழ்ந்த திருநாவுக்கரசுநாயனார் ஓர் உண்மையை உலகறியச் செய்ய வேண்டி உண்ணாநோன்பை மேற்கொண்டார் என்று பெரியபுராணம் தெரிவிக்கின்றது.

இவ்வுண்மையை உலகறியச் செய்தவர் உத்தமர் அண்ணல் காந்தியடிகளாவார்.

திருப்பழையாறை வடதளிக்கோயிலை மறைத்துச் சமணர்கள், பள்ளியாக ஆக்கிக்கொண்டனர்.

இந்த உண்மையை மக்களுக்கும், மன்னவனுக்கும் உணர்த்த அவர் விரும்பினார். கோயில்கொண்டுள்ள சிவபிரானை வணங்கி அல்லது அதன்பின்னர் செல்வதில்லை என்று உறுதிகொண்டு உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

இதனைச் சேக்கிழார்,
வண்ணங்கண்டு நானும்மை
வணங்கியன்று போகேன்
என்று
எண்ணமுடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது
செய்யாமே'
—என்று குறிப்பிடுகின்றார்.

## நீதிமன்றத் தீர்ப்பு

நீதிமன்றத் தீர்ப்புக்குப் பெருந்துணையாவன மூன்று வகைப்பட்ட சாட்சியங்களாம்.

அவை எண்ணத்தொலையாக காலந்தொட்டுப் பெரியோரால் அங்கீகரிக்கப்பெற்ற ஒழுக்கமாகிய 'ஆட்சியும், சுவடி, ஓலை, சிட்டு செப்பேடு, கல்வெட்டு முதலாய 'ஆவண'மும்.

வழக்கிற்குரிய நிகழ்ச்சியை நேரிற்கண்டார் சொல்வதாகிய 'அயலார் தங்கள் காட்சியும்' ஆம்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் அந்தணர் கொடுத்த வழக்கிற்கு ஆதாரமாக அவரை மன்றத்தார் 'ஆட்சியில், ஆவணத்தில், அன்றி, மற்றயலார் தங்கள் காட்சியின் மூன்றில் ஒன்று காட்டுவாய்' என்று கேட்டதாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

சண்டீசர், ஊர்ப்பசுக்களை மேய்த்துவருங்கால், அப்பசுக்கள் தரும் பாலை, மணலாற் செய்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்துவிடுவார். இப்பெற்றிமை அறியாதான் ஒருவன், சண்டீசர், பால் கறந்து மணலிற் கொட்டி விடுகின்றார் என்று கிராம சமுதாய சபையார்க்குத் தெரிவித்தான்.

ஊர்ச்சபையார் அந்தச் சிறுவனின் தந்தையை (எச்சதத்தன்) அழைத்து விசாரித்தனர்.

**- ச. நடராசன் -**

அவர் தன் மகன் செய்த தவறுக்காக வருத்தம் தெரிவித்து, இனி இத்தகைய தவறு நிகழாது என்றும், மீறி நடந்தால் அக்குற்றத்திற்குத் தாம் பொறுப்பு ஆவதாகவும் கூறினர்.

சபையோர் அதற்குச் சம்மதித்தனர். இந்நிகழ்ச்சியின் வாயிலாக, சிறியோர் செய்த பிழைக்கு அவர் தம் பெற்றோரை அழைத்து விசாரித்து அவரை அப்பிழைக்குப் பொறுப்பாளி ஆக்குதல் அந்நாள் வழக்கமாயிருந்தது என்ற உண்மையை அறிந்து கொள்கின்றோம்.

வீரர் போரில் புறங்கொடுத்து ஓடுதலையும், பின்னிடுதலையும் மிக இழிவாக எண்ணினர்.

நமக்குச் சோறிட்டார் பொருட்டுத் தம்முயிரையும் பொருட்படுத்தாது, போரிட்டு மடிதலை அவர்கள் பெரிதும் விரும்பினர்.

## புகழ்ச்சோழ நாயனார்

இதனைப் புகழ்ச்சோழநாயனார் வரலாற்றில் 'உற்றெதிர் கண்டராவிகழித்தனர் உண்டசோறு கழிக்கவே' என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

பெண்ணைத் தாய் தந்தையாரே ஒருவருக்கு மணம் பேசிக்கொடுக்க உரியவர்கள் ஆவார்கள்.

அவர்கள் இசைவு தெரிவித்துவிட்டால் அப்போதே உயிர்ப்பொருத்தமாம் திருமணம் நிகழ்ந்தது போலாகும்.

பின்னர் செய்யப்படும் மணவினைகள் எல்லாம் பொருத்தம் நிகழ்ந்ததற்கு அறிகுறியாகவே கொள்ளப்பெறும்.

இதனைத் திலகவதியார்,
'எந்தையும் எம்மனையும்
அவர்க்கு எனைக்கொடுக்க
இசைந்தார்கள் அந்தமுறையால் அவர்க்கே உரியது நான்'
என்று மொழிவதால் நாம் புரிந்துகொள்ளலாம். ★

---

## கருத்துக் கலசம்

மயூரா

### தாழ்வு மனம்

ஒருவனுடைய வாழ்க்கையின் வெற்றியில் அவனது குண இயல்புகளும், வாழ்க்கைப் பண்புகளும் பெரும் பங்கு வகிக்கின்றன.

செய்யும் தொழிலில் விசுவாசமும், முயற்சியும், நான் பெரியவன் அடுத்தவன் சிறியவன் என்று எண்ணாத சமநிலைப்பட்ட மனப்பான்மையும் வாழ்க்கைப் பண்பியல்புகளாக வந்துவிட்டால், ஒருவன் உயர்ச்சி காண்பது வெகு சுலபம்.

தான் செய்யும் தொழிலைக் குறைவாக, எண்ணி தனக்குள் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி, அடுத்தவன் மீது அழுக்காறு கொண்டு, வாழப் பழகிவிட்டால் உயர்ச்சி காண்பது என்பது மிகக் கடினம்.

மனிதனது மனதில் உருவாகும் தாழ்வு மனநிலை எப்போதும் அவனைத் தாழ்த்தியே வைத்திருக்கும் தான் குறைந்தவன் அல்லது தனது தொழில் குறைந்தது என்று எண்ணியவனால் மற்றவர்களின் மதிப்பை, நல்லபிப்பிராயத்தைச் சம்பாதிக்க முடியாது. சம்பந்தப்பட்டவன் அடுத்தவர்களைக் குறை கண்டும், புறங்கூறியும் தன்னைத்தானே தாழ்த்திக் கொள்வான்.

ஒருவனுடைய தாழ்வுச் சிக்கல் அவனை மட்டுமன்றி அடுத்தவனையும் பாதிக்க வல்லது. அதனால் தாழ்வு மனப்பான்மை சமூக விரோதமானது.

மக்களுக்கு வெளிப்படையாகக் கெடுதல் செய்பவர்களை, திருடர்களை, கொலைஞர்களை, கொள்ளையர்களை சமூகவிரோதிகள் என்று பட்டம் கட்ட முடிகிறது. தாழ்வு மனம் உடையவரின் செயற்பாடுகள் வெளியில் துலாம்பரமாகத் தெரியாவிட்டாலும் அவற்றால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் பயங்கரமானவை. கொள்ளை, கொலை, ஊழல், லஞ்சம் என்பவற்றுக்குச் சமமானவை.

ஒருவன் தனது உடல் ஊனத்தால், குடும்ப நிலையால், கல்விக்குறைவால், தொழிலால், பணவசதி இன்மையால் தான் குறைந்தவன் என்று எண்ணத் தூண்டும் அளவுக்கு நடக்காமல் பார்த்துக்கொள்ளும் கடப்பாடு சமூகத்துக்கு உண்டு. எந்த விதத்தில் குறைவு இருப்பினும் நிறைவைத்தேடிக்கொள்ள உதவுவதே சமூகத்தின் பொறுப்பு.

தொழில் ரீதியாக அந்தஸ்து ரீதியாக, பணரீதியாக, படிப்பறிவு ரீதியாகவோ, வேறு எந்த வகையிலோ, ஒருவனை ஒதுக்கி வைக்க அடுத்தவனுக்கு ஆண்டவன் உரிமை வழங்கவில்லை. தெய்வசிந்தனை உள்ளதாகக் கூறிக்கொள்ளும் சமூகம் தனக்கு வழங்கப்படாத உரிமையை மற்றவன் மீது திணிக்க முற்படுவது அநியாயம்; அதர்மம்.

இந்தத் தத்துவத்தை தமிழர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்களோ! ★

---

# 'பறக்கும் தட்டு' மர்மத்தை துப்புத்துலக்க

# சோவியத் விஞ்ஞானிகளின் புதிய முயற்சி

சூரியமண்டலத்தின் பிற கோள்களில் உயிரினம் எதுவுமில்லை.

எனினும், அண்டையில் உள்ள கோள்களில் இருந்து 'விசித்திர மனிதர்கள்' பறக்கும் தட்டுகள் மூலம் பூமிக்கு வருவதாகக் கூறப்படுவது பற்றி சோவியத் விஞ்ஞானிகள் குழு ஒன்று பூரண ஆய்வு ஒன்றை நடத்தப் போகின்றது.

சோவியத் அரசே இந்த உயர்மட்டக் குழுவை நியமித்துள்ளது.

பறக்கும் தட்டுகளைக் கண்டதாகக் கூறப்படுவர்களை எல்லாம் இந்தக் குழு சந்தித்து தீர விசாரித்து வெளி உலகில் இருந்து விசித்திர மனிதர்கள் பூமிக்கு வந்து செல்கின்றார்களா? என்பது பற்றி முடிவு எடுக்க உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் 'பறக்கும் தட்டு மர்மம்' பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது.

இதில் உள்ள தகவல்கள் மார்ட்டின் கார்டினர் (Martian Gardener) எழுதிய 'Fads and Fallacies in thc name of Science' — என்று நூலில் இருந்து எடுக்கப்பட்டன.

1947, ஜூன் 24 ஆம் தேதிதான் 'பறக்கும் தட்டு' என்கிற புரளி பிறந்தது.

அன்று செவ்வாய்க்கிழமை கென்னத் ஆர்னல்ட் (Kenneth Arnold) என்ற ஒரு அமெரிக்க வர்த்தகர் வாஷிங்டனுக்கு அருகிலுள்ள காஸ்கேட் மலைகளின் (Cascade Mountains) மேலாகத் தனது விமானத்தில் பறந்து கொண்டிருந்தார்.

அப்போது சுமார் 25 மைல் தொலைவில் ஒன்பது வட்ட வடிவமான பொருள்கள் ஒரு சாய்வான நேர்க்கோட்டில் அணிவகுத்துப் பெரும் விரைவுடன் பறந்து சென்றது அவர் கண்ணில் பட்டது.

அதே சமயத்தில் ஒரு டகோடா விமானமும் பறந்து கொண்டிருந்தது.

ஆர்னல்டுக்கு அந்த வட்டங்கள் விமானத்தை விடச் சிறிய அளவுள்ளவையாகத் தோன்றின.

அவை ஒன்றோடொன்று சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்ததைப் போல ஒன்றாக இயங்கி மலைச் சிகரங்களைத் தாவித் தாண்டிப் பறந்து சென்றன.

## பறக்கும் தட்டு

மறுநாள் அமெரிக்கா முழுவதும் செய்தித் தாள்கள் இந்தச் செய்தியைப் பரப்பின.

அவை அந்த அந்த மர்மப் பொருள்களுக்குப் 'பறக்கும் தட்டுகள்' என்ற பெயரையும் சூட்டின.

உடனே ஏராளமான மக்கள் தாங்களும் பறக்கும் தட்டுகளைப் பார்த்ததாகச் செய்திப் பத்திரிகைகளுக்குத் தந்தி, தபால், தொலைபேசிகள் மூலமாகத் தெரிவித்தார்கள்.

அது நிஜமா, பொய்யா என்று பரீட்சித்துக்கூடப் பார்க்க முனையாமல் செய்திப் பத்திரிகைகளும் இன்னார் இன்னார் பறக்கும் தட்டுகளைப் பார்த்தார் என்று செய்திகளை வெளியிட்டன.

தன் பெயர் பத்திரிகைகளில் வர வேண்டும் என்பதற்காக எவ்வளவோ பேர் என்னென்னவோ செய்கிறார்கள்.

அது மாதிரியே ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, ஈரான் என்று உலகின் பல பாகங்களிலிருந்தும் பறக்கும் தட்டுகளைப் பார்த்ததாக மக்கள் செய்திப் பத்திரிகைகளுக்குக் கடிதமெழுதத் தொடங்கினார்கள்.

தட்டு வடிவங்களைத் தவிர, தீப்பந்துகள், ஐஸ்கிரீம்கோண்கள், வடைகள், சுருட்டு என்று பல வடிவங்களில் பறக்கும் தட்டுகள் வந்ததாகச் செய்திகள் வெளிவந்தன.

அமெரிக்க ராணுவம் ரகசியமாகத் தயாரித்து வரும் ஒரு மர்ம விமானம்தான் அது என்று ஒரு நிருபர் தெரிவித்தார்.



கற்பனையில் "பறக்கும் தட்டு"

அவை ரஷ்யாவிலிருந்து வந்ததாக வேறு ஒரு நிருபர் எழுதினார்.

## குரொமிக் கோவ்

ரஷ்ய வெளிநாட்டு அமைச்சராயிருந்த ஆந்திரே குரோமிகோவ் அதைக் கேட்டதும் 'உண்மைதான். எங்கள் நாட்டு டிஸ்கஸ் வீச்சு வீரர் ஒருவர் கொஞ்சம் அதிக வேகத்துடன் (டிஸ்கஸ் துரோ) தட்டை வீசியிருக்கலாம்' என்று சிரிக்காமல் சொன்னார்.

சில நாட்களுக்குப் பிறகு மாஉரி (Maury) தீவில் ஒரு வடை வடிவ மர்மத்தட்டு எரியும் நெருப்பைப் பொழிந்ததாக ஆர்னல்டுக்கு ஒரு செய்தி கிடைத்தது.

உடனே அவர் விமனத்திலேறி அங்கு பறந்தார். போகிற வழியில் சுமார் 25 சிறிய பறக்கும் தட்டுகள் அவர் கண்ணில் பட்டன. அவர் உடனே விமானப் படைக்குச் செய்தி அனுப்பினார்.

உடனே ஒரு விமானப்படை விமானம் பறந்து வந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக அது விபத்துக்குள்ளாகி இரண்டு விமானப்படை அதிகாரிகள் மாண்டனர்.

சில நாட்களுக்குப் பிறகு மாஉரித் தீவு பற்றிய செய்தி வெறும் புரளிதான் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

புரளிப் பத்திரிகைகளுக்கு அந்தச் செய்தியை அனுப்பிக் கொஞ்சம் காசு சம்பாதிக்கலாமென்று ஆசைப்பட்ட இரண்டு நபர்களின் கைவரிசைதான் அது என்பது வெளியாயிற்று.

ஆனால் ஆர்னல்ட் அதை நம்ப மறுத்தார். கடைசி வரை அவர் பறக்கும் தட்டுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஏதாவது கருத்துகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தார்.

1948, ஜனவரியில் ஒரு விமானத்தின்விமானி வானத்தில் ஒரு வட்டமான வடிவத்தைப் பார்த்துவிட்டுத் துரத்தினார்.

அவருடைய விமானம் 30,000 அடி உயரத்திற்குப் போய் விபத்துக்குள்ளாகி விட்டது.

## அமெரிக்க நிலை

முதலில் அமெரிக்க ராணுவத்துறையினர் பறக்கும் தட்டுகளைப் பற்றிய செய்திகளைக் கண்டுகொள்ளவில்லை.

ஆனால் பொதுமக்களிடையே பலவிதமான புரளிகள் கிளம்பின. ராணுவத்துறை உண்மையை மறைப்பதாக அவதூறு எழுந்தது.

ஆகவே ராணுவத்துறை ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது. 15 மாதங்கள் தீவிரமான முயற்சிகளுக்குப் பிறகு அந்தக் கமிஷன் பறக்கும் தட்டு வெறும் புரளியே என்று முடிவுக்கு வந்தது.

ஜனாதிபதி ட்ருமனும் தன் பங்குக்கு 'பறக்கும் தட்டைப் போன்ற விமானங்களை அமெரிக்க ராணுவம் உருவாக்கவோ சோதித்துப் பார்க்கவோ இல்லை' என்று அதிகார பூர்வமாக அறிவித்தார்.

1951 ஆம் ஆண்டில் அமெரிக்கக் கடற்படை கொஸ்மிக் கதிர் ஆய்வுகளுக்காக நூறு அடி விட்டமுள்ள பலூன்களை வானில் செலுத்தியதாக அறிவித்துக் கொண்டது.

அந்த பலூன்களைப் பார்த்துவிட்டுத்தான் எல்லாரும் பறக்கும் தட்டுகள் என்று நினைத்துப் பயந்து போனார்கள். பறக்கும் தட்டுகள் செய்ததாகச் சொல்லப்பட்ட அத்தனை காரியங்களையும் அந்தப் பலூன்கள் செய்யமுடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பிறகு பறக்கும் தட்டுகளைப் பற்றிய செய்திகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தன. ★

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் விமரிசனத் துறையில் 'இலக்கிய இரட்டையர்'களாக மதிக்கப்படுபவர்கள் திரு. பி. ஜி. சுந்தரராஜனும் திரு. சோ. சிவபாதசுந்தரமும் ஆவர்.

சிட்டி என்றழைக்கப்படும் 80 வயது நிரம்பிய திரு. சுந்தரராஜன் 'மணிக்கொடி' காலத்து எழுத்தாளர்.

77 வயதான திரு. சோ. சிவபாதசுந்தரம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர். இலங்கை வானொலி, பி. பி. சி. வானொலி ஆகியவற்றில் பணிபுரிந்த இவர், 'ஒலிபரப்புக்கலை' என்ற நூலை எழுதிப் புகழ்பெற்றார்.

திரு. சிவபாதசுந்தரம் திரு. சுந்தரராஜனுடன் இணைந்து 'தமிழ் நாவல் நூறாண்டு - வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூலை 1978இல் வெளியிட்டார்.

இப்போது இருவரும் கூட்டாக 'தமிழ்ச் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்' என்ற ஆராய்ச்சி நூலை வெளியிட்டிருக்கின்றனர்.

தற்போது லண்டனில் நிரந்தரமாக வசித்து வரும் திரு. சிவபாதசுந்தரம் அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்தார். புதிய நூலுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் முயற்சியாக அந்த விஜயம் அமைந்திருந்தது.

அச்சமயம் திரு. சிவபாதசுந்தரம் தமிழ் சிறுகதை வளர்ச்சி, இன்றைய நிலை பற்றி அளித்த பேட்டியின் இறுதிப்பகுதி இங்கு கேள்வி - பதில் வடிவில் தரப்படுகிறது. இனி வாசியுங்கள்:

# தமிழ்ப் புனைகதை இலக்கியத்தின் எதிர்காலம் சிறப்பாக விளங்குவதற்கு சில மாற்றங்கள் அவசியம்!

★ அந்தக் காலத்து சிறுகதைகளின் பொருள்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவை வெறும் போதனையாக இருந்தனவா? அல்லது பொழுதுபோக்குக்குரியனவாக இருந்தனவா?

— நான் முன்னர் கூறியபடி பெரும்பாலான கதைகள் வாழ்க்கையின் ஒழுக்கநெறி சம்பந்தமான அம்சங்களை வலியுறுத்துவனவாக இருந்தன.

சில கதைகளில் எழுத்தாளர்கள் சமூக நலன் குறித்து அசாதாரண அக்கறை காட்டி இருக்கின்றனர்.

சீதனம் மற்றும் பால்ய திருமணம் குறித்தும் அவர்கள் கவனம் செலுத்தினர்.

## வ. வே. சு. ஐயர் பங்கு

★ வ. வே. சு. ஐயரின் குறிப்பிடத்தக்க பங்கு யாது?

— 1910 - 1920 க்கு இடைப்பட்ட காலத்தில் பாண்டிச்சேரியில் இருந்தபோது வ. வே. சு. ஐயர் எழுதிய கதைகள், அவரைச் தமிழ்ச் சிறுகதைத்துறையின் தந்தை என்றும்,

சிறுகதை இலக்கணத்துக்கு வழிகாட்டி என்றும் சரியாக அடையாளங்காட்டிற்று.

வ. வே. சு. ஐயர் ஆக எட்டுச் சிறுகதைகளையே எழுதியிருந்தார்,

அவரின் 'மங்கையர்க்கரசியின் காதல் முதலியகதைகள்' பரவலாக கட்டுரை, பேனச்சித்திரம் போன்றே வாசிக்கப்பட்டது.

## 1950-60 களில் மிகச்சிறந்த எழுத்தாளர் வரிசையில் தளையசிங்கம், பொன்னுத்துரை

இன்று சிறுகதைகளை விளங்கிக்கொள்வது போன்று, அன்று அக்கதையை சிறுகதையாக ஏற்றுக்கொள்வது கஷ்டமாக இருந்தது.

அவரது கதைகளிலும் பார்க்க, அத்தொகுதியில் இடம்பெற்ற முன்னுரை, அவரின் இலக்கிய விழிப்புணர்வையும் சிறுகதை உத்தி மற்றும் அதன் அமைப்பு பற்றிய அவரின் எண்ணத்தையும் வெளிப்படுத்தின,

### 'குளத்தங்கரை'

★ 'குளத்தங்கரை அரச



புதுமைப்பித்தன்

மரம்' கதைபற்றி...

அவரது கதைகளிலே இச் சிறுகதைதான் சிறந்தது என்பதுடன் தமிழ்ச் சிறுகதைகளிலே மிகச்சிறந்தவைகளில் இதுவும் ஒன்று எனப் பாராட்டப்பட்டாலும் அவரின் அச் சிறுகதைத் தொகுதியிலுள்ள 'மங்கையர்க்கரசியின் காதல்' என்ற சிறுகதையுடன் நின்று பிடிக்கமுடியுமா என்ற சந்தேகம் எழுகின்றது.

தனிச் சம்பவம் ஒன்றைக் கொண்டதாக சிறுகதை அமையவேண்டும் என்ற வரையறைக்குள் 'மங்கையர்க்கரசியின் காதல்' வருகிறது.

'குளத்தங்கரை...' சிறுகதை பதினைந்து ஆண்டுகளாக இடம்பெற்ற சம்பவங்களை பின்னிப் பிணைத்து எழுதப்பட்டது. அதன் கருப்பொருள் ஒரு நாவலுக்குரியதாகும். 'குளத்தங்கரை...' கதை வ. வே. சு, ஐயரின் மனைவி செள. பாக்கிய லட்சுமி அம்மாளின் பெயரில் தான் முதலில் வெளியிடப்பட்டது.

1914 இல் மொடேர்ன் ரிவ்யூ பத்திரிகையில் ரவீந்திரநாத் தாகூர் ஆங்கிலத்தில் எழுதிய River Stair என்ற கதையின் தழுவலாகத் தெரிந்தது.

இரண்டு கதைகளிலும் பல ஒற்றுமைகள் காணப்பட்டன. சீதனம் தான் கருப்பொருளாக இருந்தது. கடைப்பிடிக்கப்பட்ட உத்தி புதுமையாக இருந்தது. இதே உத்தி 1913 இல் வெளியான அம்மணி அம்மாள்' கதையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கத்திய இலக்கியத்தில் இடம்பெற்ற ஒரு புதிய பாணி பற்றி அந்தக்காலத்தில் சிறுகதை எழுத்தாளரை வழிப்படுத்திய பெருமையை மாதவையாவுக்கும் வ.வே.சு. ஐயருக்கும்தான் கொடுக்கவேண்டும்.

### 'மணிக்கொடி'யின் பின் தேக்கம்

★ வ.வே.சு. ஐயரும் மாதவையாவும் மறைந்த பின்னர் 1933 இல் 'மணிக்கொடி'யுகம் தோன்றும்வரைக்கும் இடைப்பட்ட எட்டு ஆண்டுகள் சிறுகதை வளர்ச்சியில் ஒரு தேக்க நிலை இருந்தது என்பதை ஏற்றுக்கொள்வீர்களா?

இல்லை. இக்காலகட்டத்தை உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ சஞ்சிகைகள் தோன்றி வளர்ச்சி அடைந்தன என்பது தெரிய வரும். அச்சஞ்சிகைகளிலே பல சிறுகதைகள் வெளியாகின.

வெறும் சிறுகதை[illegible] முதல் தடவையாக எழுதிச் சிலர் எழுத்தாளராக கால கட்டத்தில் அங்கீகாரம் பெற்றனர்.

குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களாக கே. எஸ். வெங்கடரமணி, நாரண. துரைக்கண்ணன், தி. ஜ. ரங்கநாதன், கல்கி ஆகியவர்கள் இருந்தனர். இவர்கள் இத்துறையில் பரிசோதனைகளை நடத்தி நியாயமான அளவு வெற்றியும் கண்டனர்.

★ மணிக்கொடி'யின் பங்கு பற்றி எப்படி நீங்கள் மதிப்பிடுகிறீர்கள்?

1933இல் கே. ஸ்ரீநிவாசன், டி. எஸ். சொக்கலிங்கம், வ. ரா ஆகியோர் 'மணிக்கொடி'யை ஆரம்பித்தனர். 'சிறுகதை மணிக்கொடி'க்கு ஆசிரியராக பி.எஸ்.ராமையா இருந்தார்.

தமிழ் இலக்கிய உலகுக்கு மிகச்சிறந்த சிறுகதை எழுத்தாளர்களை 'சிறுகதை மணிக்கொடி' அறிமுகம் செய்து வைத்தது.

சிறுகதைக்கு புதிய பரிணாமத்தை நா. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், மௌனி, பி.எஸ்; ராமையா ஆகியவர்கள் உட்பட எண்ணற்ற ஏனையோர் கொடுத்தனர்.

இவர்களுக்கு இருந்த மேற்கத்திய இலக்கிய விஷய ஞானம் இத்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது.

இக்காலத்தில் சிறுகதைத் துறை போதுமான அளவு போஷிக்கப்பட்டுவந்தாலும் மேற்கத்திய அளவு கோலுக்கு ஏற்றதாக அதுமாற நீண்ட காலம் எடுத்தது.

## சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதில் வெற்றி கண்ட அண்ணா

★ எப்போது என்று உங்களால் கூறமுடியுமா?

சிறுகதை அமைப்பிலான முழுவளர்ச்சியை, அதுபிந்திய 1950 - 1960 களில்தான் பெற முடிந்தது.

'மணிக்கொடி' காலத்தில் புதுமைப்பித்தன் ஆதிக்கம் செலுத்தியது மாதிரி இக்காலத்தில் ஜெயகாந்தன் ஆதிக்கம் செலுத்தினார்.



அண்ணாத்துரை

விந்தன், சுந்தர ராமசாமி, தி. ஜானகிராமன், கு. அழகிரிசாமி, சூடாமணி, ராஜம் கிருஷ்ணன் ஆகியோருடன் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களான தளையசிங்கம், பொன்னுத்துரை ஆகியோரும் உத்தி, அமைப்பு, பொருள், கதை சொல்லும் விதம் ஆகியவற்றின் காரணமாக 1950 - 60 களில் மிகச் சிறந்த எழுத்தாளர்களாக பாராட்டுதல்களைப் பெற்றனர்.

திராவிட எழுத்தாளர்களான அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோரும் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்ப பலனளிக்கக்கூடிய பரிசோதனைகளை நடத்திய அண்ணா, நினைவில் வைத்திருக்கப்படவேண்டியவர்.

'குப்பைத்தொட்டி' போன்ற கதைகளை எழுதியதற்காக கருணாநிதி மதிக்கப்படவேண்டியவர்.

★ பொருளம்சங்களைப் பொறுத்தவரையில் முந்திய காலத்து எழுத்தாளர்களில் இருந்து எந்தவிதத்தில் இவர்கள் வேறுபட்டு இருந்தார்கள்?

முந்திய இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் தமிழ்க் கலாசாரத்தின் பின்னணியில்

## பெண்கள் பிரச்சினையை நன்கு சித்தரிக்கும் ஆண் எழுத்தாளர்

மனித உறவுகளின் சில அம்சங்கள் குறித்து கூடுதல் அக்கறைகொண்டிருந்தனர்.

ஆனால் பிந்திய 1950-1960 களில் இருந்த எழுத்தாளர்கள் இந்த உறவுகளுக்கு அப்பால் சென்று பிரச்சினைகளை ஊடுருவி ஆய்வு செய்தனர்; அத்துடன் மேற்கத்திய தத்துவ அணுகுமுறை பற்றி விஷய ஞானத்தைப் பயன்



சோ. சிவபாதசுந்தரம்

படுத்தி பிரச்சினைகளின் உளவியல் காரணங்களை பகுப்பாய்வு செய்தனர்.

இந்த 10, 15 ஆண்டுக் காலம் தமிழ்ச் சிறுகதைத் துறைக்கு புத்துயிர் கொடுத்தது.

துணிகரமான பரிசோதனைகளை இத்துறையில் செய்யவும் எழுத்தாளர் பலர் முன்வந்தனர்.

### பெண் எழுத்தாளர்கள்

★ சிறுகதைகளில் பெண்களின் பிரச்சினைகள் இடம் பெறுவது பற்றியும் பெண் எழுத்தாளர்கள் பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?

தற்போதுள்ள பெண் எழுத்தாளர்களில் பெரும்பாலோர் வெறும் வசீகரிப்பாளர்களே.

அவர்களை எழுத்தாளர்கள் என்று என்னால் அழைக்கமுடியாது; அவர்கள் பெண் என்பதற்காக அல்ல. அவர்களால் நின்று தாக்குப்பிடிக்க முடியாது.

எமது எழுத்தாளர்களில் மிகச் சிலரே— ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாகயிருந்தாலும் சரி — பெண்களின் பிரச்சினைகளை முற்றாகப் புரிந்துள்ளனர். அந்த மிகச் சிலரில்கூட பொறுப்புணர்வுடனும் சமூக விழிப்புணர்ச்சியுடனும் எழுதுபவர்கள் ஒரு சிலரே.

உண்மையில் பெண் எழுத்தாளர்களிலும்பார்க்க சில ஆண் எழுத்தாளர்கள், பெண்களின் பிரச்சினைகளை சிறந்த முறையில் சித்தரித்துள்ளனர்.

நம்பிக்கையை ஏற்படுத்தி வந்த இரண்டு, மூன்றுபெண் எழுத்தாளர்களும் இப்போது எழுதுவதை நிறுத்திவிட்டனர்.

### பிரதேச மொழிநடை

★ சிறுகதைகளில் பிரதேச மொழி நடை இடம் பெறுவது பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

இரண்டு பாத்திரங்களுக்கு இடையே இடம்பெறும் உரையாடலுக்கு பிரதேச மொழி நடையைப் பயன்படுத்துவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். கூடுதலாகப் பிரதேச மொழியைப் பயன்படுத்துவது, எதிர்பார்க்கும் விளைவைப் பாதித்துவிடும்.

அனைவரும் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய மொழிநடையில் கதை சொல்லப்பட வேண்டும்.

இத்துறையில் முன்னோடிகளான சண்முகசுந்தரம், சின்னப்பா பாரதி, கி. ராஜநாராயணன் ஆகியோர் தங்கள் படைப்புக்களில் நியாயமான அளவு பிரதேச மொழியைப் பயன்படுத்தினர்.

ராஜநாராயணன் உட்பட இன்றைய எழுத்தாளர்கள் சிலர் பிரதேச மொழியைக் கூடுதலாகப் பயன்படுத்துவது எனக்கு பயத்தைத் தருகின்றது.

★ சஞ்சிகைகளின் பங்கு பற்றி உங்கள் அபிப்பிராயம் .........

பருவ இதழ்களும் சஞ்சிகைகளும்தான் மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குவதுடன் ரஸனையையும் விவேகத்தையும் வளர்த்து வருகின்றன.

★ தமிழ்ப் புனைகதைத் துறையின் தற்போதைய நிலையை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?

எல்லாரும் மயக்குபவர்களாக இருக்கின்றனர்......! சால்பு இல்லை. மதிப்பு இல்லை. நேர்மை இல்லை. மதிப்பு இல்லை; எல்லாமே மயக்குவதாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் எம்மத்தியில் உள்ள சஞ்சிகைகளில் பெரும்பாலானவை வெறும்வர்த்தக ரீதியில் செயல்படுவதே ஆகும். அவற்றின் முழு அக்கறை கூடிய விரைவில் பணத்தைப் பெறுவதே. சமூகப் பொறுப்புக்களை அவை தெரிந்து கொண்டதாக இல்லை.

இன்றைய எழுத்தாளர்களில் பெரும்பாலோர் புகழுக்கும் பணத்துக்குமே எழுதுகிறார்கள். சமூகவிழிப்புணர்வோ, ரஸனை அறிவோ கிடையாது.

பிரச்சினைகளைச் சரியாக புரிந்து கொண்டு அதைச் சரியான நோக்கத்தில் வெளிப்படுத்தும் நேர்மையான முயற்சியும் கிடையாது.

பழம்பெரும் எழுத்தாளர்கள் கூட எழுதுவதை நிறுத்திக் கொண்டு விட்டார்கள். அந்த அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது.

தமிழகத்தை வெளி உலகக் கலாசாரம் ஒன்று மூடிமறைப்பது போல் தெரிகிறது.

### எதிர்காலம் உண்டா?

★ அப்படியானால், பொதுவாக சிறுகதை அல்லது தமிழ் புனைகதை இலக்கியத்திற்கு எதிர்காலம் இருக்கிறதா?

நாம் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. நீண்ட சுரங்கப் பாதையின் முடிவில் ஒளியைப் பார்க்கலாம் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

சில மாற்றங்கள் தேவை. சில சிறிய சஞ்சிகைகளுடன் சில ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களும் நல்ல மாற்றம் ஒன்றுக்கான அறிகுறியைக் காட்டி வருகின்றார்கள். ★

## வெட்கம்

உனது
நிர்வாண எழிலை
குளிர்மை தவழும்
ஒளித்
துகள்களை
உலகம்
ரசிக்கட்டும் என
ஏகாந்தமாக
வலம் வரும்
நீ
நான்
மெல்லப் பார்த்தவுடன்
ஏன் தான்
அவசர
அவசரமாக
மேகத் துகிலை
இழுத்து
மூடுகிறாய்......
ஓ......!
நிலவுப் பெண்ணே
அப்படியென்னதான்
அதுவோ ....?

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## போதையின் பாதையில்...

★ நண்பனே!
போதையின் பிடியா?
உன்
பாதைக்கு வழிகாட்டி?
என்னிடம் சொல்!
எந்தத் துன்பத்தை மறக்க
இந்த நரகத்தைக்
காதலித்தாய்?
★ மானிடம் வெறும்
மலர்ப்படுக்கை அல்ல —
நீ
கடந்த பாதையில்
கற்கள் இருந்தால்
பாதையை
மாற்றுவதற்கு பதில்
கால்களை வெட்டிக்
கொள்ளலாமா?

— மணிவண்ணன்

## அன்பே! நீ வந்து விடு என் கைக்குள்!!

எழுதெழுத இனிக்கின்ற கவிதை - நீ
ஏனின்று ஆனாயோ விதவை?
பழுதிலாது மரபுவழி வாழ்ந்த - கவிதை
பாவையுனை யார் நினைத்தார் வீழ்த்த?

எதுகைமோனை நகையொன்றும் இல்லை! - உன்
எழில் சிரிப்பில் வாடியதேன் முல்லை?
முதுமை குன்றாத் தமிழன்னை ஈன்ற - உன்னை
மூத்தமகள் எனப் புகன்றார் சான்றோர்!

சீர்தளைகள் எனும் ஆடை எங்கே? - உன்
சிறுநுதலில் 'தொடைத்' திலகம் எங்கே?
ஆர்வருவார் உனைவாழவைக்க - அடி
அன்பே நீ வந்துவிடென் கைக்குள்!

உருமாறி வாடியதேன் தோற்றம் - நீ
உருக்குலையக் காரணமெக் கூற்றம்
கருவழிப்போர் கைகளுக்குள் சிக்கி - ஏன்
கதறுகிறாய் நாளெல்லாம் விக்கி!

சங்க காலப் புலவர்களின் மடியில் - அன்று
சதாகாலம் வாழ்ந்த தமிழ்க் கொடியே!
கம்பனுடன் இளங்கோவும் போற்றி - உன்னை
காத்தளித்தார் பாரதிக்குத் தூக்கி!

புதுக்கவிதையாளர்களா உன்னை - இன்று
புருஷனில்லா விதவையாக்கினார்கள்?
பதிவுவைத்து நானுன்னை மணப்பேன் - அன்றேல்
பாவலன்நான் உன்னோடு இறப்பேன்.

— செ. குணரத்தினம் —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அழிவில் இருந்து காப்பாற்ற 'அணுகுண்டு' நிபுணரின் புத்திமதி!

அணுக்குண்டு தயாரிப்பில் முக்கிய இடம்வகித்தவர் விஞ்ஞானி ஒப்பன் ஹீமர்.

முதல் அணுக்குண்டை உருவாக்கியதும் அதன் சக்தி, ஏற்படும் சேதம் முதலியன பற்றி கருத்தரங்கு ஒன்று நடந்தது.

அதில் பேசுவதற்கு ஒப்பன் ஹீமர் சென்றிருந்தார். விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்கள் அங்கு குழுமியிருந்தனர்.

அணுக்குண்டை பயன்படுத்துவதன்மூலம் நேரும் பயங்கரமான அழிவுகள் பற்றி மிக விளக்கமாக ஒப்பன்ஹீமர் அந்தக் கருத்தரங்கில் எடுத்துக் கூறினார்.

அவையில் அந்தத் தகவல்களைக் கேட்டு கவலைதோய்ந்த முகத்தினராக அமர்ந்திருந்தனர்.

அப்போது ஒருவர் எழுந்தார்...

ஐயா! ஓர் அழிவு சாதனத்தை இத்தனை வலிமையோடு உருவாக்கியிருப்பது சரி... அதேசமயம் இத்தனை பெரிய அழிவிலிருந்து நம்மை மீட்பதற்கும் ஒரு சாதனத்தைக் கண்டுபிடிப்பது உடனடி அவசியமல்லவா?... என்று கேட்டார்.

உடனே ஒப்பன் ஹீமர் எழுந்து, இந்த அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும் ஓர் அற்புத சாதனம் இருக்கிறது '—என்று கூறி சற்றுநிறுத்தினார்.

அவையோர் ஆர்வம் பொங்க, 'அப்படியா! அதைப் பற்றியும் கொஞ்சம் கூறுங்கள்' —என்று கேட்டனர்.

உடனே ஒப்பன் ஹீமர், 'அந்த சாதனம்தான் உலக சமாதானம்' என்று ஒரேவரியில் கூறினார் ஒப்பன்ஹீமர்.

★

## புளோரினுக்கு வயது 100

1886, ஜூன் 27, ஞாயிற்றுக்கிழமை ஒரு பெண்மணி தனது இளம் மகனுடன் பாரீசில் ஒரு தெருவில் நடந்து போய்க்கொண்டிருந்தாள்.

அப்போது அங்கிருந்த ஓர் ஆய்வகத்தின் ஜன்னல் கதவு திடீரென்று திறந்து கொண்டது.

அதிலிருந்து ஒரு தலை எட்டிப் பார்த்து, 'வேலை செய்கிறது, வேலை செய்கிறது'! என்று கத்தியது.

அது வேறு யாருமில்லை. அந்தப் பெண்மணியின் கணவர்தான்.

அவருடைய பெயர் ஹென்றி மொய்சான் (Henri Meissan).

அவர் அப்போதுதான் புளோரினைப் பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டிருந்தார்.

பாரடே டேவி போன்ற நிபுணர்கள் செய்ய முயன்று தோற்றுப்போன காரியத்தை அவர் சாதித்துவிட்டதால், அவரது உற்சாகக் கூச்சல் நியாயமானதே.

பிளாட்டின் மின்வாய்கள் பொருத்தப்பட்ட ஒரு 'U' வடிவக் குழாயில் -50 செல்சியஸ் டிகிரி வெப்பநிலைக்கு குளிர வைக்கப்பட்ட நீரற்ற ஹைட்ரோ புளோரிக் அமிலத்தை (Unhydrous hydro--fluoric acid) வைத்து அதன் வழியாக மின்னோட்டத்தைச் செலுத்தியபோது ஒரு முனையில் ஹைட்ரஜனும், மறுமுனையில் புளோரினும் வெளிப்பட்டன.

புளோரினை சிலிக்கான் படிகங்களின் மேல் பாய்ச்சின போது அவை வெடித்துப் பிரகாசமான ஜுவாலையுடன் எரிந்தன.

புளோரினில் பொஸ்பரத்தை ... போட்டால், அது தானாகவே தீப்பிடித்து எரிந்தது.

புளோரினில் கந்தகத்தைப் போட்டபோது, கந்தகம் விரைவாக உருகியது.

1906 ஆம் ஆண்டில் மொய்சானுக்கு நோபல் பரிசு கிடைத்தது.

இரண்டு மாதங்கள் கழித்து மொய்சான் தமது 54 ஆவது வயதில் காலமானார்.

★

## தன்னிடத்தில் நம்பிக்கை அற்றவனே நாத்திகன்!

யார் நாத்திகன்?

இதற்கு சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு பதிலளித்திருக்கிறார்;



விவேகானந்தர்

எவன் ஒருவன் இறைவனிடத்திலே நம்பிக்கை அற்று இருக்கிறானோ அவனை முற்காலத்தில் நாத்திகன் என்று கூறினார்கள்.

ஆனால், எவன் தன்னிடத்திலே நம்பிக்கையற்று வாழ்கின்றானோ அவனையே இன்று நாத்திகன் என்று கூறுவேன்.

இந்த உலகத்தில் பாவம் என்று ஒன்று உண்டானால் அது 'நான் பலவீனமானவன் அவன் பலவீனமானவன் என்ற பேச்சும் சிந்தனையுமே ஆகும்.

இப்படி சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார்.

★

## குதிரை வீரர் சிலை பற்றி . . .

குதிரைமீது அமர்ந்துள்ள மாதிரி மன்னர்கள், போர் வீரர்களின் நினைவுச் சின்னங்களை கல்லில் செதுக்கும்போது சிற்பக்கலைஞர்கள் ஒரு நடைமுறையைக் கையாண்டு வருகின்றனர்.

ஒரு போர்வீரர் அமர்ந்து இருக்கும் குதிரை தனது நான்கு கால்களையும் நிலத்தில் ஊன்றியபடி நிற்பதாக சிலை வடிக்கப்பட்டால்...... அந்தப் போர்வீரர் இயற்கையாக மரணமடைந்தார் என்பது தான் கருத்து.

ஒரு காலை உயர்த்தியபடி குதிரை நிற்பதாக செய்யப்பட்டால்... போர்க்களத்தில் பட்ட விழுப்புண் காரணமாக அவ்வீரர் பின்னர் மரணமடைந்தார் என்பது கருத்து.

குதிரை இரண்டு முன்னங் கால்களைத் தூக்கியபடி நின்றால்... அந்த வீரன் போரில் உயிர்நீத்தான் என்று எடுத்துக்கொள்ளப்படும். ★

## தோற்ற முரண்பாடு என்றால் என்ன?

வீதியில் ஒரு பொலீஸ்காரர் நின்றுகொண்டு நம்மைப் பார்த்து 'ஓரம்போ' என்று சொல்கின்றார்.

நாம் அதற்கு அவரைப் பார்த்து 'நீங்கள் மட்டும் நான்கு வீதிகள் சந்திக்கும் இடத்தில் நின்றுகொண்டு எங்களை ஓரம்போ என்று சொல்கிறீர்களே' என்று கேட்கமுடியுமா? முடியாது.

அதுபோல் மாணவர்கள் வகுப்பில் சளசள என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

அமைதியை விரும்பும் ஆசிரியர் 'சைலன்ஸ்' என்று கத்தத்தான் வேண்டும்.

இம்மாதிரியான நிகழ்ச்சிகளை நாம் 'தோற்ற முரண்பாடுகள்' என்று அழைக்கின்றோம்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இவை விநோதமாகத் தெரிந்தாலும் நடைமுறையில் இவை இப்படித்தான் இருக்கின்றன. இருக்கும்.

தோற்றத்தில் முரண்பாடுள்ளதாக ஒரு வாதம் தென்பட்டாலும் அதுதான் நடைமுறை என்று ஆகும்போது, அதனை நாம் 'தோற்ற முரண்பாடு (Paradox) என்று அழைக்கலாம்.

பொருளாதாரத்தில் தோற்ற முரண்பாடுகளுக்கு பஞ்சமில்லை.

ஆடம் ஸ்மித் 'பொருளின் மதிப்பில் தோற்ற முரண்பாடு' என்ற ஒன்றை விவரிக்கின்றார்.

தண்ணீரின் பயன்பாடு நமக்கு தெரிந்ததே.

'நீரின்றமையாதுலகு' என்றார் வள்ளுவர்.

உயிர்வாழ்வதற்குத் தண்ணீர் வேண்டும். ஆனால் தண்ணீருக்கு நாம் விலையும் கொடுப்பதில்லை.

அதே நேரத்தில் தண்ணீரோடு ஒப்பிடும்போது வைரத்தின் பயன்பாடு குறைவு தான். ஆனால் அதற்கு அதிக விலைகொடுக்கிறோம்.

இது ஒரு முரண்பாடுதானே!

தண்ணீர் அதிக பயனுள்ள பொருள் என்றாலும் அது தாராளமாகக் கிடைக்கும்போது நாம் அதற்கு விலை கொடுத்து வாங்குவதில்லை.

தண்ணீரைப் போல வைரமும் தெருவெங்கும் கிடந்தால் அதற்கும் மதிப்பு இருக்காது. விலை இருக்காது.

சந்தனம் மிஞ்சினால் காலெல்லாம் பூசிக்கொள்வார்கள் என்பது நடைமுறை தானே! ★

## அமெரிக்கப் படைத் தளத்தை திணற வைக்கும் பாம்புகள்!

ஒரு பிராந்தியத்தில் புதியதோர் உயிரினம் தெரிந்தோ தெரியாமலோ அறிமுகப்படுத்தப்பட்டால் விபரீதங்கள் நிகழலாம் என்பதற்கு குவாம் (Guam) தீவில் ஏற்பட்டுள்ள பாம்புப் பிரச்சினை ஓர் எடுத்துக்காட்டாகும்.

பழுப்பு மரப்பாம்பு (Boiga Irregularis) எனப்படும் இப்பாம்புகளின் எண்ணிக்கை பெருகுவதைக் கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சியில் நிபுணர்களை ஈடுபடுத்துகிற அளவிற்கு பாம்புப் பிரச்சினை முற்றியுள்ளது.

பசிபிக் கடலில் உள்ள குவாம் தீவின் நிலப்பரப்பு சுமார் 200 சதுரமைல். இத்தீவு அமெரிக்காவுக்குச் சொந்தமானது. அமெரிக்காவின் முக்கிய படைத்தளம் ஒன்று இத்தீவில் உள்ளது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தீவில் பழுப்பு



நிறப்பாம்பு இனமே கிடையாது. இத்தீவில் மிக நெடுங்காலமாக இருந்து வந்த பாம்பு வகைகள் தீங்கற்றவை. அவற்றுக்குக் கண்ணும் கிடையாது.

1950 ஐத் தொடர்ந்த ஆண்டுகளில்தான் பழுப்பு நிறப்பாம்பு இத்தீவுக்கு வந்து சேர்ந்தது.

குவாம் தீவுக்கு வடக்கே உள்ள பாப்புவா நியூகினியில் இருந்து அனுப்பப்பட்ட ராணுவத் தளபாடப்பெட்டிகள் மூலம் இப்பாம்புவகை இத்தீவுக்கு வந்து சேர்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இப்போது குவாம் தீவு காடுகளில் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 4 ஆயிரத்து 600 பாம்புகள் வீதம் உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

இப்பாம்புகளால் குவாம் தீவுக்கே உரிய 12 வகைப் பறவைகளில் 11 வகைப் பறவைகள் அழிந்துவிட்டன.

12 ஆவது வகைப் பறவை இனமும் அழிந்துவிடும் நிலையில் உள்ளது.

மூன்று வகையான வெளவால் இனங்கள் அழிந்துவிட்டன. பலவகையான பல்லி இனங்கள் நசிந்துவிட்டன.

1984 ஆம் ஆண்டிலிருந்து 500க்கும் அதிகமான மின்விநியோகத் துண்டிப்புக்கும் இப்பாம்புகளே காரணம் என்றும் அறிவிக்கப்பட்டது. ★

## நெப்போலியன் வாழ்வில்...

மாவீரன் நெப்போலியன் பிரான்ஸ் நாட்டிலிருந்து பெரும் படையுடன் புறப்பட்டு ஒவ்வொரு நாடாக வீழ்த்திக்கொண்டேவந்தான்.

மிக தொலைவிலுள்ள ஒரு நாட்டுப் பத்திரிகை இந்தப் போர்கள் பற்றி செய்தி வெளியிட்டுக்கொண்டுவந்தது.

நெப்போலியன் தொலைவில் இருக்கும்போது வார்த்தைகள் ஒருவிதமாகவும், அவன் நெருங்கி நெருங்கி தங்கள் நாடருகே வரவர வேறுவிதமாகவும் அந்தச் செய்திகளின் வர்ணனைகள் அமைந்தன.

முதலில் நெப்போலியன் வெகு தொலைவில் இருந்த போது:

'நாசகாரன் நெப்போலியன் படைகள் புகுந்து அராஜகம்'

மேலும் நெப்போலியன் படை முன்னேறியபோது,

பிரான்ஸ் அதிபர் நெப்போலியன் படைகள் கடும் மோதல்.

மிக அருகிலேயே நெப்போலியன் வந்துவிட்டபிறகு.

'மகா சக்கரவர்த்தி நெப்போலியனின் வெற்றிப் படையின் திக் விஜயம்!' ★

## பொன் மொழி

பொய்யுக்கு மூப்பு உண்டு. ஆனால் உண்மை நாளுக்கு நாள் இளமையைப் பெறும்.

★ ★ ★

குறிப்பிட்ட எல்லையைத் தொடும் வரை பந்தைத் தொடர்ந்து செல்பவன்தான் புத்திசாலியான விளையாட்டு வீரன்!

ஒரு உதை உதைத்துவிட்டு விலகிச் சென்றால் எதிர் அணியினர் அந்தப்பந்தைத் தடுத்து விடுவர்.

அதைப்போலதான் எடுத்த எந்த ஒரு செயலையும் தொடர்ந்து முயற்சியுடன் செய்பவனே அறிவாளியாகிறான்.

★

## மடகாஸ்கரில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகை லெமூர் இனம்!

புதியவகை லெமூர் இனம் ஒன்று ஆபிரிக்காவுக்குக் கிழக்கே உள்ள மடகாஸ்கர் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தீவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள காடுகளில் இந்த இன லெமூர்கள் சுமார் 100 இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழக பிரைமேட் (Primate) கேந்திரத்தைச் சேர்ந்த விலக்கியல் நிபுணர் எல்வின் சைமன்ஸ் இப்புதிய லெமூர்களைக் கண்டுபிடித்துள்ளார்.

இப்புதிய இனத்துக்கு அவர் (Propitheurs pattersalli) என்று பெயரிட்டுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல விலங்கியல் நிபுணர் Lan Pattersall 1971 ஆம் ஆண்டில் மடகாஸ்கர் தீவில் முதன் முதலாக இந்த லெமூர்களைக் கண்டுபிடித்தார்.

ஆனாலும் இவை Diadem Eitaka Propithecus Diadema இனத்திலிருந்து வேறுபட்டவை என்று அவர் உணரவில்லை.

எனினும் முதன் முதலில் அவற்றைக் கண்டுபிடித்தவர் என்பதால் லெமூர்களுக்கு [illegible] வாறு பிபேட்டர்சாலி என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது;

பொதுவில் லெமூர்கள் வடிவில் சிறியவை, சிலவகை லெமூர்களின் எடை 100 கிராமுக்கும் குறைவு;



லெமூர்

இப்போது கண்டறியப்பட்ட [illegible] மேற்கூறிய எடை 2 முதல் 4 கிலோ வரை [illegible]

P.Diadema வகை லெமூர்கள் இதைப்போல இரண்டு மடங்கு எடை உள்ளவை.

புதியவகை லெமூரின் உடல் முழுவதும் குட்டையான, பெரிதும் வெண்மையான ரோமம் அடர்ந்து காணப்படுகிறது.

அதன் ரோமம் மண்டிய காதுகள் எடுப்பாக உள்ளன. தலை உச்சியில் பொன் நிறமும் ஆரஞ்சு நிறமும் கலந்த ரோமம் காணப்படுகிறது. இவையெல்லாம் இந்தவகை லெமூரின் குறிப்பிடத்தக்க அம்சங்களாக உள்ளன.

உலகில் இப்புதியவகை லெமூர் உட்பட லெமூர்களில் 5 வகைகள் உள்ளன. இவை காடுகளில் வாழ்பவை. காடுகள் சுருங்கி வருவதால் இந்த 5 வகைகளுமே நசிந்துவிடுமோ என்று அஞ்சப்படுகிறது.

மடகாஸ்கரில் காடுகள் அழிந்து வருவதன் காரணமாக மேற்படி புதிய லெமூர்கள் சிறு சிறு பகுதிகளில் சிதறுண்டு வாழ்கின்றன;

இவற்றையெல்லாம் பிடித்து ஒரே இடத்தில் வாழும்படி செய்யவேண்டும். அத்துடன் இவற்றைக் கூண்டுகளில் வளர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

அப்போதுதான் இவை நசிந்துவிடாமல் காக்க முடியும் என்று எல்வின் சைமன்ஸ் கருத்து கூறியுள்ளார்.

தமக்கு முன்னால் யாரும் இவை தனி வகையைச் சேர்ந்தவை என்று கண்டுபிடிக்காமல் போனது பற்றி அவர் வியப்புத்தெரிவித்தார். ★

## பெண்ணை அழவைத்தால்....

பாரதப்போர் நடந்து கொண்டிருக்கிறது.

துரியோதனன் பக்கம் பெருத்த சேதம்.

காரணம் தெரியாமல் துரியோதனன் தளபதியான பீஷ்மரை நோக்கி ஓடி வந்து கேட்கிறான்:

'நம் சேனையின் பலம் என்ன?'

'11 அக்குரோணி'

'எதிரி சேனையின் பலம் என்ன?'

'7 அக்குரோணி'

'மிகப் பெரிய வீரர் என்று நங்களைத்தானே சொல்லுகிறார்கள்?'

'ஆம்'

தாங்கள் தானே எங்கள் தளபதி:

ஆம்!

'பின் ஏன் நாம் தோற்று வருகிறோம்? நமக்கு ஏன் இத்தனை சேதம்?'

'நீதான் சொல்லேன்?'

இந்தக் கேள்விகளைத் துரியோதனன் பீஷ்மரைத் திரும்பத் திரும்பக் கேட்கிறான்.

கடைசியில் பீஷ்மர் பதில் சொல்லுகிறார்:

'அன்று அரச சபையில் ஒரு பெண்ணை அவமானப் படுத்தி அழவைத்தீர்களே அந்தப் பெண் வடித்த கண்ணீர்தான் இதற்குக் காரணம்' என்கிறார்;

ஆம், ஒரு பெண் மனம் நொந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தாலும்போதும்: அந்தக் குலம் அழிந்துவிடும்— என்று சொன்னார் புலவர் கீரன்.

★

## கடவுளின் கருணை !

பெரும்புலவர் ஒருவர் இருந்தார்.

இயற்கையில் கண்பார்வையற்றவராக அப்புலவர் இருந்தாலும் முக்காலத்தையும் உணரும் ஞானக்கண் அவருக்கு இருந்தது...

ஆனால் அந்நாட்டு மன்னன் பிறவியிலேயே அகந்தையுள்ளவன் என்பதால், யாரையும் ஏளனமாகவே பேசுவான்...

அவ்வழக்கப்படி இப்புலவரையும் கேலிபுரியும், இழிகுணம் அவனிடம் இருந்தது.

ஒரு நாள் மன்னன் அப்புலவரை அவமானப்படுத்த வேண்டும் என்ற அவாவுடன் அவரிடம் பேச்சுக் கொடுத்தான்.

'புலவரே... ஒரு சந்தேகம்!'

'சொல்லுங்கள் மன்னா...'

'இறைவன் கருணை உள்ளவன்தானே?'

'நிச்சயமாக!'

'அவன் ஒருவருக்கு ஏதாவது ஒன்றில் குறை வைத்தால், இன்னொன்றில் நிறைவு தருவது வழக்கமல்லவா?'

'உண்மைதான் மன்னா!'

'அப்படியானால், உமக்குப் பார்வை இல்லாத குறையைத் தந்த இறைவன் அதற்குப் பதிலாக எந்தச் சிறப்பையும் தரவில்லையே... ஏன்?'

என்று கேட்டு, புலவரை நையாண்டி புரிந்த திருப்தியில் மன்னன் புன்னகை பூத்தான். புலவரோ அவன் மனோ நிலையைப் புரிந்து கொண்டார். அவர் சொன்னார்...

இல்லை மன்னவா, இறைவன் எனக்குக் கண் பார்வையை இல்லாமல் செய்ததே அவன் பெருங்கருணையினால் எனக்குச் செய்த சிறப்புதான்.

'அவன் எனக்குப் பார்வையை மட்டும் தந்திருந்தால், என் முன்னே உளறுபவன் முகத்தையெல்லாம் பார்த்துச் சகிக்க வேண்டிய சங்கடம் அல்லவா எனக்கு நேர்ந்திருக்கும்!'

— என்று புலவர் சொன்னதும் சரியாக வாங்கிக் கட்டிய அவமானத்தில் மன்னன் தலை குனிந்தான்! ★

## 'ஷா' வின் வீடு

உலகப் புகழ்பெற்ற தத்துவஞானி பெர்னாட்ஷா.

அவரின் பெயரில் அயர்லாந்து நாட்டில் வீடு ஒன்று விற்பனைக்கு வந்திருக்கிறது.

அவரது ரசிகர்கள் சேர்ந்து வீட்டைவாங்கிகாட்சியகமாக மாற்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

★

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் ...ன் யோக நிலை

...தொடர்ந்
...செய்யும் தவ
...யும் நாம் அனு
...ர வேண்டும்:

'மீனைப் பலதரம்
நல்ல தண்ணீரால்
நாளும் கழுவினும் அதன்
நாற்றம் போமா?
கூறும் உடல் பல
நதியாடிக் கொண்டதால்
கொண்ட மலம் நீங்கா
தென்று ஆடுபாம்பே'

எனப் பாம்பாட்டிச் சித்தர் தனது பாடலினூடாக விளக்குகிறார்.

**சமயக் கோட்பாடு**

சித்தர்கள் தங்களுடைய கொள்கைகளை மறைவாக வைத்துக் கொள்வதற்கு ஒரு குழூ உக்குறியினைப் படைத்துக் கொண்டனர். திருமந்திரத்தில் சூனிய சம்பாஷணை என்னும் பகுதியில் இதனைக் காணலாம்.

சித்தர்கள் இயற்றி பலவத்திய நூல்களிலும் இக்குழூ உக்குறிகளை அறிந்தாலன்றி இந்த நூல்களில் கூறப்பட்டுள்ள விடயங்களை விளங்கிக் கொள்வது கடினமாக உள்ளது.

**பொருள் பொதிந்த பாடல்கள்**

சாதாரண நிலையில் உள்ளவர்க்கு எளிமையாகத் தோற்றம் அளிக்கும் சொற்களால்

யன்படுத்தினர். பேச்சுமக்கு மொழியை இலக்கியத்தில் புகுத்தியவர்கள் சித்தர்களே.

இவர்களைப் பின்பற்றியே குறவஞ்சி, பள்ளு போன்ற இலக்கியங்கள் தோன்றின. இவர்களில் பலர் சீர்திருத்தவாதிகளாகத் திகழ்ந்தார்கள். சாத்திரம், சமயம், சடங்கு ஆகியவற்றைப் பலமாகக்கண்டித்தார்கள்.

**திருமூலர்**

சிவனருள் பெற்றுச் சிவமேயாய் சிவலோகத்தில் வாழும் வாழ்வே சித்தர்கள் வாழ் வாகும். சிவஞானசித்தருள் ஒருவராகத் திருநந்திதேவரின் மாணவராகத் திருக்கயிலாய மலையிலே சுந்தரநாதன் என்ற இயற்பெயருடன் இருந்த தவயோகி தமிழ்நாட்டின் சாத்தனூர் என்ற கிராமத்திலே வாழ்ந்த மூலன் ஆகிய இடையனின் உடம்பினுள்ளே புகுந்து திருமூலர் ஆன வரலாற்றை நாம் பெரியபுராணத்திலே காண்கிறோம். சித்தர்கள் அனைவருக்கும் முன்னோடியாக வாழ்ந்த சித்த புருஷர் இவரேயாவர்.

'மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே'

எனத் தாயுமானவரும் திருமூலரையே சித்தர் மரபின் மூலவராகக் கொள்கிறார். தவமுனிவனின் தமிழ் மந்திரமாகிய திருமந்திரம் ஆகமக் கருத்துக்களை விளக்கும் உயர் நூலாக இருந்த பொழுதிலும் நலமான வாழ்விற்கு வழி காட்டும் வாழ்க்கை நூலாகவும் திகழ்கிறது.

**தவயோகியின் சிவ வாழ்வு**

பன்னிரு திருமுறைகளில் சிவமணம் கமழும் வரலாற்று நூலாகிய பெரியபுராணத்தை நமக்குத் தந்த சேக்கிழார் சுவாமிகளால் போற்றிப் புகழப்பட்ட நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்பவரே திருமூலர் ஆவார்.

அடியார்களின் அற்புதமான வரலாறாகிய பெரிய புராணம் வருகை தந்த தமிழ் வளர்த்த ஞான சம்பந்தன் 'தமிழ் மணக்குது, தமிழ் மணக்குது' என்று கூறி நிலத்தை அகழ்ந்த போது திருமந்திரச் செப்பேடுகள் கண்டு பிடிக்கப் பட்டதாகவும் செவி வழிக் கதை ஒன்று மக்களிடம் நிலவி வருகிறது.

இக் கதையையும் ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் சம்பந்தர் காலத்திற்கும் முந்தியவராகத் திருமூலரைக் கருத முடிகிறது. அத்துடன் இவரது பாடல்கள் நான்கு அடிகளைக் கொண்டு ஓரடிக்கு நான்கு சீரமைந்த பாடல் களாகும்.

இவருடைய பாடல்கள் சங்ககாலப் பாடல்களின் இயல்புடையவை. ஆகவே இவர் சங்ககாலத்தைச் சேர்ந்த புலவர் என்றே கூறக் கூடியதாக உள்ளது.

நந்தியம் பெருமானின் திருவருள் பெற்று நான்கு மறைகளையும் அறிந்த யோகியருள் ஒருவராக எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றுத் திகழ்ந்து தவயோகி, பொதிகை மலையிலுள்ள அகத்திய முனிவரைக் காண்பதற்காகக் கயிலையில் இருந்தும் புறப்பட்டு பாரத நாட்டின் பழம் பெரும் தலங்களையெல்லாம் தரிசித்துக் கொண்டு சைவப் பெருமக்களால் கோயில் எனப் போற்றப் படும் அம்பலக் கூத்தன் ஆனந்த நடனமாடும் சிதம்பரம் நடராஜப் பெருமான் சந்நிதிக்கு வருகை தந்தார்.

பின்பு அங்கிருந்து காவிரியாற்றின் கரையில் இருக்கும் சாத்தனூர் என்ற கிராமத்திற்கு வந்தார்.

அங்கே தங்களுடைய எஜமானனாகிய இடையன் சடுதியாக இறந்திருப்பதை அறிந்த பசுக்கூட்டங்கள் அவனைச் சுற்றிய வண்ணம் இருந்து கண்ணீர் விடுவதைக் கண்டார்.

அந்தப்பசுக்கள் படும் வேதனையைக் கண்ட தவயோகியினுடைய உள்ளத்திலே கருணை ஊற்றெடுத்தது. இவை படும் வேதனையைத் தீர்க்க வேண்டும் என்று விரும்பினார் திருமூலர்.

தான் கற்ற சித்துக்களில் ஒன்றாகிய கூடு விட்டுக் கூடு பாய்தல் என்னும் சித்தைப் பயன்படுத்தி இடையனாகிய மூலனுடைய உடம்பினுள்ளே தன்னுடைய உயிரைப் பாய்ச்சி அவனை உயிர்பெற்று எழச் செய்தார்.

பசுக்கூட்டங்கள் மகிழ்ச்சியால் பூரிப்படைந்தன. இடையனுடைய உடம்புடன் தவயோகியினுடைய உயிர் சங்கமமாகியது. மாலை நேரம் வந்ததும் பசுக்களை அழைத்துச் சென்ற இடையனை மனைவி எதிர்கொண்டு அழைத்தாள்.

காலையில் வீட்டிலிருந்து புறப்பட்ட தனது கணவன் வேறு, மாலையில் திரும்பி வீடு வந்திருக்கும் இடையன் வேறு அவள் தத்தளித்தாள்.

ஊரிலுள்ள பெரியவர்களிடம் சென்று முறையிட்டாள். அனுபவமும் அறிவும் மிக்க பெரியோர்கள் இந்த இடையனின் தன்மையைப் பரிசோதித்தார்கள்.

சிவபோகப் பேரின்பத்தைப் புசித்திருக்கும் தவயோகி அவரென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.




ஆழ்ந்த பொருளைப் பொதித்து வைத்துப் பாடுபவர்கள் சித்தர்கள்.

நமது ஆயுர்வேத வைத்தியர்கள் உடற்பிணி தீர்க்கும் மருந்துகளைத் தேனில் சர்க்கரையில் சேர்த்துக் கொடுப்பதுபோல உயர்ந்த தத்துவக் கருத்துக்களை எளிமையான நடையில் கூறும் ஆற்றல் படைத்தவர்களாகச் சித்தர்கள் திகழ்ந்தார்கள். இதனை ஏமாற்றும் எளிமை எனக் குறிக்கலாம்.

'மாங்காய்ப்பாலுண்டு
மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பாலேதுக்கடி?
— குதம்பாய்
தேங்காய்ப் பாலேதுக்கடி?

யோக மார்க்கத்தின் வழி நின்று குண்டலினியை மேலேற்றி அமிர்தத்தைச் சுவைக்கும் இயல்பு யோகியருக்கு உண்டு. இச்செயலை உச்சியில் பிச்சையெடுத்தல் என்பர். இவ் அமுதத்தைத் தான் மாங்காய்ப்பால் என்கிறார் குதம்பைச் சித்தர்.

**மந்திர எழுத்துக்கள்**

சித்தர்கள் குழூ உக்குறிகளைப் பயன்படுத்தியது போலவே மந்திர எழுத்துக்களையு (Mystical Letters) பயன்படுத்தியுள்ளனர். சித்தர் மரபில் மந்திரம், யந்திரம், தந்திரம் என மூன்று உள்ளன. யந்திரம் என்பது வரைகின்ற சக்கரம். இவ் யந்திரத்தில் எழுதப்படும் எழுத்துக்கள் மந்திரம் எனப்படும்.

இம்மந்திர எழுத்துக்களுக்கு உயிரூட்டும் முறைமையே தந்திரம் ஆகும். பெரிய ஆற்றலின் மிகச் சிறிய வடிவமே மந்திரம் ஆகும்.

அறிவியலில் குறியீட்டு எழுத்துக்கள் பயன்படுத்தப் படுவன போல சித்தர் இலக்கியங்களில் மந்திர எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சித்தர்கள் மக்கள் வழக்கில் இருந்த யாப்பைப் பயன்படுத்தியது போலவே மக்கள் வழக்கில் இருந்த சொற்களையும்

எழுவதற்கு மூல காரணமாயிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' எனத் திருமூலரைப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

பிறந்து பிறந்து உழல்கின்ற பிறவிப் பிணியில் இருந்து நாம் விடுபட வேண்டுமாயின் தவயோகியாகிய திருமூலரை நாம் சிந்தையில் இருத்தி வணங்க வேண்டும் என்பதைத்

'திருமூல தேவனையே
சிந்தை செய்வார்க்குக்
கருமூலம் இல்லையே காண்'

என்று பெயர் அறியாப் புலவர் ஒருவர் பாடியிருக்கிறார்.

'சக்கரவர்த்தி தவராச
யோகி எனும் மிக்க திருமூலன்
அருள் மேவு நாள் எந்
நாளோ?'

எனத் தாயுமானவர் திருமூலரைப் போற்றித் துதிக்கிறார். இவர் நந்தி அருள் பெற்றவர். நான்கு வேதங்களை உணர்ந்த யோகி.

**- சிவ. மகாலிங்கப் பி. ஏ. -**

அட்டமாசித்திகள் அனைத்தும் கைவரப் பெற்றவர். சைவநெறியின் உண்மையை உணர்ந்த தவசிரேஷ்டர் எனப் பலவாறு பெரிய புராணத்திலே இருபத்திரண்டு பாடல்களிலே சேக்கிழாரால் போற்றப்படுகிறார்.

இவர் வாழ்ந்த காலத்தைப் பற்றிப் பல்வேறு விதமான கருத்து வேறுபாடுகள் வரலாற்றாசிரியர்களிடம் உண்டு. திருத்தொண்டத்தொகையை நமக்குத் தந்த சுந்தரர் வாழ்ந்த காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு ஆகும்.

திருமூலரை அறுபத்து மூவரில் ஒருவராக இவர் குறிப்பிட்டிருப்பதால் சுந்தரருக்கு முந்தியவராகவே அவர் காணப்படுகிறார்.

திருவாவடுதுறையிலே செப்பேடுகளில் எழுதப்பட்ட திருமந்திரம் புதைத்து வைக்கப் பட்டிருந்தது என்றும் அங்கே

இவருக்குப் பித்தம் பிடிக்கவுமில்லை, பேய் பசாசுகள் அவரில் குடிகொள்ளவும் இல்லை, சித்தம் முழுவதும் சிவன் பால் சென்று விட்டது என்பதைத்தாமும் உணர்ந்து, கலங்கிய வண்ணம் இருந்த இடையனின் மனைவிக்கும் உணர்த்தினர்கள்.

'பித்துற்ற மயிலன்று பிறி
தொரு சார்புளதன்று
சித்த விகற்பம் களைந்து
தெளிந்த சிவயோகத்தில்
வைத்த கருத்தினராகி
வரம்பில்
பெருமையிலிருந்தார்
இத்தகைமை அளப்பரிதால்
யாராலும் என
உரைப்பார்'

என அவரின் தெளிந்த யோக நிலையைப் பெரியபுராணம் தெளிவாகக் காட்டுகின்றது.

(தொடரும்)

## உதய / அஸ்தமன -சூரியன்சிவப்பாகக்காணப்படுவதேன்?

காலையில் சூரியன் உதிக்கும்போது அது செந்நிறப் பந்து போலக் காணப்படுகிறது. நேரம் ஆக ஆக சூரியன் வெண்ணிறமாக மாறத் தொடங்குகிறது.

ஆனால் மாலையில் சூரியன் மறையும் நேரத்தில் மீண்டும் செம்மை நிறமாகிறது காலையிலும் மாலையிலும் சூரியன் செந்நிறமாகக் காரணம் உங்களுக்குத் தெரியுமா?

பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பது நாம் அறிந்ததே. பூமியில் சூரியஒளிபடும் பகுதி பிரகாசமாகக் காண்கிறது. இப்பகுதியில் பகல்நேரம் நடப்பதாக நாம் கூறுகிறோம்.

சூரியஒளி உண்மையில் ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகிய ஏழுவண்ணங்களின் கலவை என்பதும் நமக்குத் தெரியும்.

காலை, மாலை நேரங்களில் சூரியன் தொடுவானத்தின் அருகில் இருக்கும்போது அதன் கிரணங்கள் வாயுமண்டலத்தில் நெடுந்தூரம் ஊடு கடந்து நம்மை வந்தடைகின்றன.

மதியத்தில் இத்தனை தூரம் கடக்கவேண்டியதில்லை. வாயு மண்டலத்திலுள்ள புழுதி என்பன புகை மற்றும் நீராவி சூரிய கிரணங்களில் மஞ்சள், ஆரஞ்சு மற்றும் சிவப்பு தவிர மற்ற நிறங்களை சிதறடித்து விடுகின்றன.


அதனால்தான் காலை, மாலை நேரங்களில் சூரிய கிரணங்களிலுள்ள ஊதா, நீலம் மற்றும் பச்சை நிறப்பகுதிகள் மிகமிகக் குறைவாகவே நம் கண்களுக்குத் தெரிகின்றன.

கண்ணுக்குத் தென்படும் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு நிறங்களிலும் சிவப்பு நிறம்தான் அதிகமாகத் தெரிகிறது.

அதனால் இந்த மூன்றுவண்ணங்களின் கலவை சிவப்பாகவே தெரிகிறது. இதன் பயனாக உதயசூரியனும், அஸ்தமன சூரியனும் அனேகமாக செந்நிறமாகவே காணப்படுகிறது; ★

## காந்தியின் சிக்கனம்!

புதுத்துணி கிடைத்தால் முதலில் அதை வேட்டியாக அணிந்து கொள்வார் காந்திஜி. அது கிழிய ஆரம்பித்ததும் தோளில் போர்த்துக் கொள்ளும் துணியாக மாறும். கிழிந்தாலும் ஒட்டுப்போட்டு பலமுறை அவற்றை உபயோகிப்பார்.



காந்தி

பின்னர் படுக்கை விரிப்புகளாகவும், தலையணை உறைகளாகவும் அவை உருவெடுக்கும். அதற்கும் தகுதியில்லாமல் போனபிறகு கைக்குட்டைகள் வடிகந்தை முதலியவைகளாக கத்தரிக்கப்படும்.

பிற்பாடு தூசு துடைக்கும் கந்தைகளாகி, இறுதியில் காகிதம் செய்வதற்கான மூலப்பொருள்களில் போய்க் கலக்கும்.

ஒரு சமயம், அன்று அவருக்கு மௌனதினம். வழக்கம்போல் சேவா கிராமம்–வர்தா சாலையில் சென்று கொண்டிருக்கும்போது, வழியில் இரண்டு அங்குல நீளமுள்ள பஞ்சு கிடக்கக்கண்டு, அதைச் சுட்டிக்காட்டிவிட்டு மேலே நடந்தார்.

சுத்தத்திலேயே கவலையாக உள்ள அவர் கண்களை பஞ்சு உறுத்துகிறது போலும் என்று நினைத்து அவருடன் வந்த பெண் ஒருவர் அதை எடுத்துக்கொண்டார்.

மௌன விரதம் முடிந்ததும் அன்றுமாலை நூல்நூற்கத்துவங்கும் முன் அந்தக் குறிப்பிட்ட பஞ்சைக் கேட்டார் காந்திஜி. அந்தப்பெண் அதனைக்குப்பையில் போட்டு விட்டதாக கூறியதுகேட்டு அவர் முகம் மாறியது.

'இதுவே ஒரு தம்பிடியாக இருந்திருந்தால் மிகச் சிறிய காசுதானே என்று அதை எறிந்திருப்பாயா?' என்று வினவினர்.

'எறிந்திருக்கமாட்டேன்' என்று அந்தப்பெண் ஒப்புக் கொண்டார். அவர் தொடர்ந்தார்.

'பருத்தியைப் பயிரிடுவதிலும், அதைச் சுத்தப்படுத்தி பஞ்சாக்குவதிலும் எவ்வளவு உழைப்பு செலவழிகிறது தெரியுமா? அதை எறிந்தவன் பாவம் செய்துவிட்டான் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் உனக்குச் சுட்டிக்காட்டப் பட்ட பிறகும்அதன் மதிப்பை உணராத நீ, இரட்டைக் குற்றம் செய்தவளாவாய் போ. அதைக் கொண்டுவா'

மாசடைந்த அந்தப் பஞ்சு கொண்டுவரப்பட்டது. 'துணியாக நெய்ததனதும் அந்த அழுக்கை எளிதில் அகற்றி விடலாம்' என்று விளக்கம் தந்தவாறு அதைக்கொண்டு தாமே நூல்நூற்றுமுடித்தார்:

— தொகுப்பு:

க. கனகராசா.

## தேசியப் பறவைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கனடா | — | வாத்து |
| 2. | இலங்கை | — | காட்டுக்கோழி |
| 3. | பிரிட்டன் | — | ராபின் |
| 4. | பெல்ஜியம் | — | கெஸ்ட்ரல் |
| 5. | அமெரிக்கா | — | கழுகு |
| 6. | ஜேர்மன் | — | வெள்ளைக்கொக்கு |
| 7. | டென்மார்க் | — | வானம்பாடி |
| 8. | ஹாவாய் | — | குள்ளவாத்து |
| 9. | தென் ஆபிரிக்கா | — | நீலக்கொக்கு |
| 10. | இந்தியா | — | மயில் |




### 'சிட்டுக்குருவி கற்றுத்தா'

சிட்டுக் குருவி! சிட்டுக்குருவி!
எங்கே வந்தாய் சிட்டுக்குருவி!
பட்டுப்போன்ற மேனி கொண்டாய்!
பார்க்க வண்ண ஜாலம் கொண்டாய்!
எட்டுத் திக்கும் பறந்து செல்வாய்!
எனக்கும் அதனைக் கற்றுத்தருவாய்!

—ந. செந்தூரன்.

## பரமசாதுக் குழந்தையைப் பற்றியே பெற்ருேர் கவலைப்பட வேண்டும்!

தவறிழைப்பது குழந்தைக்கு இயற்கை, வளரும் குழந்தைகள் விஷமத்தனம் செய்வது இயற்கை. விஷமத்தனத்துடன் வளர்ந்தால்தான் அந்தக்குழந்தை சாதாரண குழந்தையாக வளருகிறது என்று பொருள்.

அளவுக்கு மீறிப் பொறுமையாகவும், பவ்வியமாகவும் வளரும்குழந்தை அசாதாரண குழந்தை. விஷமக் குழந்தையைவிட இந்தப் பரமசாதுக் குழந்தையைப் பற்றித் தான் நாம் கவலைப்பட வேண்டும்.

விஷமக்குழந்தையால் வரும் கேட்டைவிட, இந்தப் பரமசாதுக் குழந்தையால்வரும் கேடு அதிகம்...!

தவறான போக்கு என்பது பல நேரங்களில் ஆபத்தைத் தரக்கூடியதா?

தவறிழைக்கும் சிறுவனைத் தூண்டுவது யார்?

தவறான போக்கினை, குழந்தைகளின் குறைகளை சமுதாயம் எந்தக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றது?

குற்றநடத்தை என்பது என்ன? ஆபத்தான குற்றங்குறைகள் யாவை?

இவற்றுக்கான விடைகளைத் தருவதற்கு அடிப்படைப் பிரச்சினைகளை நாம் அலசிப் பார்த்தால் அருமையான விடை நமக்குக் கிடைக்கும்.

முதலாவது, குழந்தைகள் தவறு செய்யக் காரணம் என்ன? ஏன் தவறிழைக்கின்றனர்?

ஒவ்வொருநாளும் குழந்தைகள் செய்யும் தொல்லைகளைச் சமாளிப்பது எப்படி?

இத்தொல்லைகள் அபாயத்தை அளிக்காதபடிகாத்து, தடுப்பது எப்படி?

இதற்கெல்லாம் சுருக்கமாக ஓரேவரியில் விடைசொல்லி விடமுடியாது.

ஒ...! அவள் எனக்கு ஒரு பிரச்சினைக் குழந்தை! என்று ஒரு தாய் அலுத்துக் கொண்டாள்.


இவள் ஏன் இப்படிச் சலித்துக்கொள்ளவேண்டும். உலகத்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனி ரகம். எந்த இரண்டு குழந்தையும் ஒன்றுபோல் இருப்பதில்லை.

அதுபோலவே ஒவ்வொரு பிரச்சினையும் ஒன்றுபோல இருப்பதில்லை. இதை மட்டும் நாம் உணர்ந்துகொண்டால், தலைமயிரைப் பிய்த்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இளம் சிறுர்கள் சிட்டுக்கள் போன்றவர்கள். கவலை என்னவென்று அறியாதவர்கள் எப்போதும் குறும்புத்தனமும் மாறுபட்ட நடத்தையும் ஒட்டிப்பழக நினைக்கிறது.

பெற்ருேர்களுக்கும், ஆசிரியர்களுக்கும்தான் குழந்தைகளை உருவாக்குவதில் பெரும் பங்கு உண்டு. ஏன்? முழுப் பொறுப்பும் அவர்களுடையதுதான்.

பிரச்சினைகள் மிகுந்த இந்த உலகில் குழந்தைகள் நம்பிக்கையுடனும், முழுத்திறமையுடனும் துணிவுடனும் வாழவேண்டும். பண்பட்ட உள்ளமும் அறிவும் பெறவேண்டும். பொறுப்புமிகுந்த குடிமகனை வளரவேண்டும். இதற்கெல்லாம் பெற்ருேரும் ஆசிரியருமே உறுதுணையாக அமைய முடியும்.




உடையவர்கள்.

பெரியவர்கள், தங்களால் இயன்றவரை அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த முயலவேண்டும்.

விஷமம் செய்யவே பிறந்தவர்கள் குழந்தைகள். அவர்கள் விஷமம் செய்யாதபடி பார்த்துக்கொள்ளவே இருப்பவர்கள் பெற்ருேர்கள். இதனை மறப்பதால்தான் நமக்கு மாரடைப்புவருகிறது. வல்லுக்கு நிற்கிறோம்.

குழந்தைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களிடம் அன்பாகப் பழகவேண்டும். சுடுசொற்களைப் பேசக் கூடாது. அவர்களை ஆதரித்து, அரவணைத்து மகிழ்வூட்ட வேண்டும்.

பெற்ருேர்களுக்கும் இருக்கும் ஒரு குழந்தை பாதுகாப்பை விரும்புகின்றது. சமுதாயத்துடனும், பெரியவர்களுடனும், ஆசிரியர்களுட

ஆற்றலுடனும் வசதிகளுடனும் தங்கள் காலில் தாங்கள் நிற்கும் வகையில் இந்தச் சமுதாயத்தில் குழந்தைகள் உருவாகவேண்டும்.

குறும்பும் தவறான போக்கும் உள்ள குழந்தைகள் இப்படி வர இயலாது. நாம் எந்த வகையில் அவர்களுக்கு உதவ முடியும்?

குழந்தைகளிடம் பெற்ருேர் அன்பாய், ஆதரவாய் அவர்களைப் புரிந்துகொள்ளும் மனப்பான்மையுடன் நடந்து பாருங்கள் பலன் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

மாருக, முரட்டுத்தனமும், கண்டிப்பாக, கடுமையாக தண்டிக்கும் மனப்பான்மையுடன் நடந்தால் பலன் சோகமும் துக்கமும் நிரம்பியதாக இருக்கும். ★

### 'வெள்ளைப்புரு' வின் பதில்

அன்புதான் உலகை ஆளும் தாரக மந்திரம். அது தாதியாருக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே வேண்டும்.

புன்னகையுடன் கடமை' கட்டுப்பாடுடன் சேவை செய்ய எம்மை விடவேண்டும்.

நோயாளர் அனைவரும் ஓரே மாதிரியானவர்கள் அல்லர்.

உதாரணத்திற்கு, ஊசி மருந்து ஏற்றத்தேவையில்லாத நோயாளி தனக்கு ஊசி மருந்துதான் போட வேண்டும் என்று அடம்பிடிப்பார்.

இன்னொருவர் சங்கிலித் தொடர்போல் புகைபிடிக்கும் பழக்கமுள்ளவராக இருப்பார். அவரைக் கவனித்து வந்த தாதி பலமுறை அவரிடம் அன்பாக புகைத்தலை விடுங்கள் என்று கேட்டுப்பார்த்தார். அவர் கேட்கவில்லை. கடைசியில் வந்த தாதி, 'நாங்கள் சொல்லுகிறபடி நடக்க விரும்பினல் ஆஸ்பத்திரியில் இரும்; இல்லாவிடில் இப்போது வீட்டுக்குச் செல்லும்'— என்று இப்படிச் சினந்து கூறவேண்டியதாயிற்று.

சீறிச் சினக்கும் வழியைக் கடைப்பிடிக்க எம்மைத் தூண்டுவதே நோயாளர்கள் தான்.

புன்னகையுடன் சேவை செய்வது எமக்குக் கஷ்டம் இல்லை...! ஆனல் புன்னகையுடன் சேவை செய்ய ஏனையோர்தான் நம்மை விடுவதாக இல்லை.

அன்பு, மனத்தூய்மை புன்னகை– ஆகியவற்றை அணிகலன்களாகக் கொண்டே இனிமேலும் சேவைசெய்யக் காத்து இருக்கிறோம்.

யாழ் தாதியார் சார்பாக ஒரு தாதி.

(கடந்த ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி சஞ்சீவி சஞ்சிகையில் 'வெள்ளைப் புருக்களுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் பிரசுரமான கவிதைக்கு பதிலாக இக்கடிதம் அமைகிறது.) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை மேதை சாப்ளின் பாராட்டிய

# நகைச்சுவை மன்னர்கள் லோரல் - ஹார்டி

உலகில் இங்கிலாந்து நாட்டுக்கும், நாடக, சினிமா கலைக்கும் பிரிக்க முடியாத உறவுண்டு.

ஏனெனில் எண்ணில் அடங்கா சிறந்த அற்புதமான நாடக நடிக, நடிகையரை வளர்த்து சிறந்தவர்களாக உலகுக்கு அந்நாடு அறிமுகப்படுத்தியுள்ளது.

குலுங்கிக்குலுங்கி சிரிக்க வைத்த 'நகைச்சுவை மன்னர்'கள். 'லோரல் - ஹார்டி இரட்டையரில் ஒருவரான லோரலை' நமக்கு இங்கிலாந்து தந்துள்ளது.

இவர் ஜூன் 16 ஆம் திகதி 1890 இல் உல்வர்ஸ்டன் என்ற இடத்தில் இங்கிலாந்தில் பிறந்தார்.

இவர் தாயும் ஒரு நடிகை. இவரது தந்தை நடிகர், டைரக்டர், தயாரிப்பாளர், திரை வசன கர்த்தாவும் ஆவார்.

லோரல் தமது 16 வயதில் ஸ்காட்லாந்தில் தன்னுடைய கலை உலக வாழ்வின் முதல் அடியை நாடக உலகத்தின் மூலம் வைத்தார்.

முதன் முதலாக லோரலும்-ஹார்டியும் 1917 இல் 'லக்கி டாக்' என்ற படத்தில் நடித்தனர். இந்தப் படத்தில் ஹார்டியின் பங்கு மிகக் குறைவு. லோரல்தான் அதிகமாக நடித்திருந்தார்.

லோரல் எப்போதும் படங்களில் தொளதொளவென்ற உடையை அணிந்துகொண்டிருப்பார்.

அவரின் ஒல்லியான உருவமும் சோகமயமாக காட்சி அளிப்பதோடு சில நேரங்களில் புன்னகை புரிந்துகொண்டு தனது காதுகளை அசைத்தும், தலையையும் நெற்றியையும் அசைத்தும் தனது செய்கைகளினால் ஹார்டிக்கு சிக்கல் உண்டு பண்ணி அனைவரையும் விலா வலியெடுக்க சிரிக்கவைப்பதில் மன்னர்.

### ஹார்டி - அமெரிக்கர்

லோரல் - ஹார்டியில் ஒருவரான 'ஒலீவர் ஹார்டி' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் அமெரிக்கர்!

இவர் ஜனவரி 18, 1892 இல் பிறந்தார். தனது 8 வயதில் நிகழ்ச்சியில் பாட ஆரம்பித்தார்.

இவரின் தந்தை ஒரு வக்கில் ஆவார். ஹார்டியும் 'யூனிவர்சிடி ஆப்ஜோர்ஜியா'வில் சட்டம் பயில சேர்ந்தார்.

சட்டப்படிப்பைத் தொடரவில்லை நிறுத்திவிட்டார். அவர் மட்டும் படித்திருந்தால் அமெரிக்காவில் எங்காவது ஓரிடத்தில் வக்கீலாகப் பணியாற்றியிருப்பார்.

ஆனால் சட்டப்படிப்பைத் தொடராமல் போனதால் உலகுக்கு அற்புதமான ஒரு நகைச்சுவை நடிகர் கிடைத்தார்.

இவர் நடித்த சிறு பாத்திரங்கள் கிரிப்புக் காட்சிகள் ஆரம்பத்தில் வீணாயின. எனினும் இவர் லோரலுடன் இணைந்து நடிக்க என்று ஆரம்பித்தாரோ அன்று முதல் புகழ் உச்சியில் கொடி கட்டிப்பறக்க ஆரம்பித்தார்.

இருவரும் இணைந்து நடித்த படங்கள் 100க்கு 95 சத வீதம் பெரும் வெற்றியையும், வரவேற்பையும் பெற்றன.

இருவரும் சிறந்த நகைச்சுவையாளர்கள். லோரல் அதிக சிந்தனையாளர், கற்பனை சக்தியுடன் திரைக்குண்டான நகைச்சுவை காட்சிகளை அமைப்பதில் கைத்தேர்ந்தவர்.

காட்சிக்கு காட்சி எந்த மாதிரியான நகைச்சுவை இருக்கவேண்டுமென்பதை நொடிப் பொழுதில் கூறிவிடுவார். இவர்களை பின்பற்றி பல காமெடி இரட்டையர்கள் வந்தும் இவர்களுடன் போட்டி போட முடியாமல் போனார்கள்.

ஏனெனில் இருவரின் நடிப்பும் ஒத்துழைப்பும் படம் பிரமாதமாக அமைவதற்கு பெரிதும் துணைபுரிந்தது.

அத்தோடு மட்டுமில்லாமல் ஒவ்வொரு படத்தில் ஒவ்வொரு விதமாக கதைகளை அமைத்து சிறப்புற அற்புதமாக நடித்தார்கள்.

1955க்கு பிறகு அவர்கள் இருவரும் சேர்ந்து பல கலர்ப் படங்களைத் தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுவந்தனர்.

எனினும் எதிர்பார்ரதவிதமாக ஹார்டிக்கு உடல்நலக் குறைவினால் சில ஏற்பாடுகளை நிறுத்தவேண்டி வந்தது. ஹார்டிக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

### லோரல் - ஹார்டி மறைவு

அதிலிருந்து நலம்பெறுமல் நம்மையெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய புகழ் பெற்ற இரட்டையர்களில் ஒருவரான ஒலீவர் ஹார்டி 1957 இல் மரணமடைந்தார்.

8 ஆண்டுகளுக்கு பிறகு 1965 இல் லோரல் இவ்வுலகத்தை விட்டுப்பிரிந்தார்.

இருவரது மறைவும் நகைச்சுவை உலகுக்கே பெரிய இழப்பு:-

சார்லி சப்ளின், 'லோரல் ஹார்டி' மிக அற்புதமான நகைச்சுவை நடிகர்கள். நான் என்னை மறந்து அவர்களின் நடிப்பை மிகவும் ரசித்து இருக்கிறேன். அதிலும் என்னுடன் பணியாற்றிய லோரலின் நடிப்பை நான் மிகவும் ரசிப்பேன்' என்று மனம் திறந்து பாராட்டியுள்ளனர்.

நகைச்சுவை மேதையே நகைச்சுவை மன்னர்களைப் பற்றிக் குறிப்பிட்டது உண்மையிலே மிகவும் சிறந்த பாராட்டாகும்.

(எ-4)

வெள்ளித்திரையில்

கலைஞர் கருணாநிதியின் தமிழுக்குக் கலைவாணர் ஒரு ரசிகராகவே விளங்கினார்.

அதனால் கலைவாணர் கிருஷ்ணன் தயாரித்த 'பணம்' படத்திற்கும் கலைஞரே வசனம் எழுதினார்.

'பணம்' எப்படிப்பட்டது என்பதைக் கதாநாயகனாக நடித்த சிவாஜிகணேசன் வாயிலாகவே சொல்ல வைப்பதுபோல் அப்படத்தில் கலைஞர் ஒரு வசனம் எழுதியிருந்தார்.

அந்த வசனம் இதோ:

'பணம்! மோகனமான மூன்றெழுத்து அழகி! முட்டாளின் மஞ்சத்தில் கொஞ்சுவாள்! முரடனின் கையிலே சிக்குவாள்!

'படித்தவனை பம்பரம் போல் சுற்றி விடுவாள்! பாசத்தைத் துண்டிப்பாள்! நேசத்தைக் கண்டிப்பாள்! தெய்வீகத்திரை போட்டுக் கொள்வாள். தியாகிகள் வேடத்தில் திருட்டுச் சதிராடுவாள்!

'அந்தக் கன்னியின் ஆட்டத்திலே கண்ணிழந்தோர் கணக்கற்றோர். அந்தக் கபோதிகளில் நானும் ஒருவன்'

பணத்தை ஒரு பாவையாக சித்தரித்து அது இந்த உலகத்தைப் பந்தாடிக் கொண்டிருப்பதைக் கலைஞர் நயமாகக் கூறி விட்டார்.

'பணம்' படத்திலே இன்னொரு கட்டம்......

கதாநாயகன் சிவாஜிகணேசன் வாழ்க்கையில் விரக்தியுற்று ஒருநாள் தூக்குப் போட்டுக் கொள்ள முயற்சிக்கிறான்.

துணைக் கதாநாயகனான எஸ். எஸ். ஆர். தடுக்கிறான். கதாநாயகனுக்குப் புத்திமதி கூறுகிறான்.

[illegible]தான் அந்தக் காட்சி. இதைப் படமாக்க இரவு

## கலைவாணரை வசீகரித்த

## கலைஞரின் வசனங்கள்!

அனைவரும் செட்டில் தயாராக இருந்தனர்.

காட்சிக்கான வசனங்களைக் கலைவாணர் படித்துப் பார்த்தார்.

'வசனத்திலே கலைஞரைக் காணோமே! போய்க் கலைஞரை அழைத்து வா'— இப்படிக் கூறி படத்தயாரிப்பு மனேஜரான புளிமூட்டை



கருணாநிதி

ராமசாமியை அனுப்புகிறார்.

கலைஞர் வந்தார். 'இந்தக் காட்சியிலே உங்களின் கைவண்ணத்தைக் காணோமே'— இப்படிக் கலைவாணர் கூறுகிறார்.

அப்படியா? என்று புன்னகைத்தவாறே 'கடதாசியும் பேனாவும் கொண்டு வாருங்கள்' என்று கேட்டார்.

மளமள என்று எழுதித் தள்ளினார். வசனத்தைப் பார்த்த கலைவாணர் குதித்தார்.

இதுதான் அந்த வசனம்:

எஸ். எஸ். ஆர்.: என்ன இது?

சிவாஜி (கையிலிருக்கும் கயிறைக் காட்டி): இதுவா? இன்பலோகத்தின் ஏணி. உல்லாசபுரியின் ஊஞ்சல். துரோகிகளைத் தாலாட்டும் தொட்டில்.

எஸ். எஸ். ஆர்.: சாவுக்கு காவியம் பாடும் நீ யாரப்பா?

சிவாஜி: மரணத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்த மாவீரனும் அல்ல! மகானும் அல்ல! ஒரு சாதாரண மனிதன்.

'சுற்றி வளைக்காதே!'

'சுருக்கமாகவே சொல்கிறேன். சூன்யமாகி விட்டது என் வாழ்வு'—

எஸ். எஸ். ஆர்.: 'வாழ்வல்ல...... உன் அறிவு என்று சொல். எத்தனையோ பெரிய இலட்சியங்களுக்காக எவ்வளவோ பேர் உயிர் விட்டிருக்கிறார்கள்: 'விஷத்தைக் கையிலே ஏந்தி வீரத்தை நெஞ்சில் ஏந்திய விவேகி சோக்ரடீஸ்......

'அடிமைத்தளையை அறுத்தெறியப் பாடுபட்ட ஆபிரகாம் லிங்கன் மதவெறியை எதிர்த்த மகாத்மாகாந்தி... திருப்பூர் மண்ணிலே ரத்தத்தை மழையெனக் கொட்டிய தீந்தமிழ்ச் செல்வன் .....

'இவர்கள் எல்லோரும் சாகத் துணிந்தார்கள் சரித்திரத்தில் அழியாத புகழோடு.

'நீயும்தான் சாகத்துணிந்தாய் ஒரு சாதாரண சங்கடத்தைத் தாங்கமுடியாமல்'

கலைஞரின் கருத்தாழமிக்க வசனங்கள் இவை.

★


## "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4.365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1 791.516 | 6,283.618 | 7,718,224 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி | | | |
| (1) செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க

"ஷப்ரு"வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஜ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கு

## நீ தெரிந்து கொண்ட வழி எது?

உலகில் வாழும் நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எம்மால் துன்பம் நிறைந்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவே முடியாது. காரணம் அந்த வாழ்க்கை எமக்குப் பிரியமானதல்ல.

எனினும் இந்தக் கண்ணீர் நிறைந்த சோக வாழ்க்கைக்கு நாம்தான் காரண கர்த்தாக்கள். இறைவன் கொடுத்த மகிழ்ச்சியான சூழ்நிலையைக் கெடுத்துப் போட்டவர்களும் நாமே தான்.

ஏன் அதுமட்டுமா? தேவனுக்கும் எமக்கும் இருந்த ஒரு இறுக்கமான உறவில் பிளவை ஏற்படுத்தி வைத்தவர்களும் மனிதர்களாகிய நாங்கள் தான் என்பதை மறந்து போக முடியாது.

இதை வாசிக்கும் பிரியமானவனே! 'எங்கே நான் தேவனுக்கும் எனக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தினேன்' என்று கேட்கலாம்.

நாம் வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்காகத் தெரிந்த வழிகள்தான் தேவனுக்கும் எமக்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தியது.

### அடிப்படைக் காரணம்

ஆதாம் தேவனால் படைக்கப்பட்டுத் தன் மனைவியுடன் ஏதேனில் வாழ்ந்த போது அவன் மகிழ்ச்சியோடிருந்தான்.

**- பெஞ்ஞோ பொன்னையா -**

'பகலிலே குளிர்ச்சியான வேளைகளில் தேவன் ஏதேன் தோட்டத்தில் உலாவுகிறவர்' என்று வேதம் கூறுகிறது. ஆதாம், ஏவாள் உடன் தேவன் மகிழ்ந்திருந்தார். உறவாடினர் என்பது தெரிகிறது.

ஆனால் ஆதியாகமம் 3 ; 8 இல் 'உலாவுகின்ற தேவனின் சத்தத்தைக் கேட்டு இவர்கள் இருவரும் ஒளித்துக்கொண்டார்களாம் காரணம் என்ன?

தாங்கள் நிர்வாணிகள் என்பதை அறிந்ததோடு தேவனுக்குப் பிரியமற்ற காரியத்தையும் செய்திருந்தார்கள். இதனால் தேவனைச் சந்திக்க, அவரோடு உறவாடப் பயந்தார்கள். விலகிப் போனார்கள்.

இந்தப் பரிதாப நிலைக்குக் காரணம் என்ன? இன்று ஆதாம், ஏவாள் கைவிடப்பட்டு நிற்பதன் அடிப்படைக் காரணம் என்ன?

ஆதாம் படைக்கப்பட்ட போது ஒரு காட்டுவாசியாகவோ, அல்லது பேசத்தெரியாத, சிந்திக்கத் தெரியாத பிதற்றும் மனிதனாக அவன் படைக்கப்படவில்லை. உலகின் சகல ஜீவராசிகளையும் ஆளும் ஒரு அரசனாகப் படைக்கப்பட்டான்.

### பூரணமான மனிதன்

ஆகவே ஆதாம் ஒரு 'பூரணமான மனிதன்' சகலமும் படைக்கப்பட்டு அவன்



கையில் ஒப்படைத்த தேவன் ஆதாமுக்குத் தன் வாழ்க்கையைக்கொண்டு நடாத்திச் செல்ல ஒரு உரிமையைக் கொடுத்தார்.

இப்படித்தான் நீ வாழ வேண்டும் என அவர் கட்டளையிடவில்லை. அவனைக் கட்டுப்படுத்தவுமில்லை. 'அவனுக்குச் சுயாதீனம் என்னும் ஈவு வழங்கப்பட்டிருந்தது' சுயாதீனம்' என்னும் போது 'தெரிந்து கொள்ளும் உரிமை' என்று பொருள்படும்.

கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியவோ, அல்லது மறுக்கவோ, மகிழ்ச்சியைப் பெற்று அனுபவிக்கவோ, அல்லது துன்பத்தைத்தேடிக் கொள்ளவோ அவனுக்கு உரிமை இருந்தது. இந்த உரிமையைப் பயன்படுத்த அவனை ஒருவரும் கட்டாயப்படுத்தவில்லை.

### இரண்டு வழிகள்

ஆம், ஆதாமுக்கு முன்பாக இரண்டு வழிகள் இருந்தன.

1. தேவனோடு வாழும் வழி
2. தேவனை விட்டு விலகும் அழிவின் வழி? எதைத் தெரிந்து கொண்டான்?

சர்ப்பம் வந்து கனியின் தன்மையைப் பற்றிக் கூறியதும் அவன் சிந்தித்தான்: ஏன் நான் கர்த்தரை எல்லாக் காரியத்துக்கும் தேடவேண்டும்? ஏன் அவர் மூலமாக என் வாழ்வின் ஒவ்வொரு காரியங்களுக்கும் அவரை எதிர்பார்த்து இருக்க வேண்டும்? இந்தக் கனி நன்மை, தீமை அறியும் கனியாமே? அப்படியானால் இனி நான் என் இஷ்டப்படி வாழலாமே? என்று சிந்தித்து,

அவன் அழிவின் பாதையைத் தேடிக்கொண்டான். ஆம் தேவனை விட்டுச் சுயமாக வாழ மனிதனின் ஆரம்ப கர்த்தாவாகிய ஆதாம் வழி காட்டி விட்டான். கிடைத்தது என்ன? கண்ணீரும், கூக்குரலும் புலம்பலும்தான்.

பிரியமானவனே? இந்த அவலநிலை நீடித்துவிடக் கூடாது என்பதற்காகவே தேவன் தன்மக்களை அடிக்கடி எச்சரித்துப் புத்தி சொல்லி வந்தார். மனிதன் கேட்டானா?

உபாகமம் 30;15 இல் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் மோசேயைக் கொண்டு சொன்ன எச்சரிப்பு என்ன தெரியுமா?

'இதோ ஜீவனையும், நன்மையையும் மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்' என்று சொல்லியிருக்கிறார். இத்துடன் தேவன் நிற்கவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தன் குமாரன் மூலம் இந்த இரண்டு வழிகளைக் குறித்து எச்சரித்துப் புத்தி சொன்னார்.

மத்தேயு 7 ; 13. 14 இல் கேட்டுக்கு போகிறவாசல், 'ஜீவனுக்குப் போகிற வாசல்' என்று கூறியிருப்பதைக் காணலாம். இவைகளும் மனிதனுக்குக் கேட்டனவா? தொடர்ந்து பாவம் நீடித்தது.

இதைக் கண்ட பவுலும் மனிதனை விடவில்லை ரோமர் 6 : 16 இல் கேட்டார். நீ மரணத்துக்கு ஏதுவான பாவத்துக்குக் கீழ்ப்படிவாயா? அல்லது நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கு வருவாயா? என்று கேட்கிறார்.

பிரியமானவனே? நீ தெரிந்து கொண்ட பாதை எது?

அன்று ஏதேனில் தன் பிரியமான மனிதனை (ஆதாமை) தேவன் விருப்பத்தோடு தேடி வந்தபோது அவன் ஒளித்துக் கொண்டான். ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்? என்று கேட்டார். காரணம் அவன் தெரிந்த வழி அது.

இன்று நீயும் எங்கே ஒளித்துக்கொண்டிருக்கிறாய்? எதன் பின்னால் மறைந்திருக்கிறாய்? உன் வழியும் அழிவின் வழி தானா? என்று கேட்கும் அன்பின் ஆண்டவரின் சத்தம் உன் காதில், உன் கல்லான இருதயங்களில் ஒலிக்கட்டும்.

நண்பனே? நீ தெரிந்து கொண்ட வழி எது? அது உன் ஆண்டவருக்குப் பிரியமானதாக அமையட்டும். ஆமேன். ★

# பொது அறிவுப்போட்டி இல. 32

1. உலகின் அதி உயர யுத்தமுனை எது? ... ... ... சியாச்சென் / பெய்ரூட்
2. சிலசமயம் இதுவும் தூங்கிவிடுவதுண்டு? ... ... ... ... கண்கள் / மனம்
3. பாரதியாரின் முக்கிய கொள்கை எது? ... ... மது ஒழிப்பு / சாதி ஒழிப்பு
4. கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்படுபவர்? ... ... ... ... ... ... ... ... வ. உ. சிதம்பரனார் / வாஞ்சிநாதன்
5. ஒரு நிமிடத்திற்கு எத்தனை வார்த்தைகள் பேசலாம்? ... 100-200 / 50-100
6. சீக்கிய மதத்தை உருவாக்கியவர் யார்? ... ... ... ஆதிசங்கரர் / குருநானக்
7. சிந்தனைக்கு முக்கியம் எது? ... ... ... ... ... இயற்கை அறிவு / படிப்பு
8. முல்லை நிலத்திற்கு விளக்கம் தருவது? ... ... ... ... காடுகள் / வயல்கள்
9. சீறாப் புராணத்தைத் தந்தவர் யார்? உமறுப் புலவர் / சோமசுந்தரப் புலவர்
10. அதிக வெப்பமுள்ள மண் எது? ... ... ... ... ... கரிசல் மண் / களிமண்
11. ஊனம் இங்கும் ஏற்படலாம்? ... ... ... ... ... உடலில் / உள்ளத்தில்
12. சங்க காலம் எத்தனை வகை? ... ... ... ... ... .. ... மூன்று / ஐந்து

பெயர்:- ........................................
விலாசம்:- ........................................
........................................

பொது அறிவுப்போட்டி இல: 31
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

........................ இங்கே வெட்டுக ........................

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 20 - 09 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

# கை கொடுத்த கல்வி

பாலசிங்கம் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தான். இவன் அதிகம் படிக்கவில்லை. படிப்பிற்கு ஏற்ற வேலைதான் கிடைத்தது.

இரண்டு பிள்ளைகள். இருவரும் கிராமப் பாடசாலையிலே படித்து வந்தார்கள். தாயார் கமலா அக்கறையுடன் பிள்ளைகளைக் கவனித்தாள். பாலசிங்கத்தின் வருமானம் போதாமையினால் பிள்ளைகளுக்குக் காலையுணவு வெறும் தேனீர் தான்.

பாடசாலையில் வழங்கப்பட்டு வந்த மதிய உணவை இவர்கள் விரும்பி உண்டார்கள். சில மாணவர்கள் அலட்சியமாக உணவை உண்ணுவதைப் பார்த்து வருத்தமடைந்தார்கள். தாயாருக்கும் முறையிட்டார்கள்.

'எங்களைப் போன்ற ஏழைகட்கு கல்விதான் சொத்து. நீங்கள் படிச்சு வீட்டுக்கும் நாட்டுக்கும் உழைக்கவேண்டும்' என்று கமலா கூறிவிட்டு பிள்ளைகளின் வீட்டுப்பாடம் செய்வதற்கு உதவி செய்தாள். சாப்பாட்டு நேரம் வந்ததும் சாப்பாட்டைக் கொடுத்து உறங்க வைத்தாள்.

'இஞ்சேருங்கோ...! உங்களைத்தான், கூப்பிட்டாலும் கேளாதமாதிரி இருக்கிறீங்க'

'வருமானம் போதாது. இங்கேயிருந்து உழைச்சு சரிக்கட்டேலாது. வெளிநாடு போகலாமென யோசிக்கின்றேன்'

'இப்போ எல்லாருக்கும் வெளிநாட்டு மோகம்தானே. திருமணம் செய்த காலத்திலிருந்து அக்கறை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகுது என்று சொன்னது உங்களுக்குப் பிடிக்கேல்லைப் போலிருக்கு'

**- கோண்டாவிலூர் பூ. க. இராசரத்தினம் -**

'இதுதானே குடும்ப வாழ்வு. கஷ்டம் தான் எல்லாம் என்றால் நான்......

'ஏன்' மிச்சத்தைச் சொல்லாமல் நிறுத்திவிட்டீங்க?'

'எல்லாம் சொன்னால்தான் விளங்குமோ?

'சரி, ஏன் வீண் சண்டை. போகிறதற்கு வேண்டியவற்றைக் கவனிக்கிறது' தானே? என்றாள் கமலா கலங்கிய கண்களுடன்.

கமலா சீட்டுக்காசையும், சேமித்த பணத்தையும், ஒரு சங்கிலியை வைத்துக் கொண்டு மற்ற நகைகளையும் கொடுத்தாள். வேலைசெய்த நிறுவனத்தில் கட்டிய பிணைப் பணத்தையும் எடுக்கும்படி ஆலோசனை கூறினாள்.

சில நாட்களில் ஏஜென்சியுடன் தொடர்பு கொண்டு பயணத்துக்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டான். ஜேர்மனிக்குச் சென்றதும் கடிதம் எழுதினான். இரண்டு மாதங்கட்குப் பின் கொஞ்சப் பணமும் அனுப்பி வைத்தான். அவ்வளவுதான்.

கணவனின் கடிதத்துக்காகக் காத்திருந்தாள். நாட்கள் மாதங்களாகின. மாதங்கள் வருடமாகியது. தபால்காரனின் வரவை எதிர்பார்த்து ஏமாற்றம்தான் அடைந்தாள் கமலா.

'அம்மா, அப்பா எப்ப வருவார்?. புதிய சயிக்கிள் கொண்டு வருவார். நான் பக்கத்து வீட்டுக் காந்தன் போல் சயிக்கிளில்தான் பள்ளிக்கூடத்துக்குப் போவேன்' என்றான் சங்கர்.

'அம்மா, அப்பா வெளிநாட்டுச் சட்டை வாங்கி வருவார். எங்கடை வகுப்பிலே அதிகமான பிள்ளைகள் புதுச் சட்டை போடுகிறார்கள்' என்றாள் சாந்தி.

கமலா தனது கண்ணீரைக் காட்டாமல் சமாளித்து வந்தாள். தனது கவலையை மற்றவர்களுக்குச் சொல்லவும் முடியாமல் வேதனையடைந்தாள்.

தான் விரும்பிக்காதலித்துத் திருமணம் செய்தவரைப் பற்றிக் குறை கூறவும் விரும்பவில்லை. பிள்ளைகளும், அப்பா எப்ப வருவார்?' என்று கேட்பதை நிறுத்திவிட்டார்கள்.

தன் சங்கிலியையும் விற்று அயலில் கடனும் வாங்கி ஒரு வருடத்தைக் கழித்தாள். பின்பு ஊராரும் கடன் கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

தன் ஊர்க் கிராம சேவகரிடம் தருமப் பணத்துக்கு விண்ணப்பித்தாள். கணவன் வெளிநாட்டில் இருப்பதால், உதவி வழங்கமுடியாதெனக் கையை விரித்து விட்டார்.

கமலா வேலை தேடி அலைந்தாள். கிடைக்கவில்லை. உள்ளூரில் கூலி வேலை செய்ய விரும்பாது பட்டினம் சென்றாள். நாலு மைல் தூரம் நடந்து களைப்பாக இருந்தமையால் ஒரு பெரிய வீட்டிற்குள் நுழைந்தாள்.

கட்டி நின்ற அல்சேசன் நாய் கமலாவின் வரவை வீட்டுக்காரருக்கு அறிவித்தது கமலா அசந்து போனாள்.

'இந்தப்பெரிய வீட்டிலேயா எனக்கு வேலை கொடுப்பாங்க'

எதிர்பார்ப்புக்கு மாறாக அந்த வீட்டுப் பெண்,

'வாரும், வாரும், உட்காரும்' என்றார்.

'அம்மா, ஏதாவது வேலையிருந்தால் கொடுங்கோ' என்று மன்றாட்டமாகக் கேட்டாள், கமலா'

அந்தப் பெண் கமலாவின் கைகளைப் பிடித்து உட்கார வைத்தார்.

'அம்மா நன்றி. நான், நான்......'

'நீ கமலாதானே, என்னைத் தெரியவில்லையா? நான் தான்ரி தர்சினி. இப்போ நல்லாய் ஊதிவிட்டேன். கண்ணாடியும் போட்டிருக்கிறேன்'

திகைத்துப்போய் எழுந்த கமலாவை கட்டித் தழுவினாள் தர்சினி.

'கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புவரை படித்தாயே. ஏன் உனக்கு இந்த நிலை?'

'ஆசிரியை வேலைக்கு விண்ணப்பித்தேன். எனக்கு கிடைக்கவில்லை. அது எல்லாருக்கும் கிடைக்காதாம். அந்த விபரம் ஒன்றும் எனக்கும் விளங்கவில்லை' என்றாள் கமலா.

'சரி அழாமல் மிச்சத்தையும் சொல்லும்'

'நான் எனக்குப் பிடித்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்டபடியால் படிப்பை நிறுத்தினேன். அவருக்கும் நான் தொடர்ந்து படிப்பது பிடிக்கவில்லை. இதனால் எனது பெற்றோரின் உதவியையும் இழந்தேன்'

வீட்டு வேலைக்காரி கோப்பியுடன் வந்து நின்றாள். கமலா கோப்பியைக் குடித்துவிட்டு மிகுதியைக் கூறமுடியாமல் அழுதாள்.

'சீ! இப்படி அழுகிறாயே. என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கல்லூரியில் படிக்கும்பொழுது பகிடிகள் விட்டு எல்லோரையும் கலகலவென்று சிரிக்க வைப்பாயே. நான் கணித பாடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்று அழுதால் பொறுக்க மாட்டியே. கணிதத்தில் என்னைச் சித்தியடையச் செய்ததும் நீதானே! உன்னையேன் ஆண்டவன் இப்படிச் சோதிக்கின்றான்' என்றாள் தர்சினி.

ஒரு வருட கஷ்டமான வாழ்விற்குப் பின் நண்பியின் இனிமையான சொற்கள் கேட்பதற்கு இதமாக இருந்தன. கமலா அவசரப்பட்டுத் திருமணம் செய்த முறை தர்சினிக்குப் பிடிக்கவில்லை. அதைச் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.

'கமலா நீ உன்னுடைய பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்திருந்தால் இக்கஷ்டம் வந்திருக்க முடியாது. ஆனால் சிந்திய பாலுக்கு அழுது பயனில்லை. மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பார்ப்போம். பிள்ளைகளைப் பற்றிச் சொல்லவில்லையே'

சங்கர், சாந்தி, இரண்டு பிள்ளைகள் நன்றாகப் படிக்கின்றார்கள். அவர்களுக்குத் தகப்பனைப் பற்றிக் கவலை. அவரோ ஒரு வருடத்துக்கு மேல் தொடர்பில்லை. நானும் ஜேர்மனியில் இருந்து வந்த எனக்குத் தெரிந்தவர்களைக் கேட்டபொழுது அவர்களும் தெரியாதெனக் கூறிவிட்டார்கள். எனது பிள்ளைகளால் தான் உயிர் வாழ்கிறேன்' என்றாள் கமலா.

'பைத்தியக்காரி, இன்றைய சூழலில் யார் கஷ்டப்படாமல் வாழ்கிறார்கள். பணக்காரர்களும் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கதை வேண்டாம். உன்னுடைய படிப்பு வீண்போகவில்லை. ஒரு பெண்ணின் கல்விக்குச் செலவிடும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடாகும் என்று பெரியோர்கள் தெரியாமலா கூறியிருக்கிறார்கள்'


'நீ நல்லாய்ப் பேசுகிறாயே. அப்ப அவர்பாடு வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டியது தான்'

'போடி, நான் தான் வீட்டிலே 'ஸ்பீக்கர்'. அது கிடக்கட்டும். நாங்கள் விடயத்துக்கு வருவோம். நான் அவரிடம் சொல்லி அவர் வேலை செய்கின்ற தொழிற்சாலையில் பொருத்தமான வேலை வாங்கித் தருகிறேன். பாடசாலைச் சிநேகிதம் படலை மட்டும் தான் என்று நினைக்காதே' என்று சிரித்தபடியே கூறினாள் தர்சினி.

இரண்டு கிழமைக்குப் பின்பு கமலாவுக்கு வேலை கிடைத்தது. பெற்றோரும் உற்றோரும் அவளைக் கைவிட்ட போதிலும் அவள் பெற்ற கல்வி ஒரு நீண்டகால முதலீடாகி அவளின் துயரத்தைக் குறைத்தது.

கமலா தர்சினிக்கு நன்றி தெரிவித்தாள். தான் அடிக்கடி சந்திப்பதாகக் கூறி விடைபெற்றுத் தொழிற்சாலைக்கு விரைந்தாள். ★

(யாவும் கற்பனை)



# அண்ணலார் அமுத வாக்குகள்

★ நிச்சயமாக இறைவன் உங்களது உடல் தோற்றத்தையோ, உருவ அமைப்பையோ நோக்கமாட்டான். உங்களது இதயங்களையே கவனிப்பான்.



'ஒருவர் தம் பொருளை மனமிசைந்து உமக்குக் கொடுக்காதவரை அதை நீர் பெறுதல்கூடாது'

'தம்மைத் தாமே கட்டுப்படுத்தி, தம் மரணத்துக்குப் பின்னர் பயன்தரக் கூடிய நற்கருமங்களைச் செய்வோர் யுத்திசாலியாவர்'

★ 'தர்மத்தினால் பொருள் குறைந்துவிடாது. மன்னிப்பதனால் சிறப்புக் குறைந்து விடாது, தாழ்மையினால் உயர்வுகுறைந்து விடாது'

★ பரஸ்பரம் கிருபை காட்டுபவர்களுக்கு கிருபை மிக்கவன் கிருபை செய்கின்றான். எனவே மண்ணில் உள்ளவர்களுக்குக் கிருபை காட்டுங்கள். விண்ணெல்லாம் பரந்த இறைவன் உங்களுக்குக் கிருபை செய்தருள்வான்.

'பாவம் செய்துகொண்டே இருக்கையில் பாவ மன்னிப்பு தேடுகின்றவர், தம்முடைய இரட்சகனைக் கேலி செய்கின்றவர்களைப்போல் ஆகிவிடுகின்றார்'.

மனிதர்களில் யாசகம் புரிவதில்லை என்று எனக்கு யார் அறுதிமானம் தருகின்றாரோ அவருக்கு சொர்க்கம் உண்டென நான் அறுதிமானம் கொடுக்கின்றேன்.

தொகுப்பு:-
றிஸ்வானா எம். முபீன்

## நூல்வரிசை

நூல்:- நல்லூர்க்கந்தன் திருப்புகழ்
ஆக்கியோன்:- சொக்கன்
அன்பளிப்பு:- உதயன்
வெளியீடு:- திருவள்ளுவர் பதிப்பகம்
6, குமாரவீதி, நல்லூர்.

# கறை கழுவும் கந்தப்பெருமான்

தெளிதமிழி னாலும் மறைகள்பல வாலும்
தெரிவரிய ஞானப் பெருமான் காண்
திகழுமதி யாலும் அறிவுநிதி யாலும்
தெளிவுபெற லாகாப் பெருமான் காண்

கிளியனைய மாதர் ஒருவுலத னாலும்
கெழுமியுற வாடாப் பெருமான் காண்
கிடுகிடென நல்ல துதிகள் பொழி வாலும்
கெடுதிகளை யாத பெருமான் காண்

நளிமலரி னாலும் இனி அயவி யாலும்
நலமருள லாகாப் பெருமான் காண்
நகை மருவி நீசர் எமதுமன நேர்மை
நவையுறுதல் தேரும் பெருமான் காண்

களி மிகுதி யோடே உளமதனை ஈவார்
கருதுவதை ஈயும் பெருமான் காண்
கவினுறுநல் லூரி னிடைமருவி நாளும்
கறை கழுவு கந்தப் பெருமானே..!

(நல்லூர்க் கந்தன் திருப்புகழ் நூலில் இருந்து ஒரு பாடல் மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது)

## சிறை வைக்க மாட்டேன்

இறைவா உன் தேன் திரு நாமங்களை
தஸ்பீஹ் எனும் மணிகளின் எண்ணிக்கைக்குள்
சிறைவைக்க நான் விரும்பவில்லை — அதனை
உருட்டிவிட்டு மணிகளைச் சுருட்டி வைத்து
விடுவதோடு ஓய்ந்து விடுவதா — உன்
நேயத் திரு நாமங்கள்!

எண்ணிக்கையில் உன்னை எண்ணுபவர்கள்
எண்ணட்டும்
ஆனால் உன் மீதான என் எண்ணங்கள்
எண்ணிக்கை வரையறைக்குள் அடங்குவதல்ல!

அதிக மதிகம் உன் திரு நாமங்களை உச்சரிப்பதால் நீ
என்ன ஆட் சேபிக் கவா போகின்றாய்
அலுவலக வேலையாளன் தான் நேரம் பார்ப்பது
அதற்காக உழ வனுமா மணியைப் பார்ப்பது?

சுவர்க்கடிகாரம்தான் நேரத்தைக் கணக்கிட்டு
ஒலிக்கும்
ஆனால் நானோ சுவர்க்கடிகாரமல்லவே!

—அபூஸனீஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக பலனைத்தரும் குறைந்தபட்ச மாற்றங்களே தமிழுக்குத் தேவை!

## தமிழ்எழுத்து முறையில் மாற்றங்கள் வரிவடிவ ஒழுங்காக்கம் - 2

வரி வடிவ மாற்றங்கள் பெருந்தொகையிற் செய்யப்பட்டால், அதனால் நட்டமே தவிர நயம் இல்லை. மாற்றங்கள் நடைமுறைக்கு இசைந்தனவாக இருக்கவேண்டும்; மொழிச் செயற்பாட்டின் விரைவையோ, திறனையோ கடுமையாகப் பாதிக்கும் அளவுக்கு மாற்றங்களைச் செய்யக்கூடாது. செய்யவும் இயலாது.

அப்படியானால் எவ்வித மாற்றங்களைச் செய்தல் வேண்டும்?

அதிகபட்ச பலனைத் தரும் குறைந்த பட்ச மாற்றங்களே நடைமுறைக்கு இசைந்தவை. இந்த வகையிலே பார்க்கும் போது, ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள பதின்மூன்று மாற்றங்களும் ஏற்கத்தக்கவையே. அவை பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| றா | னா | ணா | |
| லை | னை | ணை | ளை |
| றொ | னொ | ணொ | |
| றோ | னோ | ணோ | |

இவற்றால் விளையும் நன்மைகள்:-

(i) ரு, று, ணு, லை, னை, ணை, ளை ஆகிய எழுத்துக்களைப் பயன்பாட்டிலிருந்து நீக்கி விடலாம்;

(ii) தருக்கரீதியான பதின்மூன்று ஒழுங்கீனங்கள் இல்லாமற் போகின்றன.

(iii) ஏனைய பிற எழுத்து வடிவங்களோடு ஒத்துப் போவதால், ஊகத்தின் பேரிலேயே இவை என்ன எழுத்து என்று இனங்கண்டு கொள்ளலாம்.

### பழைமைக்குச் சார்பான நியாயங்கள்

'அரவு' நெடிலாக்கத்தை விட, 'கீழ்வால்' நெடிலாக்கந்தான் ற, ன, ண ஆகியவற்றுக்குப் பொருத்தமானது என்று அதற்கு நியாயம் காட்டுவோரும் சிலர் உள்ளனர்.

எடுத்துக்காட்டாக, ற, ன, ண என்பன கீழ் நோக்கிய நிலைக்குத்துக் கோட்டுடன் முடிகின்றன என்றும், ஆகையால், அவற்றுக்குக் கீழ்வாலே பொருத்தமான நெடிலாக்கம் என்றும் கூறுவார்கள். இது பொருந்தாது.

த, ந. ற என்பன மூன்றும், ஒரே வடிவமுள்ள முடிவிடத்தை உடையன. ஆனால் 'தா' போலவோ, 'நா' போலவோ அன்றி 'று' வேறு விதமாக அமைந்தது ஏன்? இந்தக் கேள்விக்கு வரலாற்று வழிப்பட்ட காரணம் இருக்கலாமே தவிர புத்திபூர்வமான வேறு நியாயம் இருத்தல் இயலாது.

அவ்வாறே, ன, ண, ள என்பன மூன்றும் ஒரே வடிவமுள்ள முடிவிடத்தை உடையன; ஆனால் 'ளா' என்ற எழுத்தும் று, ணு என்பன போலக் கீழ் வாலுடன் அமையாமற் போனது ஏன்? இதற்கும் புத்தி பூர்வமான காரணம் கூறுதல் இயலாது;

இனி, சங்கிலிக் கொம்பு எனப்படும் ஐகார உயிர்க்குறி ஆகிய 'ை' என்பதை நோக்குவோம்.

பழைய எழுத்து முறைப்படி லை, னை, ளை, ணை நான்கும் ஒருவிதமாய் அமைய ஏனைய ஐகார உயிர்மெய்கள் சங்கிலிக் கொம்பு பெறுகின்றன.

ல, ன, ள - மூன்றும் சுழியுடன் தொடங்குகின்றன. சுழியுடன் கொண்டு வந்து தொடுத்துத் தொடர்வதற்கு, சுருண்டு நிமிர்ந்த 'கொக்குக் கழுத்து' வடிவம் இதமாக இருந்தது போலும்! ஆனால் 'வை' என்பது 'லை' என்று அமையவில்லையே! அதற்குக் காரணம் கூற முடியாது.

ணகாரத்தைப் பொறுத்த வரை மற்றொரு நியாயம் சொல்லப்பட்டுள்ளது: 'ண' என்பதில் ஏற்கெனவே மூன்று சுழிகள் உள்ளனவாம். சங்கிலிக் கொம்பையும் சேர்க்க, 'னண' என்று வரும்போது ஐந்து சுழி ஆகிவிடுமாம். அதனாலேதான் 'ணை' என்று எழுதாமல், 'ணை' என்று சான்றோர்கள் எழுதினார்களாம். அப்படியானால், ஒரு சுழியையுடைய லகரத்தைப் பொறுத்தவரையில், 'லை' என்று எழுதாமல் 'லை' என்று எழுதியது ஏன்? இதற்கும் தகுந்த நியாயம் சொல்லுதல் இயலாது.

இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்ன?

பழைய நடைமுறைக்கு ஆதாரமாகச் சொல்லப்படும் நியாயங்களிற் பல, எழுந்தமானம் ஆனவை ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு மனம் போனவாறு சொல்லப்படுகின்றன.

கொக்குக் கழுத்துக் கொம்பிலோ, கீழ் வால் வளைவிலோ புனிதமான ஒன்றும் இல்லை. அவற்றைக் கைவிடுவதனால், தமிழ் மொழியின் தெய்வத் தன்மையோ செம்மை நலமோ சிதைந்து போய் விடாது.

'குடுமி வைக்காத ஒருவன் எப்படித் தமிழன் ஆவான்?' என்னும் ஐயப்பாட்டுக்கும், 'று, ணு, ரு' என்ற வடிவங்களைக் கைவிடுவது சரியா என்று கேள்வி கேட்பதற்கும் அதிக வித்தியாசம் இல்லை. குடுமி வைக்காதவனும் தமிழனாய் இருக்கலாம்; குடுமி வைத்தவன் தமிழன் அல்லாமலும் போகலாம். தமிழனின் சொரூப இலக்கணம் (எசென்ஷல் அற்-றிபியூற்) குடுமி அன்று. ஒரு காலத்துத்தமிழர் பலரின் தடத்த இலக்கணம் (அக்சிடென்ற்றல் அற்-றிபியூற்) தான் குடுமி.

எழுத்துகளின் பழைய வடிவக் கூறுகளும் அப்படிப் பட்டவையே. அவை அனைத்தும் சொரூப இலக்கணங்கள் அல்ல; இன்றியமையாத பண்புக்கூறுகள் அல்ல.

ஆகையாலேதான், நாம் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும்— 'றா, னா, லை' என்றெல்லாம் எழுதுவதனாலோ, அவற்றை வாசிப்பதனாலோ ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. இவ்வாறெல்லாம் செய்வதனால் நாமொன்றும் மீளா நரகத்துக்கு ஆளாகி விடமாட்டோம்.

மாறாக, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்னும் நெறி முறையைக் கடைப்பிடித்தோர் ஆவோம்.

இப்பொழுது தமிழகத்திற் செய்யப்பட்டுள்ள மாற்றங்களைத் தவிர வேறு மாற்றம் ஏதாவது விரும்பத் தக்கதா?

ஆம்.

அப்படியானால் அந்த மாற்றம் எது?

உகரக் குறில் உயிர் மெய்யும் ஊகார நெடில் உயிர் மெய்யுமே இப்பொழுது நாம் பரிசீலிக்க வேண்டியவை. அதாவது?

கு, சு, டு, து, பு, று
ங, ஞு, ணு, நு, மு, னு
யு, ரு, லு, வு, ழு, ளு
கூ, சூ, டூ, தூ, பூ, றூ
ஙூ, ஞூ, ணூ, நூ, மூ, னூ
யூ, ரூ, லூ, வூ, ழூ, ளூ

மேலே வந்த முப்பத்தாறு எழுத்துகளும் வெவ்வேறு விதமான உயிர்க்குறி கொண்டு ஆக்கப்பட்டவை. இவற்றினால் நேரும் தொல்லையோ மிகப் பெரிது.

'சி' என்ற எழுத்தில் வரும் 'விசிறி' யையும் 'சீ' என்ற எழுத்தில் வரும் சுருட்டையையும் கையாண்டு எழுதுவது போல உகரக் குறில் உயிர்க்குறி ஒன்றையும், ஊகார நெடில் உயிர்க்குறி ஒன்றையும் அறிமுகஞ் செய்து பயன்படுத்துதல் வேண்டும்.

இது பெரியார் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தொடக்கம் பற்பலரும் வற்புறுத்தி வரும் ஒரு யோசனையாகும்.

| உகரத் துணைக் குறி | ஊகாரத் துணைக் குறி | யோசனை தந்தோர் |
|---|---|---|
| [illegible] | [illegible] | ஈவெரா முதலானோர் |
| [illegible] | [illegible] | வ.கோவிந்தபிள்ளை |
| [illegible] | [illegible] | தமிழ் புலவர் குழு |
| [illegible] | [illegible] | கேரள அரசு |
| [illegible] | [illegible] | கொடுமுடி சண்முகம் |

இவற்றுள் பல பேரின் ஆதரவைப் பெற்ற குறிகள் ⁻, ൭ என்பனவாகும். இவற்றின் ஒரு குறைபாடு — இவை அதிக இடை அகலத்தை (ஹொறிசோன்ற்றல் விட்த்) எடுப்பன ஆகும்.

அத்துடன் இவை தமிழ்ப் பயன்பாட்டில் அதிகம் விரவி வராத ஸு, ஜூ முதலான கிரந்த எழுத்துக்களுடன் சேர்ந்தே வருவன ஆகும்.

வடமொழி பயிலும் தமிழ்ப் பார்ப்பனர்கள் வடமொழியை எழுதுவதற்கென்று உருவாக்கிக்கொண்ட கிரந்த எழுத்து முறையினின்றும் பெறப்பட்டவை இவை.

கிரந்த எழுத்துக்களின் வழி வந்தவை என்பது குறைபாடு அன்று.

தமிழர்களுக்கு அதிகம் பழக்கமில்லாத குறியீடுகளாகவே இவை உள்ளன, அதனாலேதான் யோசிக்க வேண்டி இருக்கிறது. ★

- முருகையன் -

# 'காற்றினிலே வரும் கீதம்' ஆக இன்றும் திகழும் 'எம். எஸ்'

தமிழ்நாடு தந்த இசை மேதை எம். எஸ். சுப்புலட்சுமி 16-09 1916 இல் பிறந்தார். தமிழிசைக்கு இன்றும் அரும் பணியாற்றி வரும் 'எம். எஸ்.' இன்று தனது 74 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு, மௌண்பேட்டன் தம்பதிகளுடன் 'பக்த மீரா' ஹிந்தி




படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

கிருஷ்ணபக்தையான மீராவின் கதை படமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

மீராவின் இனிய கீதங்களிலே சொக்கிப்போய்விடுகிறார் நேருஜி.

தன்னை மறந்த நிலையில் 'நான் யார்? நான் வெறும் பிரதம மந்திரி தானே! இந்த இசை உலக மகாராணிக்கு முன்னால்'—இப்படி நேருஜி கூறுகிறார்.

அந்த மகாராணி இன்றும் நம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். நாம் பாக்கியசாலிகள்.

அந்த மகாராணிக்கு இன்று 74 ஆவது பிறந்த தினம். அவர்தான் இசை மேதை எம். எஸ். சுப்புலட்சுமி.

தமிழில் வெளிவந்த 'பக்த மீரா'வில் எம். எஸ். சுப்புலட்சுமி பாடிய 'காற்றினிலே வரும் கீதம்' இன்றும் நம் காதுகளில் ரீங்காரம் செய்த வண்ணம் உள்ளது.

ஹிந்தி 'பக்தி மீரா'வில் அப்பாடல் 'யாட் அவே' என்று வருகிறது. இரண்டு மொழிகளிலும் 'எம். எஸ்'ஸே மீராவாக நடித்து அகில இந்தியப்புகழ் பெற்றார்.

'எம். எஸ்.'- என்ற சொற்கள் எதனைக் குறிக்கிறது?

மதுரை, அவர் பிறந்த இடம்; சண்முகவடிவு, அவரின் தாயார் பெயர். இரண்டிலும் உள்ள ஆங்கில எழுத்துக்கள் 'எம். எஸ்.' ஆகிய தமிழுலகிற்கு ஈடு இணையற்ற 'எம். எஸ்.'ஸைத் தந்தது.

காந்திஜியின் மனைவி கஸ்



எம். எஸ்' சுப்புலக்ஷமி

தூரிபா நினைவாக ட்ரஸ்ட் ஒன்று நிறுவப்பட்டது. அதற்கு நிதி சேர்க்க இசைக் கச்சேரி ஒன்று நடத்தி உதவும்படி ராஜாஜி திருமதி சுப்புலட்சுமியைக் கேட்டுக் கொண்டார்.

அன்றே இசையை பொதுச் சேவைக்குப் பயன்படுத்தும் 'எம் எஸ்.'ஸின் பணி ஆரம்பமானது.

'எம். எஸ்.ஸின் பணியைப் பாராட்டி காந்திஜியே தனது கைப்பட கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதத்தில் காந்திஜி தமிழில் கையொப்பமிட்டிருந்தார்.

காந்திஜி கொல்லப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் எம். எஸ். தனது கணவர் சதாசிவத்துடன் பிர்லா மாளிகை சென்று அண்ணலைச் சந்தித்தார்.

அன்று மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி 'சுப்புலட்சுமி! ராம் தன் பஜனையை நீங்களே இன்று பாடுங்கள்'- என்றுபேர கேட்டுக்கொண்டார்.

மறைந்த முசிரி சுப்பிரமணிய ஐயர், செம்மங்குடி ஆ.ர் சீனிவாசஐயர் ஆகிய இசைமேதைகளிடம் 'எம். எஸ்.' கர்நாடக சங்கீதத்தைப் பயின்றார்.

ஹிந்தி, குஜராத்தி, வங்காளம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் இசைக்கச்சேரிகளைச் செய்துள்ள 'எம். எஸ்' இன்று இந்தியாவின் 'கவிக்குயில்' ஆகிவிட்டார்.

1954 இல் ஜனாதிபதி விருது வழங்கும் நடைமுறை ஆரம்பித்தது. அந்த ஆண்டே 'எம். எஸ்.'ஸுக்கு பத்ம பூஷண் விருது கிடைத்தது. 1956 இல் சங்கீத நாடக அக்கடமி விருதும். 1968 இல் சங்கீத கலாநிதி விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

கடைசியாக இந்த ஆண்டு மே மாதம் இந்திய அரசு இவருக்கு தேசிய ஆராய்ச்சிப் [illegible] பட்டத்தை வழங்கிக்கௌரவித்தது.

1974 இல் ராம்சே மக்ஸேயே விருதைப்பெற்ற இவருக்கு 1975 இல் பத்மவிபூஷண் விருதை இந்திய அரசு வழங்கியது.

'எம். எஸ்.' பல நாடுகளுக்குச் சென்று கர்நாடக சங்கீதத்தின் பெருமையை நிலைநாட்டி உள்ளார். அதன் உச்சக்கட்டமாக அமைந்தது. 1966 இல் ஐ. நா. பொதுச் சபையில் அவர் இசை விருந்து அளித்த சம்பவம் தான்.

பத்து வயதில் 'எம். எஸ்.' பாடிய பாடல் எச். எம். வி. இசைத்தட்டாக வெளியிடப்பட்டது. 13ஆவது வயதில் பிரபல வீணை வித்துவாட்டியாக இருந்த தனது தாயார் சண்முகவடிவுக்கு துணையாக பாடி வந்தார்.


கடந்த அறுபது ஆண்டுகளாக இசைப்பணி புரிந்து வரும் 'எம். எஸ்.' இன்றும் தனது கானாமிர்த குரலால் 'இசையுலக மகாராணி'யாக வாழ்கிறார். அவர் நீடூழி வாழ்க என்று வாழ்த்துகிறோம். ★

- மானியூர்

சி: குமாரசாமி எம்.ஏ -

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 107



சொற்சிலம்பம் இல: 106
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 27 - 09 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. இளவேனில் காலம், 7. தலையெழுத்தை இப்படிக் கூறுவர், 8. இது இல்லாமல் சோறு...? 9. பொருத்தம், 11. சமையலுக்கு வேண்டியது குழம்பி உள்ளது. 13. ஒருவகைச் செடி தலைகீழாகவுள்ளது, 14. பிரபலமான வீணைவித்துவான், 16. ஆழமான கிடங்கு, 18. வெறுப்பு, 20. ஒருவகை வாத்தியம், 21. நடுங்கு.

**மேலிருந்து கீழ்:**

1. பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு கொடுப்பது, 2. காய்ந்த இலைகள், 3. இல்லாமல் வருந்துதல், 4. திருகாணி முறுக்கும் கருவி குழம்பியுள்ளது. 5. புத்தி தலைகீழாகவுள்ளது.
8. விரைவாக, 10. பெரிய கதவின் சிறு நுழை வாயில் 12. பறவை, 15. நிந்தனைசெய், 17. ஒளிக்கீற்று, 18. குரங்கு, 19. பூமி.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

## வளர்ச்சி

ஐம்பது ரூபாக் கடனை
ஐந்தாறு நாளில் தந்து
ஐந்நூறு ரூபா பெற்று
அதனையும் விரைவில் தந்து
ஐம்பது நாளில் பணத்தைத்
தருவதா யெனது நண்பர்
ஐந்தா யிரத்தைப் பெற்றார்!
ஐந்தாண் டாய்த் தேடுகின்றேன்.

— முருகு

## ஓ! மனிதர்களே!!

மண்ணிற் கலந்து உறையும்
எண்ணற்ற லோகங்கள் அல்ல
நீவிர் - ஓ மனிதர்களே!

கண்ணிற் தெரிந்து நிற்கும்
சணக்கற்ற தாவரங்களுமல்ல
நீவிர் - ஓ மனிதர்களே!

ஐயறிவு நாலறிவு கொண்ட
மிருகங்களும் பறவைகளுமல்ல
நீவிர் - ஓ மனிதர்களே

ஆறறிவு என்னும் பேரறிவு
படைத்த நீவிர் மனிதர்கள்
ஓ மனிதர்களே நீவிர் மனிதர்கள்!

இதயத்தொடு வாழும் இனிய
பிறப்புக்கள் நீங்கள்
வெறும் பிம்பங்கள் சிலைகளல்ல
உள்ளம் வளர்ந்து பெரும்
தெய்வீக நெறிகாணும் மனிதர்களும் நீவிரே!

உங்களிதயங்களில் அன்பு இரக்கம் - நேசம் - மனித நேயம் என்றும் நிறையட்டும் ஓ மனிதர்களே உங்கள் உள்ளம் சிறக்கட்டும் உலகம் ஒரு சமாதான மண்டலமாகட்டும்.

— சிங்கையாழியான் —

## எந்தை - நுந்தை தந்தை

தமிழில் பெற்றவனைக் குறிக்கத் 'தந்தை' என்ற சொல்லை வழங்குகிறோம். 'எங்கள் தந்தையர் நாடு' என்பது பாரதிவாக்கு. அவரே 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய நாடு' என்றும் பாடியுள்ளார்.

தன்மையில் எந்தை என்றும் முன்னிலையில் நுந்தை என்றும் படர்க்கையில் மட்டுமே தந்தை என்றும் மூன்று இடங்களுக்கும் தனித்தனியே வழங்கிய காலங்கள் உண்டு.

இன்று என் தந்தை, உன் தந்தை என்று தந்தையைப் பொதுவாக்கியே வழங்குகிறோம்.

யாய் (என் தாய்), ஞாய் (உன் தாய்), தாய் (அவன் தாய்) எனத் தனித்தனியே வழங்கிய நிலைமாறி, தாய் பொதுவாகியிருப்பதும் இது போன்ற மாற்றமேயாகும்.

'யாயும் ஞாயும் (என் தாயும் உன் தாயும்) யாராகியரோ, எந்தையும் நுந்தையும் (என் தந்தையும் உன் தந்தையும்) எம்முறைக் கேளிர்?' என்ற குறுந்தொகை வழக்கு (4) இன்று மாறியிருப்பதை நாம் தெரிந்துவைப்பது நல்லதுதானே?

- தமிழண்ணல்

## அழைப்பு!

ஓ! மானிடரே,
நீங்கள் கற்றறிய
மறந்துவிட்ட
பாடம் ஒன்றினிலே
சிறப்புப் பட்டம் பெற்றுள்ள
எம்மினத்தில் சிலர்,
உங்கள் எதிர்கால வாழ்வு
சிறப்புற்றோங்க,
சேவை மனப்பான்மை
கொண்டிங்கே,
இலவசமாகவே
நடத்தவிருக்கும்
அப் பாட வகுப்புகளிற்கு
சமுகம் தந்திடுவீரென
அழைப்பு விடுத்திடும்
''நாங்கள்''
வேறு யாருமல்ல,
என்றும் உங்கள்
அன்புக்குரிய
''காக்கை'' இனம்தான்.

—ஆவரங்கால்
கி. செல்வராசா.

## அமைதி வேண்டி

இறைவா! நான்
மலைக்கும் மடுவிற்கும்
சம உரிமை
கேட்கவில்லை
என்...
ஏழ்மைக்கும் எளிமைக்கும்
அந்தஸ்துதானும்
கேட்கவில்லை
என்...
உடலுக்கும் உயிருக்கும்
உத்தரவாதமும்
கேட்கவில்லை
நான் வேண்டும்
ஒன்றே! ஒன்று
என்...
உள்ளம் இருக்கும் வரை...
[illegible]

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்சன் கல்விநிலையம்
தெல்லிப்பழை.
O/L DAY CLASS
நடைபெறுகின்றன.
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன், மதி
தமிழ் — திரு. கணேஷ்
ஆங்கிலம் — திரு. M.A. ஹரிதாஸ்
சமூகக்கல்வி — திரு. V. S. R.
வர்த்தகம் — திரு. வரதன்

சஞ்சீவி
சஞ்சிகை
16 - 09 - 1989 சனிக்கிழமை

தான்சன் கல்விநிலையம்
கே. கே. எஸ்.ரோட், தெல்லிப்பழை
91 A/L வகுப்புகள்
நடைபெறுகின்றன.
பொருளியல் — திரு. சண்
அளவையியல் — திரு. சயந்தன்
வர்த்தகம் — திரு. சிவா
கணக்கியல் — திரு. யோகராஜா
தமிழ் — திரு. கணேஷ்
இந்துநாகரீகம் — திரு. M. R.
அரசியல் — திரு. செபராஜா

# கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே பெருகி வரும் அகதிகள் பிரச்சினை

## நூற்றுக்கணக்கானோர் எல்லை கடப்பது நாளாந்த நிகழ்ச்சி

கிழக்கு ஐரோப்பாவிலே இன்று ஒரு 'தர்மயுத்தம்' நடைபெற்றுவருகிறது. தமது சொந்த நாட்டிலிருந்து வெளியேறிய கிழக்கு ஜேர்மன் மக்கள் மேற்கு ஜேர்மனிக்குள் செல்வதற்கு ஹங்கேரி எடுத்த நடவடிக்கைகளையே இங்கு 'தர்மயுத்தம்' என்று குறிப்பிடுகிறோம்.

இன்று ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மன் மக்கள் ஹங்கேரி எல்லையைக் கடந்து நடுநிலைமை நாடான ஆஸ்திரியா (Austria) ஊடாக மேற்கு ஜேர்மனியை அடைந்துள்ளனர்.

கடந்த மே மாதம் வரை இரும்புத் திரையின் அடையாளமாக எஞ்சி இருந்த—, பலத்த பாதுகாப்புக்கள் நிறைந்த - ஹங்கேரி எல்லை, கடந்த ஞாயிறு நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் தற்காலிகமாகத் திறந்துவிடப்பட்டிருக்கிறது

ஆஸ்திரியாவுடனான தனது எல்லையை ஹங்கேரி திறந்துவிடுவதற்கு முன்னர் ஹங்கேரியில் அமைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாம்களில், சுமார் 6500 கிழக்கு ஜேர்மன் அகதிகள் மேற்கு ஜேர்மன் செல்லும் அனுமதியை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். இவர்களைவிட சுமார் 65 ஆயிரம் கிழக்கு ஜேர்மன் உல்லாசப் பயணிகளும் ஹங்கேரியில் தங்கி இருந்தனர்.

அகதிகள் பிரச்சினை தொடர்பாக கிழக்கு ஜேர்மன் அரசுடன் ஹங்கேரி பேச்சு நடத்தியது. இப்பேச்சுக்கள் பயனளிக்காதகட்டத்திலேயே எல்லையைத் திறந்து விடும் நடவடிக்கையை ஹங்கேரி எடுத்தது.

ஹங்கேரியில் தங்கியுள்ள கிழக்கு ஜேர்மன் உல்லாசப் பயணிகளும் விரும்பினால் ஹங்கேரி எல்லையைக் கடந்து செல்லலாம் என்று ஹங்கேரி அறிவித்துள்ளது.

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி

ஞாயிறு நள்ளிரவுக்குப்பின் எல்லை திறக்கப்பட்டபோது கிழக்கு ஜேர்மன் அகதிகள் கார்களிலும், லொறிகளிலும், கால்நடையாகவும் பெரும் மகிழ்ச்சிப்பிரவாகத்துடன் ஹங்கேரி எல்லையைக் கடந்தனர் என்றும் முதல் 15 நிமிடங்களில் மட்டும் கிழக்கு ஜேர்மன் உற்பத்திகளான 300 சிறிய மொடல் கார்கள் வரை எல்லையைக் கடந்து ஆஸ்திரியாவுக்குள் சென்றன என்றும் செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அகதிகள் ஆஸ்திரியா மார்க்கமாக மேற்கு ஜேர்மனியை அடைகின்றனர். ஆஸ்திரியா தனது விசா முறையை இதற்காகத் தளர்த்தியுள்ளது.

ஹங்கேரி எல்லையைக் கடக்கும் அகதிகளுக்கு வழிகாட்டும் பணியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் தொண்டர் ஸ்தாபனங்களும் ஈடுபட்டுள்ளன.

அகதிகளுக்கான உணவு வகைகளையும் அவர்கள் மேற்கு ஜேர்மனியின் எல்லை நகரான பாஸோ (Passau) நகரைச் சென்றடையக்கூடிய வரை படங்களையும் செஞ்சிலுவைச் சங்கம் எல்லையில் வைத்து அகதிகளுக்கு விநியோகித்து வருகிறது.

சுமார் 15 ஆயிரம் கிழக்கு ஜேர்மன் அகதிகளைப் பராமரிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட்ஹோல் தனதுநாட்டின் பதினொரு மாநிலங்களுக்கு உத்தரவிட்டுள்ளார். ஆளும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைவராக மேலும் இருவருடகாலத்துக்கு ஹெல்மட்ஹோல் இவ்வாரம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

### எல்லைநாடுகள்

கிழக்கு ஜேர்மனியும் - மேற்கு ஜேர்மனியும் அருகருகே எல்லைகளைக் கொண்டவை. ஆனால் இந்த எல்லைகளை நெருக்க முடியாது. இந்த எல்லையை நெருங்கும் எவரும் கிழக்கு ஜேர்மனியின் எல்லைப் பாதுகாவலரிடம் இருந்து தப்பமுடியாது.

இதனாலேயே கிழக்கு ஜேர்மன் மக்கள் சுற்றுவழிகளில் அதாவது செக்கோஸ்லாவேகியா - ஹங்கேரி - ஆஸ்திரியா மார்க்கமாக மேற்கு ஜேர்மனியை அடைகிறார்கள்.

செக்கோஸ்லாவேகியா, ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி ஆகியவை வார்ஸோ ஒப்பந்த நாடுகள் ஆகையால் ஒரு நாட்டு மக்கள் மற்றொரு நாட்டுக்குள் நுழைவதற்கு பெரிய கட்டுப்பாடுகள் கிடையா. ஆனால் வார்ஸோ ஒப்பந்த நாடுகளுக்குப் புறம்பான மூன்றாவது நாடு ஒன்றுக்குள் செல்வதற்கு எந்த ஒரு நாடும் அனுமதி அளிக்க முடியாது. ஏற்கனவே இது தொடர்பான 20 வருட கால ஒப்பந்தம் ஒன்று கிழக்கு ஜேர்மனிக்கும் ஹங்கேரிக்கும் இடையில் இருந்து வருகிறது.

### கிழக்கு ஜேர்மனி குற்றச்சாட்டு

இதனாலேயே இந்த விவகாரம் ஹங்கேரிக்கும் கிழக்கு ஜேர்மனிக்கும் இடையில் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

கிழக்கு ஜேர்மன் அகதிகள் மேற்கு ஜேர்மனி செல்ல வழி திறந்துவிட்டதன் மூலம் தனது உள்நாட்டு விவகாரத்தில் ஹங்கேரி தலையிடுவதாக கிழக்கு ஜேர்மன் அதிபர் எரிச் ஹொனெக்கெர் (76வயது) குற்றம் சாட்டிவருகிறார்.

பெரெஸ்ரொய்கா (Perestroika) எனப்படும் சீர்திருத்தக்கொள்கையின் கதாநாயகனாக விளங்கும் சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் இந்தத் தகராற்றில் பகிரங்கமாக எந்த ஒரு நாட்டையும் ஆதரிக்கவில்லை.

ஆனால் சோவியத் யூனியனின் ஆசி இல்லாமல் அகதிகள் தொடர்பான இந்த நடவடிக்கையை ஹங்கேரி எடுத்திருக்கமாட்டாது என்றே கருதப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் சீர்திருத்தக் கொள்கைகளை எதிர்க்கும் இருநாடுகளில் கிழக்கு ஜேர்மனியும் ஒன்று. மற்றைய நாடு நிக்கொலாய் செசுக்கு (Nicolae Ceausescu) தலைமையிலான ரூமேனியா.

சுமார் கால் நூற்றாண்டாக ஆட்சியில் இருந்துவரும் ரூமேனியாத் தலைவர், ரூமேனியா வார்ஸோ ஒப்பந்த நாடுகள் அமைப்பில் இருந்த போதிலும், சுதந்திரமான வெளிநாட்டுக்கொள்கைகளைக் கடைப்பிடித்துவருகிறார்.

### நாடுகள் படை

1968 ஆம் ஆண்டு வார்ஸோ ஒப்பந்த நாடுகள் படை செக்கோஸ்லாவேக்கியாவுக்குள் அனுப்பப்பட்டபோது ரூமேனியா அந்த நடவடிக்கையை எதிர்த்தது. 1967 ஜூன் மத்திய கிழக்கு யுத்தத்தை அடுத்து சோவியத் யூனியன் உட்பட கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அத்தனையும் இஸ்ரவேலுடனான ராஜீய உறவைத் துண்டித்தபோது ரூமேனியா தொடர்ந்து உறவை வைத்துக்கொண்டது.

சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்ப்பச்சேவைப் பொறுத்தவரை தமது சீர்திருத்தக்கொள்கைமூலம் வார்ஸோ ஒப்பந்த நாடுகள் அமைப்பு பிளவுபடுவதை அவர் விரும்பவில்லை.

சோவியத்யூனியன் கிழக்கு ஜேர்மனியை ஐரோப்பாவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாகக் கருதுகிறது. அதனால் கிழக்குஜேர்மனியில் ஸ்திரமான ஓர் ஆட்சியையே சோவியத் யூனியன் எதிர்பார்க்கிறது.

### யுத்தத்தின் பின்

இரண்டாவது உலக மகா யுத்தம் வரை ஜேர்மனி ஒரே நாடாக இருந்தது. இந்த யுத்தத்தில் ஜேர்மனி தோல்வி அடைந்தது.

யுத்தத்தில் ஜேர்மனிக்கு எதிராகப் போரிட்ட நேச நாடுகளான சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளும் தமக்குள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு ஜேர்மனியைத் துண்டாடின.

சோவியத்யூனியனின் பகுதி கிழக்கு ஜேர்மனியாக (ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு) உருவெடுத்தது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கட்டுப்பாட்டில் விடப்பட்ட பகுதிதான் தற்போதைய மேற்கு ஜேர்மனி (ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு)

யுத்தத்தின் பின் கிழக்கு ஜேர்மனி வார்ஸோ ஒப்பந்த நாடுகள் அமைப்பில் இணைக்கப்பட்டு சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இதற்குப் புறம்பாக மேற்கு ஜேர்மனியில் சுதந்திரமான ஆட்சிக்கு மேற்கண்ட 3 நாடுகளும் வழிவகுத்துக் கொடுத்திருந்தன.

கிழக்கு ஜேர்மனியிலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறுவது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. நீண்டகாலமாக இது இருந்து வருகிறது.

### பேர்லின் சுவர்

1961 ஆம் ஆண்டு வரை கிழக்கு ஜேர்மன் அகதிகள் கிழக்குப் பெர்லினில் இருந்து மேற்குப் பெர்லினுக்குள் சென்று அங்கிருந்து மேற்கு ஜேர்மனியை அடைந்தனர்.

இதனை நாட்டின் கௌரவப் பிரச்சினையாகக்கருதிய கிழக்கு ஜேர்மன் அரசாங்கம் 1961 இல் கிழக்குப் பெர்லின் எல்லையில் முட்கம்பி வேலிகளை அமைத்து இதனைத் தடை செய்தது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் ஜேர்மனி துண்டப்பட்ட போது அதன் தலைநகரான பெர்லினும் கிழக்குப் பெர்லின் — மேற்குப் பெர்லின் என்று துண்டப்பட்டது. ஆனால் கிழக்கு ஜேர்மன் எல்லைக்குள் பெர்லின் இருப்பதால் மேற்குப் பெர்லினில் இருந்து மேற்கு ஜேர்மனி வருவதற்கு ஓட்டோ பான்ஸ் என்று அழைக்கப்படும் வெகு வேகப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### தோல்வி அடைந்த பொருளாதாரக் கொள்கை

கிழக்கு ஜேர்மன் மக்கள் பெரும் அளவில் மேற்கு ஜேர்மனி செல்வதற்கு கிழக்கு ஜேர்மன் அதிபர் எறிச் ஹொனெக்கரின் தோல்வி அடைந்த பொருளாதாரக் கொள்கையே காரணம் என்று கூறப்படுகிறது.

கிழக்குஜேர்மனியில் இருந்து வரும் அகதிகளை மேற்கு ஜேர்மனி மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. அகதிகள் வருகையைத் தனது நாட்டுக்கு ஒரு கௌரவமாக மேற்கு ஜேர்மனி கருதுகிறது.

### பல்கேரியாவில்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பல்கேரியாவும் அகதிகள் பிரச்சினையை எதிர் நோக்கி இருக்கிறது. ஆனால் பல்கேரியாவில் இருந்து வெளியேறுவோர் சிறுபான்மை துருக்கி இனத்தவர்களே.

கடந்த மே மாதம் துருக்கி இனத்தவர்கள் பலர் பல்கேரியாவில் கொலை செய்யப்பட்டதை அடுத்து இதுவரை 3 லட்சம் துருக்கியர்கள் பல்கேரியாவில் இருந்து அகதிகளாக வெளியேறித் துருக்கியை அடைந்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டு துருக்கி மொழியைப் பயன்படுத்துவதற்குப் பல்கேரிய அரசு தடைவிதித்திருந்தது. துருக்கியப் பள்ளிவாசல்கள் மூடப்பட்டன. துருக்கிய வானொலி ஒலிபரப்புக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது ஹங்கேரி நோக்கி வரும் அகதிகளில் பல்கேரியர்களும் அடங்கி உள்ளனர். ஹங்கேரி வருபவர்களில் ரூமேனியர்களும் பெரும் அளவில் உள்ளனர்.

260 மைல் நீள ரூமேனிய ஹங்கேரி எல்லையைத்தாண்டி ரூமேனியர் ஹங்கேரிக்குள் வருகிறார்கள். இவர்களின் நோக்கம் மேற்கு ஜேர்மனிக்குள் செல்வது அல்ல.

தற்போது சோவியத் யூனியனின் சீர்திருத்தக்கொள்கைகளைப் பின்பற்றும் ஹங்கேரிக்குள் வளமான எதிர்காலத்தை ஸ்தாபிப்பதே.

கடந்த 2 ஆண்டுகளில் 30 ஆயிரம் ரூமேனியர்கள் ஹங்கேரிக்குள் நுழைந்துள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ரூமேனியாவிலிருந்து மக்கள் வெளியேறுவதற்கு அதிபர் நிக்கொலாய் செசுக்குவின் கொள்கைகளே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பாவின் நவீன ஸ்ராலினாக செசுக்கு தற்போது கருதப்படுகிறார்.

புதிய சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் அவரின் மார்க்சிய லெனினிச திட்டங்களில் ஒன்றுதான் கிராமங்களை அழித்து ஏற்றத்தாழ்வு அற்ற பெரிய தொடர் மாடிக் கட்டடங்களை அமைக்கும் 14 வருடத் திட்டம் ஆகும்.

இத்திட்டம் செயற்படுமானால் ரூமேனியாவின் 14 ஆயிரம் கிராமங்களில் அரைவாசிக் கிராமங்கள் அழிக்கப்பட்டு விடும். ரூமேனியாவின் 2கோடி 30 லட்சம் மக்களில் அரைவாசிப்பேர் இதன் மூலம் குடி எழும்ப நேரிடும்.

கிராமங்களை அழித்துவிட்டு 500 விவசாயக் கைத்தொழில் தொடர்மாடி நிலையங்களை (Prefab agro Industrial Centres) அமைக்கும்போது பாரம்பரிய கிராம வாழ்க்கைமுறை, தேவாலயங்கள், நகரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விடும் என்று அஞ்சப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள அகதிகள் பிரச்சினை அங்கு உருவாகி வரும் அரசியல் மாற்றங்களின் எதிரொலியே என்று கருதப்படுகிறது. சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்கள் முழு கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்படும் வரை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சித்தாந்த ரீதியில் பிளவுபடும் நிலை இருந்து வருகிறது.

★

உலக உலா
என்.பி.சீலன்

# சபதத்தை நிறைவேற்றிய டொனல்ட் பிராட்மன்

சேர் டொனல்ட் பிரட்மன், ஆஸ்திரேலியாவின் தலைசிறந்த வீரர்.

கிரிக்கெட் உலகில் தனி இடத்தைப் பெற்றவர் அவர்.

பிரட்மனின் பெயரை, பெயர்ச்சொல்லாக எடுத்துக்கொண்டோமானால் ரன்மெஷின் பந்து வீச்சாளர்களை பயப்படச் செய்பவர், கிரிக்கெட்டின் காவியம் என்று பொருள் கொள்ளலாம்.

அதையே வினைச்சொல்லாக எடுத்துக்கொண்டால் சகிப்புத்தன்மை, அபாரதிறமை, தைரியம், அடக்கம், எளிமை, எதிர்ப்புக்களைத் தாங்கும் சக்தி என்று பொருள் கொள்ளலாம்.

டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்று 40 ஆண்டுகள் ஆகியும் அவரது பெயர் இன்னமும் நிலைபெற்றுவிளங்குகிறது. அவரது சில சாதனைகளே முறியடிக்கப்பட்டன.

திரு. பிரட்மன் தன்னைப் பற்றிய நூல் ஒன்றுக்குத் தான் எழுதிய முகவுரையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"எனது 13ஆவது வயதில் என்னைப்பற்றி 'ஸ்மித்ஸ் வீக்லி' என்று சிட்னியில் இருந்து வெளியாகும் பத்திரிகையில் செய்தி ஒன்றுவெளியாகி இருந்தது.

அந்த புத்தகத்தில் மற்ற புத்தகங்களில் காணமுடியாத அம்சங்கள் இருந்ததால் என் தந்தை அதைத்தவறாமல் வாங்குவார்.

அந்த குறிப்பிட்ட புத்தகத்தில் எனது பெயர் இடம் பெற்றிருந்ததை முதன் முதலில் கண்டுபிடித்தது என் தாயார் தான்.

பிரட்மன் என்ற பைத்தியக்காரன் கையில் துடுப்புடன் மிக அசிங்கமாக விளையாடினான் என்று அந்தச் செய்தி என்னை விமர்சித்திருந்தது.

அன்று முதல் நான் என் வாழ்க்கையை கிரிக்கெட்டிற்காக அர்ப்பணித்துக்கொள்ள முடிவு செய்து ஒரு சிறந்த வீரராவேன் என்று என் தாயிடம் சபதம் செய்தேன்!!—

பிரட்மன் தான் கூறிய சபதத்தை வெற்றிகாரமாக நிறைவேற்றி விட்டார்.

தனது சபதத்திற்கும் ஒரு படி உயரச் சென்று எட்டிப் பிடிக்க முடியாத சாதனைகளின் சிகரமாகி விட்டார்.

★

# ஆஷஸ் கிண்ணத்தைப் பெற்ற ஆஸ்திரேலிய அணியின் சாதனை

அண்மையில் இங்கிலாந்தில் முடிவடைந்த ஆறு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் நான்கு போட்டிகளில் வெற்றிபெற்றதன் மூலம் ஆஸ்திரேலிய அணி ஆஷஸ் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மழை, போதிய வெளிச்சமின்மை போன்ற காரணங்களினால் ஏனைய இருபோட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இறுதி டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவும் சாத்தியக் கூறுகள் தென்பட்டதாயினும் இங்கிலாந்து வீரர் றொபின் ஸ்மித்தின் அபார ஆட்டமும், காலநிலையும் இங்கிலாந்து அணியை 5-0 என்ற தோல்வி நிலையிலிருந்து பாதுகாத்தது.

றொபின் ஸ்மித் ஆட்ட நேர இறுதியின் போது 77 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிளக்காது இருந்தார்.

**- எஸ். இளங்கோ -**

ஆரம்பத்திலிருந்தே தனது அபாரப் பந்து வீச்சினால் இங்கிலாந்து அணியை நிலைகுலையச் செய்தவர் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பப் பந்துவீச்சாளர் டெரி அல்டர்மன்.

இவர் இப்போட்டித் தொடரில் 6 தடவைகள் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதிப்போட்டியில் மொத்தமாகப் பெற்ற ஏழு விக்கெட்டுக்களுடன் அல்டர்மன் இப்போட்டித் தொடரில் 41 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இது சிலர் 1981ஆம் ஆண்டு நிலைநாட்டிய ஆஷஸ் கிண்ணப் போட்டித் தொடரில் அல்டர்மன் 42 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிச் சாதனை புரிந்திருந்தார்.

உலக டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் போட்டித் தொடர் ஒன்றின்போது 40 விக்கெட்டுகளுக்குமேல் இரண்டு தடவைகள் கைப்பற்றும் முதலாவது வீரராக விளங்கும் டெரி அல்டர்மன் இப்போட்டித் தொடரின் சிறந்த ஆஸ்திரேலிய வீரராகவும், பந்துவீச்சாளராவும் தெரிவு செய்யப்பட்டார்.

இங்கிலாந்து அணியின் விக்கெட் காப்பாளரான ஜக் றசல் இப்போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியின் சிறந்த வீரராகவும், நீல பொஸ்டர் அணியின் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்டீவ்வோ தெரிவு செய்யப்பட்டார்.

இவர் துடுப்பெடுத்தாடிய எட்டு இன்னிங்சில் நான்கு தடவைகள் ஆட்டமிழக்காதிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக அலன் லாம்ப் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆஸ்திரேலிய அணியினர் இப்போட்டித் தொடரில் 12 வீரர்களை மாத்திரமே பயன்படுத்தினார்கள். எனினும் இங்கிலாந்து அணியினர் 29 வீரர்களை இத்தொடரில் பயன்படுத்தினார்கள்.

இங்கிலாந்து அணித்தலைவர் டேவிட் கவர், விக்கெட் காப்பாளர் ஜக் றசல் ஆகிய இருவர் மட்டுமே இப்போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியின் சார்பாக ஆறு போட்டிகளிலுமே கலந்து கொண்டவர்களாவர்.

(எ-6)

விளையாட்டுத் துறை

## சொற்சிலம்பம் இல: 106

பரிசு பெற்றவர்கள் விவரம்

**முதலாவது பரிசு:**
பா. முருகதாஸ், 8/1, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**இரண்டாவது பரிசு:**
திருமதி கு. தவரஞ்சிதமலர் "ரஞ்சி இல்லம்" கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**மூன்றாவது பரிசு:**
செல்வி. சந்திரிகா சோமசுந்தரம், பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை.

**சொற்சிலம்பம் இல. 106 சரியான விடைகள்**

**மேலிருந்து கீழ்**
1. கதிர்காமம் 6. பாரதி, 7. கதி 8. கர்ணன் 9. விசனம் 11. அறு 14. பயம் 17. விளம்பு 18. கடம் 19. அலை 21. கலம் 22. கரும்பு.

**இடமிருந்து வலம்**
1. கரடிவத்தை 2. திதி 3. பார் 5. விதி 7. கன்று 8. கம்பளம் 10. சகி 12. அரசு, அலரி 16. அரும்பு 17. விடம் 18. கல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org